

நிறுவனர்: ப. ஜீவானந்தம்

புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வாரஇதழ்

மலர் 86 | 2023 ஆக. 13 - ஆக. 19 | விலை: ரூ.15 | 16 பக்கங்கள் | இதழ் 19





## ஒன்றிய அரசின் ஜனநாயக விரோத கொள்கைகளுக்கு எதிராக

# சென்னையில் பெருந்திரள் எழுச்சி!

**டெல்லியில் நடைபெற்ற தொழிலாளர்களின் தேசிய மாநாடு விடுத்த அறைகூவலை ஏற்று, ஆகஸ்ட் 9 அன்று சென்னையில் தொழிலாளர்களின் பெருந்திரள் போராட்டம் நடைபெற்றது.**
















மோடி அரசாங்கத்தின் தொழிலாளர் ஊரக மக்கள் விரோத தேச விரோத கொள்கைகளைக் கண்டித்து ஆகஸ்ட் 9ஆம் தேதி, இந்தியா முழுமையிலும் அனைத்து மாநில தலைநகரங்களிலும் பெருந்திரள் அமர்வு போராட்டம் நடத்துமாறு, அனைத்து மத்திய சங்கங்களும் வங்கி காப்பீடு தொலைபேசி உள்ளிட்ட தொழில்வாரி சம்மேளனங்களும் அழைப்பு விடுத்திருந்தன.

அதற்கு இணங்க, சென்னை, எழும்பூர், ராஜரத்தினம் ஸ்டேடியம் அருகே ஆகஸ்ட் 9 காலை பெரும் திரள் அமர்வு தொடங்கியது.

இந்தப் போராட்டத்தில் தமிழ்நாடு முழுவதும் இருந்து தொழிலாளர்கள் திரண்டிருந்தனர்.

தொமுச பொருளாளர் கி. நடராஜன், இணைச் செயலாளர் சுகுமாரன், ஏஐடியூசி தேசிய செயலாளர்கள் டி.எம். மூர்த்தி, வகிதாநிஜாம். மாநிலத் தலைவர் எஸ்.காசிவிஸ்வநாதன், பொதுச்செயலாளர் ம.இராதாகிருஷ்ணன், சிஐடியு மாநிலத் தலைவர் அ.சவுந்தரராசன், பொதுச்செயலாளர் ஜி.சுகுமாரன், ஹேமலதா, ஏ.கே.பத்மநாபன், எச்எம்எஸ் தேசியத்தலைவர் க.அ.ராஜாஸ்ரீதர், மாநிலத் தலைவர் மு.சுப்பிரமணியன், சுப்பிரமணிய பிள்ளை, ஐஎன்டியூசி வீ.கா. நல்லமுத்து, டி.வி.சேவியர், ஏஐசிசிடியூ ஜி.ஞானதேசிகன், சங்கரபாண்டியன், ஏஐயுடியுசி அனவரதன், சடையாண்டி, உழைக்கும் மக்கள் தொழிற்சங்க மாமன்றத் தலைவர் இரா.குசேலர், துணைத்தலைவர் ஆர்.சம்பத், எம்எல்எப் மாநிலச் செயலாளர் அந்திரிதாஸ், வெங்கடேசன், எல்எல்எப் மாநிலச் செயலாளர் பேரறிவாளன், டியுசிசி மாநிலச் செயலாளர் ஆர். திருப்பதி, மோகன், எல்டியுசி ஏ.கோவிந்தராஜன், இ.சண்முகவேல் ஏஐபிஇஏ சார்பில் எஸ்.டி.சீனிவாசன், என்எப்டிஇ மாநிலச் செயலாளர் கே.நடராஜன், பொதுக் காப்பீடு ஜிஐஇயு தென்மண்டலச் செயலாளர் சவரிமுத்து உள்ளிட்டோர் தலைமையேற்றனர்.

மோடி அரசின் புதிய தாராள மய கொள்கைக்கு மாற்றாக, ஏற்கனவே முன்வைத்துள்ள 14 அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி போராட்டத்தில் பங்கேற்ற தலைவர்கள் உரையாற்றினர்.

### ஒன்றிய அரசே!

- விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்து! ரேசன் முறையை பலப்படுத்து!
- தொழிலாளர் விரோத நான்கு சட்டத் தொகுப்புகளை திரும்ப பெறு!
- அனைவருக்கும் குறைந்தபட்ச மாத ஊதியம் ரூ.26,000 வழங்கு!
- ரூ.10,000க்கு குறையாத மாத ஓய்வூதியம் வழங்கிடு!
- நிரந்தரத் தன்மையுள்ள பணிகளில் காண்ட்ராக்ட், அவுட்சோர்சிங் முறையைக் கைவிடு!
- விவசாய விளைபொருட்களுக்கு கட்டுப்படியான விலையை நிர்ணயம் செய்!
- பெட்ரோல், டீசல் மற்றும் சமையல் எரிவாயு மீதான கலால் வரியை நீக்கு!
- மோட்டார் வாகன சட்டத்திருத்தம், மின்சார திருத்தச் சட்டத்தைக் கைவிடு!
- சம வேலைக்கு சம ஊதிய சட்டத்தை அமுல்படுத்து!
- பொதுத்துறை நிறுவனங்களை தனியாருக்கு விற்காதே!
- படித்த இளைஞர்களுக்கு தகுதிக்கேற்ற வேலையை உருவாக்கிடு!
- அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு சமூக பாதுகாப்பு நிதியம் உருவாக்கு!
- கல்வி, மருத்துவம், குடிநீர் அனைவருக்கும் சமமாக கிடைப்பதை உறுதி செய்!
- சத்துணவு, அங்கன்வாடி, ஆஷா பணியாளர்களை தொழிலாளர்களாக அங்கீகரித்திடு!
- 100 நாள் வேலைத் திட்ட நாட்களை 200 நாட்களாக்கி தினக்கூலியாக ரூ.600 வழங்கிடு!
- ILO இணக்க விதிகள் எண் 84, எண் 98 அமுல்படுத்து! கூட்டு பேர உரிமையை உறுதி செய்!

ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து அனைத்து மாநிலங்களிலும் பெரும் திரளான தொழிலாளர்கள் இதில் பங்கேற்று இருக்கின்றனர்.

கன்னிமாரா தொடங்கி ராஜரத்தினம் ஸ்டேடியம் வழியாக ஆதித்தனார் சிலை வரை அனைத்து சங்க கொடிகளும் அழகுற கட்டப்பட்டிருப்பது கவனத்தை ஈர்க்கிறது.

தமிழ்நாடு முழுமையிலும் இருந்து ஏராளமான தொழிலாளர்கள் ஆண்களும் பெண்களுமாக அதிகாலையில் இருந்து குழுமத் தொடங்கி விட்டனர். தமது சங்கக் கொடிகளை தாங்கிக் கொண்டும், அட்டைகளை அணிந்து கொண்டும் சீரான வரிசையில் மேடைக்கு முன் அமர்ந்திருக்கிறார்கள். காலை சரியாக ஒன்பது மணிக்கு அமர்வு தொடங்கி நடந்து கொண்டிருக்கிறது.

கட்சிக் கடிதம்

# ருசி கண்ட பூனை



போர்க்குணம் மிக்க தோழர்களே!

**குஜராத்தில் வன்முறை கலவரம் செய்து, அப்பாவி மக்களான இஸ்லாமிய பெருமக்கள் மீது பழி சுமத்தி, கலவரம் செய்து ஆயிரக்கணக்கான மக்களை கொன்று குவித்து அரசியல் ஆதாயம் பெற்ற திருட்டுப் பூனை.**

மணியான மாநிலமான மணிப்பூர் கலகத் தீயை கடந்த மே மூன்றாம் நாள் மூட்டியது.

மூட்டிய தீ இன்று வரை அணையவில்லை. மாறாக கொழுந்து விட்டு எரிந்து கொண்டே இருக்கின்றது.

மாண்டு, மடிந்தோர் எண்ணிக்கை ஒவ்வொரு நாளும் அதிகரித்துக் கொண்டே உள்ளது.

மணிப்பூர் சென்ற அமித்ஷா அங்கே மூன்று நாள் முகாமிட்டு வந்தார். என்ன ஆலோசனை வழங்கினார் என்பது அவரது ஆருயிர் கூட்டாளி, உடன்பிறவா சகோதரன் மோடிக்கு மட்டுமே தெரியும்.

ஒட்டுமொத்த நாட்டின் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டும் பெரும் பொறுப்புடைய உள்துறை அமைச்சரின் மணிப்பூர் விஜயத்திற்கு பின்னரே வன்முறை மேலும் விஸ்வரூபம் எடுக்கிறது, வன்முறை என்றால் அதன் பொருள்தான் என்ன?

நயவஞ்சகம் சிறிதும் அறியா அப்பாவி பிரதமர் மோடியின் மௌன விரதம் வியப்பில் ஆழ்த்துகிறது.

கைகளை விரித்தும், உயர்த்தியும் சிங்கமாக கர்ஜிக்கும் கலையை நன்கறிந்த மனிதர் அசைவற்று கோமா நிலையில் இருப்பது ஏன்?

மணிப்பூர் மக்களுக்கு ஏற்பட்ட துன்பத்தை, துயரத்தை தாங்கிக் கொள்ள இயலாமல் தன்னை தனிமைப்படுத்திக் கொண்டாரா?

சகோதரிகள் ஆடையின்றி அம்மணமாக்கப்பட்ட அநியாயத்தைக் கண்டு பதட்டத்தில் பயந்து போய்விட்டாரா?

ஊரெல்லாம் சுற்றுகிறார், வாரணாசிக்கு மக்கள் வெள்ளம் போல் வந்து குவிக்கின்றனர், அங்கிருந்து காசி விசுவநாதரை வணங்குகின்றனர் என்று பெருமிதத்தோடு காசியில் நின்று கர்ஜிக்கின்றார்.

இன்ன பிற மாநிலங்களுக்கும் செல்கின்றார்; மகிழ்கின்றார்.

ஆனால் மணிப்பூர் மக்கள் கடந்த மூன்று மாதத்திற்கு மேலாக கதறி அழுகின்றார்கள், இந்திய குடிமக்களாகிய நாங்கள் அனாதைகளா? எங்கே எங்கள் பிரதமர் எனக் கேட்கின்றனர்.

அங்கும் இங்குமாக வானூர்தி வழியாக பறந்து பறந்து செல்லும் மோடியின் புனித பாதங்கள், மணிப்பூர் மண்ணில் மட்டும் பதிய மறுக்கின்றதே ஏன்?

அமெரிக்கா சென்று அங்குள்ள நாடாளுமன்றத்தில் சிங்கமென கர்ஜிக்கும் மாமன்னர், சொந்த நாட்டின் நாடாளுமன்றத்தை புறக்கணித்து அவமதிப்பது ஏன் என்பது புரியாத புதிராக உள்ளது?

நாடாளுமன்றத்தை மதித்து, போற்றி அதன் படிக்கட்டுகளை தொட்டு வணங்கி போஸ் கொடுத்த பெரிய மனிதர், நாட்டில் இதுவரை எந்த பிரதமரும் மேற்கொள்ளா புனித பணியை மேற்கொண்டவர் நாடாளுமன்ற படிக்கட்டுகளை மதிக்காமல் இன்று பாராமுகமாக செல்வது தான் ஏனோ?

நாடாளுமன்ற உறுப்பினர்கள் அவைக்கு வராமல் புறக்கணித்தால் அவர்களை சமாதானப்படுத்தி சபைக்கு அழைத்திட வேண்டிய பிரதமரை, சபை உறுப்பினர்கள் வாருங்கள், வாருங்கள். அவைக்கு வாருங்கள் என்று நாடாளுமன்றம் தொடங்கிய நாள் முதல் அழைப்பு விடுத்த வண்ணம் உள்ளனர்.

மாமன்னரோ மறந்தும் கூட அவையை திரும்பிக் கூட பார்க்கவில்லையே, ஏன்?

மணிப்பூரில் கலவரம் தொடர்கின்றது தொடரட்டும்! மற்றொரு குஜராத் அவர்களுக்கு லட்டு போல் கிடைத்துவிட்டது.


இது மட்டும் போதுமா? போதாது இன்னும், இன்னும் இவர்களுக்கு கலகம் என்கின்ற லட்டு கிடைத்துக் கொண்டே இருக்க வேண்டும்.

மணிப்பூரை அடுத்து இரட்டை இஞ்ஜின் ஆட்சி நடைபெறும் அரியானா கிடைத்துவிட்டது.

அரசியல் கட்சிகளும், அமைப்புகளும் பேரணி நடத்துவது மக்கள் பிரச்சனைகளுக்காக ஆனால் ஆர். எஸ். எஸ். வகையறாக்கள் பேரணி நடத்துவது கலகம் உருவாக்குவதற்காக!

அமீனா புகுந்த வீடும், ஆமை புகுந்த வீடும் உருப்படாது என்கிற பழமொழி உண்டு.

ஆர்.எஸ்.எஸ். வகையறாக்கள் பேரணி செனறால் கலகம் நடக்கப் போகின்றது வீதிகளிலும், கடைகளும், மசூதிகளும் தீப்பற்றி எரியப் போகின்றன, மனித உயிர்கள் பலியாகப் போகின்றன என்று பொருளாகும்.



அரியானாவின் ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் கரங்களாக செயல்படும் விஷ்வ இந்து பரிசத் மற்றும் பஜ்ரங் தளம் ஆகிய அமைப்புகள் ஊர்வலம் நடத்தின.

இவர்களின் ஊர்வலம் எத்திசை நோக்கிச் செல்லும் என்பதும், எத்தகைய முழக்கங்களை எழுப்புவார்கள் என்பதும் அனைவரும் அறிந்ததே!

இவர்களின் வன்முறை ஊர்வலத்தால் ஊர் காவல் படையை சேர்ந்தவர்கள் உட்பட ஆறு பேர் கொல்லப்பட்டனர்.

வீடுகளும், வணிக நிறுவனங்களும், மசூதிகளும் தீக்கு இரையாகின. பலர் காயமுற்றனர்.

ஐந்து மாவட்டங்களில் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. 93 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 176 பேர் வரை கைது செய்யப்பட்டும் உள்ளனர்.

ஆனாலும் வன்முறைகள் தொடர்கின்றன மத வன்முறையாக மாறி தொடர்கின்றது.

இச்சம்பவம் கடும் விமர்சனத்திற்கு உள்ளாகி உள்ளது.

இரட்டை இஞ்ஜினில் ஒரு இன்ஜினான மாநிலத்தின் மாண்புமிகு முதலமைச்சர் மனோகர்லால் கட்டார், மிகவும் பொறுப்புணர்ச்சியின்றி கூறுகின்றார். ஒவ்வொருவருக்கும் அரசு பாதுகாப்பு அளிக்க முடியாது என்று கூறி தனது பொறுப்பை தட்டிக்கழித்தார்.

நூஹ் மாவட்டத்தில் உள்ள நவுரு நகரில் குடியிருந்து வரும் இஸ்லாமியர்களின் வீடுகள் புல்டோசர் கொண்டு தரைமட்டமாக இடிக்கப்பட்டு வருகின்றது.

மருந்து கடைகள் உட்பட 250க்கும் மேற்பட்ட வீடுகள் தரைமட்டமாக தகர்த்தெறியப்பட்டன மேலும் இப்பணிகள் தொடரும் என்று அதிகாரிகள் திமிராக தெரிவித்துள்ளனர்.

வன்முறையாளர்கள் வீடுகளுக்கும், மசூதிகளுக்கும் தீ வைத்தது குறித்து அங்கே தீப்பற்றி எரிந்து கொண்டிருப்பது குறித்து வாய்மூடி மௌனியாக உள்ளனர். ஏனெனில் இத்தகைய கொடூர செயலை செய்த கொடியவர்கள் யார் என்பது பட்டவர்த்தனமாக முதலமைச்சருக்கு தெரியும்.

அவர்கள் காப்பாற்றப்பட வேண்டியவர்கள் என்பதால் அதனை மூடி முக்காடிட்டு மறைத்து விட்டு வன்முறைக்கு காரணம் இஸ்லாமியர்கள் என முதல்வர் கூறுகின்றார் இதுதான் குஜராத் மாடல்.

வன்முறை நடைபெறும் என்று உளவுத்துறை முன்கூட்டியே தகவல் அறிவித்ததாக குற்ற புலனாய்வு பிரிவு ஆய்வாளர் ஒருவர் தொலைக்காட்சிக்கு பேட்டியளித்தது வீடியோ சமூக ஊடகத்தில் செய்தி பரவிய நிலையில், அம்மாநில உள்துறை அமைச்சர் அனில் சிங் எந்த தகவலும் அரசுக்கு வரவில்லை என மறுக்கின்றார். இதுதான் குஜராத் மாடல்

குஜராத்தில் ருசி கண்ட திருட்டுப் பூனை, நாடு முழுவதும் ருசிக்காண துடிக்கின்றது.

மதத்தீ, சாதித்தீ, கடவுள்தீ மட்டும் போதுமா? போதாது, மொழித் தீயையும் பற்றவைக்க வேண்டுமல்லவா?

உள்துறை அமைச்சர், வன்முறைக்கு கலவரத்திற்கு பெயர் பெற்ற அமைச்சர் அமித்ஷா தன் மிரட்டும் விழிகளை அகல விரித்தவாறு கூறுகின்றார், தமிழ் உள்ளிட்ட மொழிகள் அனைத்தும் உள்ளூர் மொழிகள். காலப்போக்கில் அனைவரும் இந்தி மொழியை ஏற்க வேண்டும் என உத்தரவு பிறப்பிக்கின்றார்.

எங்கோ அல்ல, நாடாளுமன்ற அலுவல் மொழிகளுக்கான கூட்டத்திற்கு தலைமை ஏற்று உரையாற்றுகின்றார்.

அரசியலமைப்பின் எட்டாவது அட்டவணையில் பட்டியல் இடப்பட்டுள்ள 22 தேசிய மொழிகளை கூச்சநாச்சமின்றி உள்ளூர் மொழி என அகம்பாவத்துடன் கூறுகின்றார்.

காலப்போக்கில் இந்தியை அனைவரும் ஏற்கும் சூழலை உருவாக்க வேண்டும் என கொக்கரித்துள்ளார்.

எட்டாம் அட்டவணையில் உள்ள தமிழ் உள்ளிட்ட 22 மொழிகளையும் சமமாக பாவிக்க வேண்டும் என்ற நிலையிலிருந்து, பாஜக தடம் புரண்டு வெகு நாட்களாகிவிட்டன.

மொழிகளின் வளர்ச்சிக்கு ஒதுக்கப்படும் நிதியில் பாரபட்சம். தமிழ் மொழிக்கு குறைவு இந்தி, சமஸ்கிருத மொழிகளுக்கு அதிக நிதி ஒரு கண்ணில் வெண்ணெய், மறு கண்ணில் சுண்ணாம்பு என்ற நிலையை தான் பாஜக அரசு மேற்கொள்கிறது.

ஒரே நாடு, ஒரே மொழி. அது எந்த மொழி? இந்தி மொழி இதுதான் பாஜகவின் கொள்கை.

இக்கொள்கையை வெளிப்படுத்துவதன் மூலம், மொழி மோதல் உருவாக வேண்டும். அம்மோதலின் மூலம் அற்பத்தனமான அரசியல் ஆதாயம் பெற வேண்டும். இதுவே அமித்ஷாவின் குறிக்கோள்.

இவைகள் எல்லாம் இவர்கள் அறியாமல் செய்யும் பிழையல்ல; மாறாக தெரிந்தே, திட்டமிட்டே மேற்கொள்கிறார்கள்.

தங்களது அரசின் சாதனைகளை எடுத்துக் கூறி வாக்கு கேட்க வக்கற்றவர்கள் கலகத்தின் மூலம் காரியம் சாதிக்க துடியாய் துடிக்கின்றார்கள்.

இவர்களின் சூட்சுமத்தை நாம் அறிவது மட்டுமல்ல நாட்டு மக்கள் அறிந்திட செய்திட வேண்டும்.

மக்கள் மத்தியில் ஏற்படும் விழிப்புணர்ச்சிதான், நாட்டிற்கு ஏற்படவுள்ள பேராபத்தை தடுத்து நிறுத்திட முடியும்.

அதிகார பீடத்தில் அட்டை போல் ஒட்டிக்கொள்ள பா.ஜ.க 2024 தேர்தலுக்கு முன்பாக எத்தகைய தீங்கும் விளைவிக்கும்.

இத்தகைய அபாயத்தை அடையாளம் கண்டு மக்களிடம் எடுத்துச் சொல்ல களப்பணிகளை நாம் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும்.

குஜராத்தில் ருசி கண்ட திருட்டுப் பூனை; நாட்டையே தீக்கிரையாக்க முயல்கின்றது.

நாடு காக்கப்பட ஜனநாயகம் காக்கப்பட நமது போர் முழக்கம் எட்டு திசையும் எதிரொலிக்கட்டும்.

மீண்டும் சந்திப்போம்.

வணக்கம்

தோழமைமிக்க,

(இரா.முத்தரசன்)
மாநிலச் செயலாளர்

# ஹரியானாவில் முஸ்லிம்களை வெளியேற்ற திட்டமிட்ட சதி

**டெல்லிக்கு அருகில் இருக்கும் அரியானா மாநிலத்தில் நிலவும் கலவரங்களை கண்டு உண்மை அறிய, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தனது பிரதிநிதி குழுவை நேரடியாக அனுப்பியது.**

## அம்பலப்படுத்தியது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் உண்மை அறியும் குழு





இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயலாளர் பினாய் விஸ்வம் எம்.பி, ஏஐடியூசி பொதுச் செயலாளர் அமர்ஜீத் கவுர், மாநிலங்களவை உறுப்பினர் சந்தோஷ் குமார் எம்.பி., ஹரியானா மாநில செயலாளர் தரியாவ் சிங் காஷ்யப் ஆகியோர் இந்தக் குழுவில் இடம் பெற்றனர்.

ஹரியானாவில் ஒரு பஞ்சாயத்து தலைவர் தன் அதிகாரபூர்வ லெட்டர்ஹெட்டில் "முஸ்லிம்கள் அல்லது கயவர்களை தனது பஞ்சாயத்து பகுதியில் சாலையோர வியாபாரத்திலோ அல்லது வேறு வகை வணிகம் செய்யவோ அனுமதிக்க வேண்டாம்" என்று அரசு அதிகாரிகளுக்கு கடிதம் எழுதியுள்ளதை வெளியிட்டு "பாஜக ஆட்சியின் கீழ் சிறுபான்மையினருக்கு எதிரான ஒழுங்கமைக்கப்பட்ட பாகுபாட்டின் கசப்பான யதார்த்தத்தை இந்தக் கடிதம் அம்பலப்படுத்துகிறது" என்று இந்த குழு ஊடகங்களிடம் கூறியது.

பிரதிநிதிகள் குழு அளித்த கடிதத்தில், "பஞ்சாயத்து தலைவர், ஜைனாபாத், ரேவாரி மாவட்டம்" என்ற பதவிக்கு மேலே "பாவ்னா" என கையொப்பமிட்டுள்ளது.

தி டெலிகிராப் பத்திரிகை இதை சரி பார்ப்பதற்காக பஞ்சாயத்து தலைவர் பாவனா யாதவை தொலைபேசியில் அழைத்த போது, அவரது மாமனார் ராஜ்வீர் சிங் என்று தன்னை அடையாளப்படுத்திக் கொண்ட நபர் பதிலளித்தார்.

அந்தக் கடிதம் குறித்து கேட்டபோது, "நூஹ் மாவட்டத்தில் நடந்த வகுப்புவாத வன்முறையை அடுத்து இந்தக் கடிதம் எழுதப்பட்டுள்ளது. நூஹ் மாவட்டத்தில் நிலவும் கொந்தளிப்பான சூழ்நிலையை கருத்தில் கொண்டு, அப்பகுதியில் அமைதியை நிலைநாட்ட இந்த முடிவு எடுக்கப்பட்டது. சில மாதங்களுக்கு மட்டுமே இது அமலில் இருக்கும். அங்கு நடந்த வன்முறைகளுக்கு முஸ்லிம்களே காரணம்.

எந்தவொரு விரும்பத்தகாத சம்பவமும் நடைபெறாமல் தடுப்பதற்காக நாங்கள் எடுத்த முடிவை அதிகாரிகளுக்கு தெரிவித்து கடிதம் எழுதினோம்," என்று ராஜ்வீர் கூறினார். தனது கிராமத்தில் ஒரு முஸ்லீம் குடும்பம் கூட இல்லை என்றும் தெரிவித்தார்.

ஹரியானாவில் உள்ள மகேந்திரகரில் இருக்கும்15க்கும் மேற்பட்ட கிராமங்களின் தலைவர்களிடமிருந்து, கடந்த சில நாட்களாக மாவட்ட துணை மாஜிஸ்திரேட்டுக்கு, இதுபோன்ற கடிதங்கள் வந்துள்ளன. "நூஹ்வில் நமது இந்து சகோதரர்களின் மீது நடத்தப்பட்ட வன்முறை மற்றும் அட்டூழியங்களைத் தொடர்ந்து இந்த முடிவுகள் எடுக்கப்பட்டதாக" அந்த கடிதங்களில் தெரிவிக்கப்பட்டு இருந்தன என்று ஹரியானா காவல்துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தியில் எழுதப்பட்ட இந்தக் கடிதங்களை உன்னிப்பாகப் பரிசோதித்ததில், எல்லாவற்றிலும் ஒரே மாதிரியான உள்ளடக்கம் இருப்பது தெரியவந்துள்ளது. எனவே இவை ஒருங்கிணைத்து ஏற்பாடு செய்து எழுதப்பட்ட கடிதங்கள் என்பதும், முஸ்லிம்கள் மீது திட்டமிட்ட பொருளாதாரப் புறக்கணிப்பை நோக்கமாகக் கொண்டவை என்பதும் நன்கு தெளிவாகின்றன.

### கசப்பான எதார்த்தம்

"ஹரியானா மாநிலம், ரேவாரி மாவட்டம் தஹினாவில் இருந்து, ஜைனாபாத் பஞ்சாயத்து சர்பஞ்ச் பாவ்னா யாதவின் லெட்டர்ஹெட்டில் எழுதப்பட்ட இந்த கடிதம், பாஜக ஆட்சியில் திட்டமிட்டு வளர்க்கப்படும் சிறுபான்மையினருக்கு எதிரான ஒழுங்கமைக்கப்பட்ட பாகுபாட்டின் கசப்பான யதார்த்தத்தை அம்பலப்படுத்துகிறது." என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் அறிக்கை கூறுகிறது.

சிபிஐ அறிக்கை மேலும் கூறியது: "கடிதத்தின் உள்ளடக்கம் அதிர்ச்சியளிக்கிறது. பஞ்சாயத்து பகுதியில் வணிகம் அல்லது சாலையோர வியாபாரம் செய்யும் முஸ்லிம்களை திருடர்கள் மற்றும் ஒழுக்க கேடானவர்கள் என்றும் கிராமத்தில் அமைதியை உறுதி செய்வதற்காகவே முஸ்லீம்களை வெளியேற்றுவதாகவும், முஸ்லிம்கள் அங்கு வாழ்வதுதான் வகுப்புவாத கலவரத்திற்கான ஒரே காரணமாகவும் கடிதம் சித்தரிக்கிறது."

திங்கள்கிழமை மதியம் 1.30 மணியளவில் நூஹ் நகரில் உள்ள நல்ஹர் கோவிலில் இருந்து பஜ்ரங் தள் மற்றும் விஷ்வ ஹிந்து பரிஷத் உறுப்பினர்கள் முஸ்லிம்களுக்கு எதிராக அவதூறான முழக்கங்களை எழுப்பி ஊர்வலமாகச் சென்றனர்.

ஊர்வலத்தை இளைஞர்கள் குழு தடுத்து நிறுத்தியது. சிறிது நேரத்தில் இரு தரப்பிலிருந்தும் கல் வீச்சு தொடங்கியது.

அதை அடுத்து ஏற்பட்ட வன்முறையில் ஒரு முஸ்லிம் இளம் மதகுரு மற்றும் இரண்டு ஊர்க்காவலர்கள் உட்பட 6 பேர் கொல்லப்பட்டனர் என காவல்துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

### தூவப்பட்ட வெறுப்பு விதைகள்

ஹரியானாவில் வன்முறையால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு சென்று பலதரப்பட்ட மக்களோடு பேசிய அனுபவத்தில், இந்தப் பகுதியில் அபாயகரமான அளவுக்கு வெறுப்பு விதைக்கப்பட்டுள்ளதை கண்டறிய முடிந்தது. இப்பகுதியில் கலவரத்தை தூண்டுவதற்கு வேண்டுமென்றே திட்டமிட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன"

"முழு பிராந்தியத்திலும் வெறுப்பு விதைகளைத் தூவி, இரு சமூகத்தினர் இடையிலான பிளவுகளைத் திட்டமிட்டு, வளர்த்து கலவரம் உருவாக்கப்பட்டுள்ளது, என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி குழுவின் அறிக்கை கூறுகிறது.

இந்தக் குழுவினரை நூஹ் எல்லையில் காவல்துறை வன்முறையால் பாதிக்கப்பட்ட சில கிராமங்களுக்குள் நுழைவதை தடை உத்தரவுகளை காரணம் காட்டி, ஊருக்குள் நுழைய விடாமல் தடுத்து நிறுத்தியது.

தூதுக்குழு உறுப்பினர்கள் தாங்கள் சந்தித்த அனைவருக்கும் இப்பகுதியில் அமைதி, இரக்கம் மற்றும் நல்லிணக்கம் நிலவ வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தனர். கலவரத்திற்கு வழிவகுத்த நிகழ்வுகளின் தொடர் குறித்து முழுமையான விசாரணை நடத்தி குற்றவாளிகளுக்கு கடுமையான தண்டனை வழங்க வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

"வன்முறை மற்றும் தீவைப்பு ஆகியவற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தாராளமாக இழப்பீடு வழங்கப்பட வேண்டும். மக்கள் இடையிலான பிளவுகளை இட்டு நிரப்பி, இயல்புநிலையை மீட்டெடுப்பதை அரசு உறுதிசெய்ய வேண்டும்" என்று கட்சி கேட்டுக் கொண்டுள்ளது.

### புல்டோசர் நீதி

வன்முறையின் போது மத ஊர்வலத்தின் மீது கற்கள் வீசப்பட்டதாகக் கூறப்படும் உணவகம் உட்பட பல கட்டிடங்களை "சட்டவிரோத கட்டமைப்புகள்" என கூறி அதிகாரிகள், புல்டோசர் கொண்டு இடித்து தள்ளினார்கள்.

100க்கும் மேற்பட்ட வீடுகள், கடைகள் மற்றும் பிற தற்காலிக கட்டிடங்கள் புல்டோசர்களால் அழிக்கப்பட்டன, வகுப்புவாத கலவரத்திற்கு காரணமான இந்துத்துவா குழுக்களை சமாதானப்படுத்துவதற்காகவே, சிறுபான்மையினர் எழுப்பிய கூக்குரலை அவர்கள் அலட்சியப்படுத்தினார்கள். வங்கதேசத்தில் இருந்து "சட்டவிரோதமாகக்" குடியேறியவர்கள் எனச் சொல்லி சுமார் 250 குடிசைகளை அதிகாரிகள் இடித்து அகற்றினர்.

பிஜேபி ஆளும் மாநில அரசுகளின் "புல்டோசர் நீதி" என்பது சிறுபான்மையினரைக் கொடுமைப்படுத்துவதும், அவர்களின் சொத்துக்களை அழிப்பதும் தவிர வேறில்லை என்கிறார் நூஹ்வில் உள்ள ஒரு சாலையோர முஸ்லீம் வியாபாரி. இவர் கடையும் இடிக்கப்பட்டது.

முதலாவதாக, இந்துத்துவா குழுக்களின் உறுப்பினர்கள் வன்முறையின் போது நூஹில் பல வீடுகள் மற்றும் குடிசைகள் மற்றும் மூன்று மசூதிகளை தீக்கிரையாக்கினர். அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு பதிலாக, ஹரியானாவில் உள்ள பாஜக அரசாங்கம் இப்போது எங்கள் வீடுகளையும் கடைகளையும் புல்டோசர் கொண்டு இடிப்பதில் மும்முரமாக உள்ளது.

வன்முறைக்குப் பிறகுதான் எங்கள் கடைகளும், வீடுகளும் சட்ட விரோதமாக மாறிவிட்டனவா? நாங்கள் இப்போது எங்கு செல்வோம்?"

இத்தகைய புல்டோசர் நீதி சிறுபான்மையினருக்கு மட்டும் ஏன்? இப்பகுதியைச் சேர்ந்த நசீர் மற்றும் ஜுனைத் ஆகிய இரு இளைஞர்கள் பசுக் காவலர்களால் உயிருடன் எரித்து ஆறு மாதங்கள் ஆகியும், கொலைக் குற்றச்சாட்டில் குற்றம் சாட்டப்பட்ட முக்கிய குற்றவாளியான மோனு மனேசர் இன்னும் சுதந்திரமாக இருக்கிறார். இவர்கள் ஏன் இதுவரை அவரது வீட்டை இடிக்கவில்லை?" என்று வினவினார் அவர்.

**'தி டெலிகிராப்'**
**ஆங்கில செய்தித்தாளில் இருந்து**
**தமிழில்: டி எம் மூர்த்தி**

## வினாடி - வினா

1 நாடாளுமன்ற மாநிலங்களவையின் தலைவராக யார் வர முடியும்? தற்போதைய தலைவர் பெயர்?

2 இந்தியாவின் முதல் பெண் முதலமைச்சரின் பெயர் என்ன?


3 மாஸ்கோவில் போல்செவிக் தலைவர்களின் நினைவிடத்தில் அடக்கம் செய்யப்பட்ட அமெரிக்க எழுத்தாளர் பெயர்?

4 தமிழ்நாடு சட்டப்பேரவை, தலைமைச் செயலகம் அமைந்துள்ள புனித ஜார்ஜ் கோட்டை எந்த ஆண்டு கட்டப்பட்டது?

5 அனைத்திந்திய மாணவர் பெருமன்றம் (AISF) அமைக்கப்பட்டது எப்போது?

6 சோவியத் சோஷலிஸ்ட் குடியரசுகளின் ஒன்றியம் (USSR) அமைக்கப்படும் போது எத்தனை குடியரசுகள் இருந்தன?

விடைகள் 12 ஆம் பக்கம்



தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

ஜனசக்தி

மலர் 86 இதழ் 19

# பத்திரிகை சுதந்திரத்தை பறிக்க புதிய சட்டம்

நாடாளுமன்ற மாநிலங்களவையில் ஆகஸ்ட் 3ம் தேதியன்று பத்திரிகை மற்றும் பருவ இதழ்களின் பதிவு மசோதா 2023 நிறைவேற்றப்பட்டுள்ளது.

1867இல் பிரிட்டிஷ் காலத்தில் கொண்டு வரப்பட்ட பத்திரிகை மற்றும் புத்தகங்கள் பதிவுச் சட்டத்துக்கு பதிலாக, இந்தப் புதிய சட்டம். வழக்கம் போலவே, காலனிய அடிமைச் சட்டத்திலிருந்து விடுதலை என அரசு பெருமையடித்துக் கொண்டது. ஆனால் இது பத்திரிகைகளுக்கு கூடுதல் சுதந்திரம் தரவில்லை; மாறாக அதில் இருப்பதையும் பறித்துக் கொள்கிறது.

இச்சட்டப்படி செய்தித்தாள்கள் மற்றும் பருவ இதழ்களை பதிவு செய்வதற்கும், பதிவேடுகளை பேணுவதற்கும் பத்திரிகை பொது பதிவாளர் எனும் அதிகாரமையம் உருவாக்கப்படுகிறது. பத்திரிகையை வெளியிடுபவர் அல்லது உரிமையாளர் சட்ட விரோத செயல்கள் தடுப்பு (ஊபா) சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட்டவர் என்றாலோ அல்லது நாட்டின் பாதுகாப்புக்கு ஆபத்தானவர் என்று கருதப்பட்டாலோ, அவரது பதிவு விண்ணப்பத்தை நிராகரிக்க முடியும். அதே நேரத்தில் ஏற்கனவே வந்து கொண்டிருக்கும் பத்திரிக்கை என்றாலும் இதே காரணங்களைக் கூறி, அதன் பதிவை ரத்து செய்ய சட்டத்தின் 4(1), 11(4) பிரிவுகளின் கீழ் பொதுப்பதிவாளருக்கு அதிகாரம் தரப்பட்டுள்ளது.

அதற்கும் அதிகமாக சட்டத்தின் 6(பி) பிரிவின்படி அரசு குறிப்பிடும் அதிகாரிகள், பத்திரிக்கை வளாகத்துக்குள் நுழையவும் அங்குள்ள ஆவணங்களை ஆய்வு செய்யவும், எடுத்துச் செல்லவும் தமக்கு தேவைப்படும் தகவல்கள் பற்றி எந்த ஒரு கேள்வியையும் கேட்டுப் பதில் பெறவும் அதிகாரம் தரப்பட்டுள்ளது. ஆனால் அத்தகைய அதிகாரம் யாருக்கு தரப்படும் என்பது சட்டத்தில் இல்லை. சட்டத்தின் 19வது பிரிவின்படி, சட்டத்திற்கு வழிகாட்டுதல்கள் மற்றும் விதிமுறைகளை மத்திய அரசு வெளியிடும் என்று சொல்லப்பட்டுள்ளது. அதாவது சட்டத்தை இயற்றி திருத்துகிற நாடாளுமன்றத்தின் அதிகாரத்தை எடுத்து அதிகாரிகளின் கைகளுக்கு இச்சட்டம் தருகிறது.

இதற்கு முன் இது போன்று நிறைவேற்றப்பட்ட சட்டங்களுக்கு, விதிகள் என்ற பெயரில் அந்த சட்டத்திலேயே கூறப்படாத கொடூரமான நியதிகளை அரசு வரைவு செய்துள்ளது.

ஆங்கிலம் தவிர்த்த மற்ற மொழிகளில் வரும் பத்திரிகைகளை கட்டுப்படுத்துவதற்காக 1878ல் வெர்னாகுலர் பிரஸ் ஆக்ட் ஒன்றை பிரிட்டிஷ் அரசு இந்தியாவில் கொண்டு வந்தது. அதன்படி, பத்திரிகையாளர் எனும் முறையில் சுரேந்திரநாத் பானர்ஜி கைது செய்யப்பட்டார். அதனைத் தொடர்ந்த மக்கள் எழுச்சி காரணமாக அச்சட்டத்தை பிரிட்டிஷ் அரசு கைவிட்டது. அதிலிருந்த ஷரத்துக்களைக் கொண்டு இந்தப் புதிய சட்டத்தை மோடி அரசு நிறைவேற்றுகிறது.

மோடி பிரதமரான பின், அரசை கடுமையாக விமர்சனம் செய்து வந்த என்டிடிவியை மோடியின் நண்பரான அதானி விலைக்கு வாங்கி விட்டார். அதன் இன்னொரு போட்டியாளராக இருந்த நெட்ஒர்க் 18ஐ மற்றொரு நண்பரான முகேஷ் அம்பானி விலைக்கு வாங்கினார். அந்த நிறுவனத்தின் 70 க்கு மேற்பட்ட சேனல்களுக்கு 80 கோடி பார்வையாளர்கள் இருக்கிறார்கள்.

2020ல் கொரோனாவை பற்றி செய்தி வெளியிட்டதற்காக 55 பத்திரிக்கையாளர்கள் கைது செய்யப்பட்டார்கள். தற்போது கூட 13 பத்திரிகையாளர்கள் சிறையில் உள்ளார்கள். பாஜக தலைவர்களை எதிர்த்து கேள்வி கேட்கும் ஊடகவியலாளர்கள், நெறியாளர்கள் உடனடியாக அந்த நிறுவனங்களில் இருந்து விலக்கப்படுகிறார்கள்.

குஜராத்தில் நிகழ்ந்த கலவரம் சம்பந்தமான காணொளிகளை இரு பகுதிகளாக ஒளி பரப்பிய இந்தியாவில் உள்ள பிபிசி, வீடு என்ற பெயரில் சீர்குலைக்கப்பட்டது. பத்திரிக்கையாளர் கௌரி லங்கேஷ் 2017ல் சுட்டுக் கொல்லப்பட்டார்.

85% க்கு மேற்பட்ட ஊடகவியலாளர்கள் தாம் பணிபுரியும் நிறுவனம் மோடிக்கு ஆதரவானது என்று நம்புகிறார்கள். ஆட்சியில் இருப்பவர்களின் ஊதுகுழல்களாக பெரும்பான்மையான தொலைக்காட்சிகள் மாறிவிட்டன.

உலகத்தில் 180 நாடுகளில் பத்திரிக்கை சுதந்திரம் எந்த நிலையில் உள்ளது என்பதற்கான பட்டியல் ஆண்டுதோறும் வெளியிடப்படுகிறது. அந்தப் பட்டியலில் 2016ல் 133வது இடத்தில் இந்தியா இருந்தது. 2021 இல் 9 இடங்கள் கீழ் இறங்கி 142 வது இடத்துக்கு வந்தது 2022இல் 150ம் இடத்துக்கு கீழிறங்கியது. இந்த ஆண்டிலோ மேலும் 11 இடங்கள் கீழிறங்கி 161 வது நாடாக இருக்கிறது. பத்திரிக்கை சுதந்திரம் எவ்வாறு நசுக்கப்பட்டு கொண்டே இருக்கிறது என்பதற்கான சாட்சி இது.

புதிய சட்ட மசோதாவை ஒன்றிய அரசு திரும்பப் பெற வேண்டும். குறைந்தபட்சம், நாடாளுமன்ற நிலை குழுவுக்கு அனுப்பி விவாதிப்பது அவசியமானதாகும்.

# கொலைக்களமாய் பல்கலைக்கழகங்கள்!



க.இப்ராகிம்

**கல்வி பெரும் முதலாளிகளின் லாபச் சரக்காக மாறிய பிறகு அதில் நியாயத்தை எதிர்பார்ப்பது எத்தனை அபத்தம். தனியார் கல்வி நிறுவனங்கள் தான் அநீதிகளின் பிறப்பிடமாக இருக்கிறது.**

உங்களுக்கு நாங்களும் சளைத்தவர்கள் அல்ல என்று ஒன்றிய அரசின் கல்வி நிறுவனங்களும் தற்போது அநீதியில் போட்டி போட தொடங்கி விட்டன.

**“கேடில் விழுச்செல்வம் கல்வி யொருவற்கு
மாடல்ல மற்றை யவை”**

என்று கல்வியின் மகத்துவம் புரிந்ததாலே சிறந்த கல்வியை, சிறந்த இடங்களில் இருந்து பெற வேண்டும் என்று பார்த்துப் பார்த்து கல்வி நிலையங்களை தேர்வு செய்து கல்வியை பெற பெற்றோர்களும் மாணவர்களும் முயற்சிக்கின்றனர்.

கல்வி கற்று அறிஞராக திரும்பி வருவான், நல்ல வேலையில் சேருவான் என்று எதிர்பார்ப்போடு ஒன்றிய அரசின் உயர் கல்வி நிறுவனங்களுக்கு அனுப்பும் பெற்றோரின் எதிர்பார்ப்புகளை பொய்யாக்கி, கிஞ்சிற்றும் எதிர்பார்க்காத வகையில் மாணவர்கள் வீடுகளுக்கு சடலமாக வரும் நிலை அதிகரித்துள்ளது. இது மாணவர்களுக்கும் கல்வி நிலையங்களுக்கும் இடையே காணப்படும் முரண்பாடுகளின் வெளிப்பாடாக இருக்கிறது.

டெல்லி ஜே. என். யு. வில் படித்த தமிழ்நாட்டைச் சேர்ந்த முத்துகிருஷ்ணன் சில ஆண்டுகளுக்கு முன்பு தற்கொலை செய்து கொண்டார். அதேபோல், சென்னை ஐ. ஐ. டி. யில் படித்த கேரளாவை சேர்ந்த பாத்திமா லத்தீப் சில ஆண்டுகளுக்கு முன்பு தற்கொலை செய்து கொண்டதாக கூறப்படுகிறது.




ஆனால் அதை கொலை என்று அவரின் பெற்றோர்கள் தொடர்ந்து குற்றம் சாட்டுகின்றனர். மேலும் டெல்லி ஜே. என். யு. வில் படித்துக் கொண்டிருந்த நஜீப் என்ற மாணவர் இன்று வரை எங்கு இருக்கிறார் என்றே தெரியவில்லை. மேலும் ஹைதராபாத் மத்திய பல்கலைக்கழகத்தில் படித்து வந்த ரோகித் வெமுலா என்ற ஆராய்ச்சி மாணவர் இந்த பல்கலைக்கழக நிர்வாகத்தை எதிர்த்து கேள்வி கேட்டதால் நீக்கம் செய்யப்பட்டார், அதற்கு எதிராக தீவிர போராட்டத்தை முன்எடுத்தார், பிறகு அவரது அறையில் இருந்து சடலமாக மீட்கப்பட்டார். ரோகித் வெமுலா தான் இறப்பதற்கு முன்பு எழுதிய கடிதத்தை அத்தனை எளிதில் மறந்து விட முடியாது.

**அந்தக் கடிதத்தின் சில வரிகள் உங்களுக்காக:**

“ஒரு மனிதனின் விழுமியங்கள், அவனது உடனடி அடையாளங்களைக் கொண்டு சுருக்கப்படுகின்றன. ஒரு வாக்காக, ஒரு எண்ணாக, ஒரு பொருளாக மட்டுமே கணிக்கப்படுகிறான். இதயமும், உணர்வும் கொண்டவனாக மனிதன் எப்போதும் கருதப்படுவதில்லை. நட்சத்திர தூசிகளால் உருவான பேரண்டம் போல, எல்லா களங்களிலும், கல்வியிலும், வீதிகளிலும், அரசியலிலும், வாழ்க்கையிலும், மரணத்திலும் கூட, அவன் ஒரு உணர்வில்லா மனிதனாக கருதப்படுவதே இல்லை.

நான் காயமடையவில்லை; சோகமாகவும் இல்லை. காலியாக, வெற்றிடமாக உணர்கிறேன். என்னைப் பற்றி நானே கவலைப்பட முடியவில்லை என்பது பரிதாபத்திற்குரியது. அதனால் போகிறேன். நான் வழ்ந்து கொண்டிருப்பதை விட சாவில் மகிழ்ச்சி கொள்கிறேன் என்பதை அறியுங்கள். இறுதியாக இதை உதிர்க்கிறேன். ஜெய் பீம்.”

என்று அந்த கடிதம் முடிவடையும்.

## கொலை கருவியாக மாறும் ஒன்றிய அரசின் கல்வி நிறுவனங்கள்!

தற்போது நாடாளுமன்றத்தில் நடைபெற்று வரும் மழைக்கால கூட்டத்தொடரில் கேரளாவைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர், ஒன்றிய அரசின் கல்வி நிறுவனங்களில் ஏற்படும் தொடர் தற்கொலைகள் குறித்து கேள்வி எழுப்பினர். அதற்கு, ஒன்றிய கல்வி இணையமைச்சர் சுபாஷ் சர்க்கார் நாடாளுமன்றத்தில் தெரிவித்த பதிலில். மத்திய பல்கலைக்கழகங்கள், ஐ.ஐ.டி.கள், எம்.ஐ.டி.கள், ஐ. ஐ. ஐ. டி. கள், ஐ. ஐ. எம். கள், ஐ. ஐ. எஸ். இ. ஆர். களில் பயின்று வந்த மாணவர்களில் 98 பேர் கடந்த 5 ஆண்டுகளில் தற்கொலை செய்து கொண்டிருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

2018 ஆம் ஆண்டு 21 மாணவர் தற்கொலை செய்து இருக்கிறார். 2019 யில் 19 மாணவர், 2020 யில் 7 மாணவர், 2021 யில் 7 மாணவர், 2022 யில் 24 மாணவர்கள், 2023 யின் கடந்த 7 மாதம் வரை 20 மாணவர்கள் தற்கொலை செய்திருப்பதாக வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

ஐ. ஐ. டி. களில் 2018 2019 ஆம் ஆண்டுகளில் 8 பேர், 2020 2021 ஆம் ஆண்டில் 4 பேர், 2022 ஆம் ஆண்டில் 9 பேர். மத்திய பல்கலைக்கழகத்தில் 2018 ஆம் ஆண்டு 8 பேர், 2019 20 ஆம் ஆண்டுகளில் 2 பேர், 2022 ஆம் ஆண்டு 4 பேர், 2023 ஆம் ஆண்டு தற்போது வரை 9 தற்கொலைகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன.

மேலும் மத்திய பல்கலைக்கழகங்களில் படித்து வரும் மாணவர்களின் தற்கொலைக்கான காரணமாக தேசிய குற்றப் பதிவு ஆணையத்தின் ஆய்வின்படி. வறுமை, தொழில், வேலையின்மை, தனிமை, துஷ்பிரயோகம், வன்முறை, குடும்பப் பிரச்சனை, கல்வி நிலையங்களில் மோதல் மற்றும் மனநல குறைவு ஆகிய காரணத்தினால் மாணவர்கள் தற்கொலைகள் நடந்திருப்பதாக அமைச்சரை தனது பதிலில் குறிப்பிட்டு இருக்கிறார்.

மேலும் தற்கொலை செய்து கொண்டவர்களில் 24 பேர் பட்டியல் சமூகத்தை சேர்ந்தவர்கள், 41 பேர் ஓ. பி. சி. பிரிவை சேர்ந்தவர்கள், 3 பேர் பழங்குடியினர், 3 பேர் சிறுபான்மையினர்கள் என்று ஒன்றிய அரசு தனது ஒப்புதல் வாக்குமூலமாக தந்துள்ளது.

## வன்முறை (தகுதி) தேர்வு:

பலதரப்பட்ட வாய்ப்புகளை உருவாக்காமல், நம்பிக்கையை அளிக்காமல், குறுக்கு வழியில், யதார்த்த சூழலுக்கு மாறாக அதிகாரம் திணிக்கப்பட்டு, போட்டிகள் அதிகமாக இருப்பதால் வடிகட்டும் கருவியாக மட்டுமே தேர்வுகள் பார்க்கப்படுகிறது. இதனால் 2021 ஆம் ஆண்டு வரை நீட், ஜெஇஇ, யூபிஎஸ்சி உள்ளிட்ட பல்வேறு வகையான போட்டித் தேர்வுகளில் தோல்வியுற்ற 13 ,809 மாணவர்கள் தற்கொலை செய்து கொண்டு உள்ளதாக சுகாதாரம் மற்றும் குடும்ப நலன் தொடர்பான நிலை குழு தெரிவித்துள்ளது.

இவற்றையெல்லாம் தடுக்க வேண்டிய அதிகார வர்க்கமே இவற்றுக்கான காரணமாக மாறி இருக்கிறது. இதிலும் குறிப்பாக ஆர். எஸ். எஸ். சின் மாணவர் அமைப்பான ஏ. பி. வி. பி. மூலமாக ஐ. ஐ. டி., ஜே. என். யூ., ஹைதராபாத், அலகாபாத், பூனே, அலிகார், பாண்டிச்சேரி ஆகிய மத்திய பல்கலைக்கழகங்களில் வன்முறையை தூண்டி பாதுகாப்பற்ற கல்வி வளாகமாக மாற்றி இருக்கின்றனர்.

அரசியலில் நாம் தலையிட விட்டாலும் அரசியல் நம் வாழ்வில் தலையிடும் என்பது லெனின் வார்த்தைகள். முட்டாள்களும் பயந்தவர்களுமே மாணவர்களை அரசியல் ஈடுபடக் கூடாது என்று வார்த்தைகளை பயன்படுத்துகின்றனர். தற்கொலை முடிவு கோழைத்தனம். நாம் சாதிக்கப் பிறந்தவர்கள். உண்மையில் நமக்கான அதிகாரத்தை நாம் பேசவில்லை என்றால் நமக்கும் தற்கொலையே மிச்சமாகும். அரசியல் பயில்வோம்! தற்கொலைகளை தடுப்போம்! படிப்பதற்காக போராடுவோம்! போராடுவதற்காக படிப்போம்!

தொடர்புக்கு: 8072132523

# புள்ளிவிவர முறைக்கு கொள்ளி வைத்த மோடி அரசு



த.லெனின்

**பாஜக மோடி அரசு பொறுப்பேற்ற பிறகு இந்தியாவின் புள்ளியல் கணக்கெடுக்கும் முறை பல்வேறு விமர்சனங்களுக்கு ஆட்பட்டு வருகிறது பொதுவாக புள்ளி விவரங்கள் சமூக பொருளாதார வளர்ச்சியை அளவிட பயன்படுகிறது.**

சமூக பொருளாதார புள்ளி விவரங்கள் பொதுவாக பொதுமக்கள் நலன்கள் மற்றும் அரசுகளின் பொறுப்புணர்வு ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு விரிந்த ஜனநாயக நடவடிக்கையாகவே பார்க்கப்படுகிறது.

ஐக்கிய நாடுகள் சபை உலக அளவில் பசி, பட்டினி, பொருளாதார வளர்ச்சி, வறுமை, வேலை இல்லா திண்டாட்டம், ஏழை பணக்காரர் இடைவெளி, ஆண் பெண் விகிதம், மனித வள மேம்பாட்டு குறியீட்டு வளர்ச்சி, கல்வி வளர்ச்சி உட்பட பல கூறுகள் குறித்து ஒவ்வொரு நான்காண்டுக்கு ஒரு முறை கணக்கெடுப்புகளை நடத்துகின்றன இதன் மூலம் நாடுகளுக்கு இடையே உள்ள ஏற்றத்தாழ்வு சமூகங்களுக்கு இடையே உள்ள பொருளாதார சமமின்மை கல்லாமை ஆகியவற்றை குறித்து அக்கறையோடு பேசுகிறது.

உலகமயம் அமல்படுத்தப்பட்ட பிறகு நாடுகளுக்கு இடையே உள்ள ஏற்றத்தாழ்வுகள் வளர்ந்த நாடுகளுக்கு சுரண்டுவதற்கான வாய்ப்புகளை எவ்வாறு அள்ளித் தருகிறது என்பதையும் ஏழை நாடுகள் மற்றும் வளர்ந்து வரும் நாடுகள் எவ்வாறு சுரண்டப்படுகிறது என்பதையும் மிகத் தெளிவாக காட்டுகிறது.

சுதந்திர இந்தியாவில் நேருவின் இடதுசாரி பொருளாதார வாதியான மஹோலனபிஸ்தான் முதன்முதலாக இந்தியாவில் புள்ளியல் துறைக்கான அடிப்படைகளை உருவாக்கினார் இதன் மூலம் வறுமை, வேலையில்லா திண்டாட்டம், ஊரக வளர்ச்சி, நகர்ப்புற வளர்ச்சி, விவசாயம், தொழில் வளர்ச்சி, கல்வி, மருத்துவம், பாலின சமத்துவம், சமூக பொருளாதார வளர்ச்சி, வேலையின்மை ஆகியவை நாட்டின் பேசு பொருளாயின.


சுதந்திரத்திற்கு பிறகான திட்டமிட்ட இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி நாட்டில் போதிய வளர்ச்சியை ஏற்படுத்தவில்லை என்றாலும் ஓரளவிற்கான வளர்ச்சியை ஏற்படுத்தி வந்தது. எண்பதுகளில் அது விரிவடைந்து ஆண்டுக்கு ஒரு கோடி பேருக்கு வேலை வாய்ப்பையும் உற்பத்தி துறையின் விரிவாக்கத்தையும் ஏற்படுத்திற்று.

எழுதப் படிக்காத எண்ணிக்கை படிப்படியாக குறைந்து கல்வி கற்றோரின் எண்ணிக்கை அதிகரிக்க தொடங்கியது. ஆனாலும் இது நிச்சயம் அனைவரையும் விரைந்து முன்னேற்றம் அடைய வைக்கும் வளர்ச்சியாக பரிணமிக்கவில்லை என்பது உண்மைதான்.

ஆனால் மோடி அரசு பதவி ஏற்ற பிறகு இதுவரை நாட்டில் சுதந்திரமாக இயங்கி வந்த பல புள்ளி விவர நிறுவனங்களை ஒன்றன்பின் ஒன்றாக ஒழிக்க தொடங்கியது. தனது வளர்ச்சி நாயகன் என்ற பிம்பத்தை யார் கேள்வி கேட்டாலும் ஏன் ஒன்றிய அரசின் துறைகளாக இருந்தால் கூட அவை இலக்கு வைத்து அழிக்கப்பட்டு வருகின்றன.

## உடைபட்ட ஊட்டச்சத்து நிறுவனம்

ஒன்றிய அரசின் நிறுவனமான தேசிய ஊட்டச்சத்து கண்காணிப்பு அமைப்பு (என் என் எம் பி) கடந்த 2016 ஆம் ஆண்டு இந்தியாவில் ஒவ்வொருவரும் உட்கொள்ளும் தல உணவு விகிதம், கலோரி கணக்கீட்டின் அடிப்படையில் குறைந்துள்ளது என்று தனது முடிவுகளை வெளியிட்டது அனைவருக்கும் அது சுமார் 500 கலோரி குறைவான தல உணவு வீதத்தை இன்று மக்கள் பெற்றுள்ளனர் என்ற செய்தியை வெளியிட்டது நல்ல அரசாக இருந்தால் நாட்டு மக்களின் நலனில் அக்கறை கொண்டு தேசிய அளவில் பொது விநியோகத் திட்டத்தை வலுப்படுத்தி அனைவருக்கும் சத்தான சமச்சீரான உணவு கிடைப்பதற்கான வாய்ப்புகளை உருவாக்கியிருக்கும். ஆனால் நமது மோடி அரசோ! அந்த நிறுவனத்தையே கலைத்துவிட்டு தான் யார் என்பதை காட்டியிருக்கிறது.



## பாதுகாக்கப்பட்ட குடிநீர்

அடுத்து மோடி மிகப் பெருமையாக பேசும் 'அனைவருக்கும் குடிநீர்' என்கிற திட்டம் ஜல் ஜீவன் மிஷன் கடந்த 2023 மார்ச் சோடு அதன் அலுவல் தகவல் நாட்டில் 54 சதம் ஊரகப்பகுதி வீடுகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டு விட்டதாக பெருமை பேசிக்கொண்டு இருக்கிறது. ஆனால் தேசிய குடும்ப நல ஆய்வு என் எஃப் எச் எஸ் 5 கணக்கெடுப்பு 22.6 சதம் மக்களுக்குத் தான் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது என்று சொல்கிறது. என். எஸ். எஸ். 21.6% என்று அரசின் நிறுவனங்கள் கூறும் நிலையில் அமைச்சகம் மிக மிக அதிகப்படுத்தி கூறியிருப்பது வெட்ட வெளிச்சத்திற்கு வந்திருக்கிறது.

## ஸ்வாச் பாரத்

ஒன்றிய அரசின் 'தூய்மை இந்தியா திட்டம்' ஸ்வச் பாரத் இது திறந்தவெளி மலம் கழிப்பவர்களின் எண்ணிக்கையை குறைத்து 93.5% வீடுகளிலேயே கழிப்பிட வசதி ஏற்படுத்திவிட்டதாக பெருமை பேசுகிறது ஆனால் தேசிய மாதிரி கணக்கெடுப்பு நிறுவனம் (NSS) 71.3% என்று NFHS 71% என்றும் கூறிவரும் நிலையில் இவ்வளவு அதிகரித்து காட்டுவதன் காரணம் என்ன?

அதுபோலவே அனைத்து கிராம வீடுகளுக்கும் மின் வசதி 100 சதம் முடிந்துவிட்டது என்று தம்பட்டம் அடித்துக் கொண்டது. ஆனால் கடந்த காங்கிரஸ் ஆட்சி காலத்திலேயே 95% ஏற்கனவே முடிந்துவிட்ட நிலையில் இப்போது 97 % நிறைவேற்றப்பட்டு இருக்கிறது என்கிற செய்தி இவர்களின் உண்மை முகத்தை வெளிப்படுத்தி இருக்கிறது.

## புதிய வங்கி கணக்குகள்

அதுபோலவே புதிய வங்கி கணக்குகள் குறித்தும் மிக அதீத கணக்கெடுப்பை அரசு அறிவித்துள்ளது கடந்த 2014 ஆம் ஆண்டு உலக வங்கி கணக்கெடுப்பின்படி 53% மக்கள் வங்கிக் கணக்குகளை கொண்டிருந்தனர் இது 2017 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் 80% வங்கி கணக்குகளை தொடங்கி விட்டதாக தம்பட்டம் அடித்துக் கொள்கிறது. ஆனால் இதில் 38% செயல்படாத வங்கி கணக்குகளாக இருக்கிறது என்பதும் இது உலக அளவில் ஒப்பிட்டு பார்க்கிற போது மிக அதிக எண்ணிக்கையிலான சதவீதத்திலான செயல்படாத வங்கி கணக்கு என்பதையும் உலக வங்கி கண்டறிந்து இருக்கிறது. ஜன்தன் வங்கி கணக்குகள் அதாவது எந்த பணமும் இன்றி கூட வங்கி கணக்கை துவங்கலாம் என்ற அறிவிப்பின்படி உண்மையில் எண்ணிக்கை அதிகம் காட்டுவதற்காக ஒன்றிய அரசின் அதிகாரிகள் செய்த சூழ்ச்சியின் அடிப்படையில்தான் இந்த திட்டம் உருவாக்கப்பட்டது இதில் கூட பெண்களின் வங்கி கணக்கு செயல்படாத கணக்காக 32% ஆண்களுக்கு 27% இருக்கிறது என்பதையும் பார்த்தால் அனைவருக்கும் வங்கி கணக்கு எங்கே தொங்கிக் கொண்டிருக்கிறது என்பதையும் நாம் அறியலாம் .

## டிஜிட்டல் பரிவர்த்தனை

யுபிஐ பரிவர்த்தனை அல்லது டிஜிட்டல் பரிவர்த்தனைகள் மூலம் பண பட்டுவாடா இந்தியாவில்தான் அதிகம் நடக்கிறது என்று பெருமை பேசுகின்றனர். ஆனால் கடந்த 2021 ஆம் ஆண்டு இது 35% ஆக உயர்ந்துள்ளது கடந்த 2014 ல் இது 22% ஆக இருந்தது அது 2017 ஆம் ஆண்டு 29% ஆகவும் படிப்படியாக உயர்ந்தது இதில் வளர்ந்த நாடுகளின் டிஜிட்டல் பரிமாற்றம் 64% ஆகும். உலக சராசரி 57% ஆகும் என்பதை கருத்தில் கொண்டால் நாம் எங்கே இருக்கிறோம் என்பது தெரியவரும்.

## ஜிடிபி யை அதிகப்படுத்தி காட்டும் அரசு

நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சி (ஜிடிபி) மோடி ஆட்சி காலத்தில்தான் மிகப்பெரிய அளவிற்கு வளர்ச்சி கண்டிருக்கிறது என்று அவரது பக்தர்கள் பெரும் கூச்சலிடுகின்றனர் ஆனால் உண்மை என்ன நாட்டின் பொருளாதார வளர்ச்சியை அளவிட 2004 மற்றும் 2005 ஆம் ஆண்டை அடிப்படை ஆண்டாக கொண்டு கணக்கிடும் முறையை மாற்றி 201112 ஆம் ஆண்டை அடிப்படையாகக் கொண்டு ஒன்றிய அரசின் புள்ளிவிவரத்துறை மக்கள் வருமானம் செலவு குறித்த தேசிய அறிக்கையை வெளியிட்டு இருக்கிறது அதன்படி ஜிடிபி ஆண்டு வளர்ச்சி புதிய முறைப்படி 6.2% ஆகும். ஆனால் பழைய முறைப்படி 4.8% தான் உண்மையான வளர்ச்சியாகும். புதிய முறையில் உற்பத்தி துறையின் வளர்ச்சி 5.3% என்று உயர்த்தி காட்டப்படுகிறது. ஆனால் பழைய முறையில் அது வெறும் 0.7%தான் ஆகும். உண்மை இங்கே இருக்கிறது ஊதி காட்டும் பொய் எவ்வளவு பெரிய அளவிற்கு இருக்கிறது என்பதை இதன் மூலம் நாம் அறிய முடியும்.

தேசிய மாதிரி கணக்கெடுப்பு நிறுவனம் NSSO வேலையின்மை குறித்து ஆய்வுகளை மேற்கொண்டது. கடந்த 201718 கால அளவிலான தொழில்கள் தொடர்பு குறித்து ஆய்வு (பிஎல்எஃப்எஸ்) குடும்பங்களுக்கான செலவு குறித்த ஆய்வுகளை நடத்தியது. இதன் மூலம் கடந்த 40 ஆண்டுகளில் இல்லாத அளவில் வேலையற்றோர் எண்ணிக்கை 8.35% அதிகரித்து விட்டதாக கூறியது. ஏற்கனவே வேலையில் இருந்தவர்கள் சுமார் 2 கோடி பேர் வேலை வாய்ப்பு இழந்துவிட்டனர் என்றும் கூறியது. ஆனால் ஒன்றிய அரசு 6 கோடி பேருக்கு புதிய வேலைவாய்ப்பு தந்ததாக தனது அமைச்சகத்தின் மூலம் அறிவித்துக் கொண்டு பம்மாத்து செய்து வருகிறது.

## பன்முக வறுமை குறைப்பு

பன்முக வறுமை குறைப்பு குறியீட்டு எண்ணிக்கை மூலம் சுமார் 13.5 கோடி மக்கள் வறுமையில் இருந்து வெளியேறி விட்டதாக அரசின் நிதி ஆயோக் அறிவித்திருக்கிறது. ஆனால் உண்மை நிலை என்ன?

கடந்த 1972 மற்றும் 73 ஆம் ஆண்டுக்குப் பின் முதல் முறையாக தனி மனிதனின் மாதம் செலவிடும் அளவு குறைந்து இருக்கிறது. பணவீக்கத்தை கணக்கில் கொண்டால் உண்மை செலவு அளவு கடந்த 201112 ல் 1501 ரூபாயாக இருந்தது இது 201718 ல் 1446 ரூபாயாக அதாவது 3.7% ஆக குறைந்துவிட்டது. இதுவே ஊரகப் பகுதிகளில் தனி மனித செலவு 8.8% எதிர்மறையில் குறைந்தும் நகர்ப்புறத்தில் வெறும் 2% ஆக அதிகரித்தும் உள்ளது என்பதை கருத்தில் கொண்டால் இவர்களது பன்னோக்கு வறுமை ஒழிப்பு வறுமையை ஒழிக்கவில்லை. மாறாக ஆட்களின் எண்ணிக்கை தான் ஒழித்து இருக்கிறது என்பது தெளிவாகும்.

எனவே மக்களுக்கு தெரிய வேண்டிய உண்மையான புள்ளி விவரங்களை கூட மாற்றி அமைத்து பொய்யையும் புனைச்சுருட்டையும் மக்களிடம் பரப்பும் இந்த பாசிச பாஜகவை அகற்ற இந்தியாவே இன்று தயாராக வேண்டிய அவசியம் இருக்கிறது. நாட்டின் ஜனநாயக நிறுவனங்கள் ஒவ்வொன்றும் பாஜக வின் பிரச்சாரத்திற்காக இன்று அழிக்கப்பட்டு வருகின்றன அல்லது முடக்கப்பட்டு வருகின்றன. உண்மையான இந்திய ஜனநாயகத்தை மீட்டெடுக்க ஜனநாயக நிறுவனங்களை காப்பாற்ற நாம் அனைவரும் ஒன்றிணைந்து போராடுவது அவசியம். காலம் இட்ட இப் பணியை நிறைவேற்ற களத்தில் இறங்கிட தயாராவோம்.

தொடர்புக்கு: 9444481703



அருண் நெடுஞ்செழியன்

# சுற்றுச்சூழல் பிரச்சனைக்கு மார்க்சியம் தீர்வு காணும்!

**அண்மைக்கால சூழலியல் சிக்கல்களை மார்க்சிய விமர்சன நோக்கில் அணுகும் போது, நமது சூழல்வாதிகள் மார்க்சியர்களை நோக்கி சில விமர்சனங்களை முன்வைக்கின்றனர். இவற்றில் முக்கியமானவற்றைப் பார்க்கலாம்.**

முதலாவதாக, மார்க்சிய தத்துவமானது ஐரோப்பிய சமூகத்தை ஆய்வு செய்து முன்வைத்த கோட்பாடு; அது இந்தியாவிற்குப் பொருந்தாது. இரண்டாவதாக, மார்க்சின் முதலாளித்துவ பகுப்பாய்வானது, வர்க்கப் போராட்டத்தை மட்டுமே அடிப்படையாகக் கொண்டது. இதனால் மார்க்சியத்தின் வழியே சமகால சூழலியல் சிக்கல்களை பாகுப்பாய்வு செய்ய இயலாது என்பதாகும்.

இவ்வாறாக மார்க்சை முன்வைத்தும், மார்க்சியத்தை முன்வைத்தும் நவீன பொருளாதார அறிஞர்கள், சூழலியல் வாதிகள் போன்றவர்கள் விமர்சனங்களை முன்வைக்கின்றனர்.

ஆனால் உண்மை என்னவோ இவர்களின் கூற்றுக்கு நேர்மாறாக உள்ளது. அதாவது முன்னைபைவிட மார்க்சின் வாதங்கள் தற்போதைய நெருக்கடி நிலையில் முக்கியத் தேவையாக உள்ளது. மார்க்சியத்தின் எதிரிகளே தற்போது மார்க்சை ஏற்றுக்கொள்கிற கட்டாயத்திற்கு தள்ளப்பட்டிருக்கின்றனர். உதாரணமாக 2008 ஆம் ஆண்டில், இத்தாலி, ஸ்பெயின் போன்ற நாடுகளில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியானது உலகின் புதிய அடுக்கை குலைப்பதாக அமைந்தது. பொதுவாக சந்தையின் உள்ளார்ந்த விதிகளே மாயவித்தைகள் செய்து அனைத்து சிக்கல்களையும் தீர்த்துவிடும் என கட்டியம் கூறி வந்த முதலாளித்துவ அறிவுஜீவிகள் விழி பிதுங்கி நின்றனர்.

### மார்க்ஸ் ஏன் தேவை:

இன்றைய முதலாளித்துவத்தின் வளர்ச்சியானது உழைப்புச் சுரண்டலிலும் இயற்கை வளச் சுரண்டலிலும் முன்னைபைவிட மிக வலுவாக கொள்ளையடிக்கிற அமைப்பாக தாழ்ந்துவிட்டது. இதில் ஐரோப்பிய கண்டமோ, ஆசியா கண்டமோ, ஆப்பிரிக்க கண்டமோ விதிவிலக்கல்ல. நாட்டின் கனிமவளங்களை வரைமுறையற்ற வகையில் கொள்ளையடிப்பது, ஆபத்தான




இத்தாலி - இல்வா ஆலை



இந்தியா - ஸ்டெர்லைட் ஆலை

நச்சுக் கழிவுகளை நிலத்திலும் நீரிலும் காற்றிலும் கலந்து சூழலுக்கு கேடு விளைவுப்பது ஆகிய சூழலியல் சீர்கேடுகள் இன்று அனைத்து நாடுகளும் எதிர்கொண்டு வருகின்ற பிரச்சனைகள் ஆகும். தமிழ்நாட்டில் ஸ்டெர்லைட் ஆலை என்றால், இத்தாலியில் இல்வா ஆலை; இங்கே கூடங்குளம் அணு உலை என்றால் ஜப்பானில் புகுசிமா அணு உலை. இந்தியாவிலே அதானி நிறுவனம் காடழித்து நிலக்கரி எடுக்கிறது என்றால், ஆஸ்திரேலியாவில் ரியோ டின்டோ நிறுவனம் அதைச் செய்கிறது. ஆக, பன்னாட்டு கார்ப்பரேட் நிறுவனங்கள் உலகின் எல்லைகளுக்கு அப்பாற்பட்டு இயற்கை வளங்களை சுரண்டுவதிலும் கேடு விளைவிப்பதிலும் ஒரே விதமாக செயல்பட்டு வருகின்றனர். கார்ப்பரேட்டுகளுக்கு எதிராக அமேசான் காடுகளைக் காப்பாற்ற போராடிய சூழல் போராளிகளும் இந்தியாவில் கனிம வளக் கொள்ளைக்கு எதிராகப் போராடிய சூழலியல்வாதிகளும் ஒரே காரணத்திற்காகப் படுகொலை செய்யப்படுகிறார்கள். உலகெங்கிலும் முதலாளித்துவ உற்பத்தி முறையின் கோர வடிவம் ஒரே விதமாகத் தான் உள்ளது.

மார்க்சின் முக்கிய பங்களிப்பே முதலாளித்துவ அமைப்பின் இந்தக் கோர முகத்தை, அதனது அராஜகத்தை அறிவியல் பூர்வமாக அம்பலப்படுத்தியதாகும். முதலாளித்துவ திறனாய்வை மார்க்சைத் தவிர்த்து வலுவாகவும், ஆழமாகவும்



மைக்கேல் லெபோவிட்ஸ்

இதுவரை எவரும் முன்வைத்ததில்லை என்று உறுதியாகச் சொல்லலாம். முதலாளித்துவ அமைப்புகுறித்த மார்க்சின் பகுப்பாய்வு மட்டும் நமக்கு இல்லாமல் போனால், முதலாளித்துவ அமைப்புக்குள் வாழத் தலைப்பட்ட மக்களுக்கு அது குறித்த புரிதல் இல்லாமலே போயிருக்கும். குறிப்பாக முதலாளித்துவத்தின் "பொருளாதார இயக்க விதிகளை" மூலதனம் நூலின் வாயிலாக மார்க்ஸ் விளக்காமல் விட்டிருந்தால், முதலாளித்துவ அமைப்பின் முக்கியப் போக்கான அதன் "இயக்கத்தை" புரிந்துகொள்வது என்பது, நவீன மனித சமூகத்திற்கு சாத்தியப்படாமலேயே போயிருக்கலாம்.

மார்க்சியம் மற்றும் மார்க்ஸ் மீதான விமர்சனங்களுக்கான நமது பதில் எளிதாகப் புரிந்துகொள்ளும் வகையிலானது. அது வர்க்கச் சுரண்டல் மற்றும் சூழலியல் சிக்கல்களைப் பேசுவதாகும். அப்பதிலை நாமொரு பொருளாதார மார்க்சியரின் வழி நின்று சொன்னால் இன்னும் பொருத்தமுடையதாக இருக்கும். "மூலதனத்திற்கு அப்பால்" எனும் தனது நூலின் முதல் பகுதியே "மார்க்ஸ் எதற்காக?" என்ற தலைப்பில் மூலதனத்தின் வரலாற்றை, பொருளாதார மார்க்சியரான மைக்கேல் லெபோவிட்ஸ் விரிந்துரைக்கிறார்.

மார்க்சியத்தை நாம் பொருளாதார கோட்பாடு அளவோடு சுருக்க முடியாது. சுரண்டலை மையப்படுத்திய சமூகத்தையோ, முழு வளர்ச்சியை நோக்கிய மனித ஆற்றலை கட்டுப்படுத்தும் விதத்திலான சமூகத்தையோ மார்க்சியம் நிராகரிக்கும். மனிதனின் தேவைக்காக அல்லாமல் தனியாரின் லாபத்திற்கான வர்க்கச் சார்பாக எடுக்கப்படுகிற சமூக முடிவுகளுக்காக முதலாளித்துவத்தை மார்க்சியம் எதிர்க்கிறது. அதன் லாப நோக்க உற்பத்தி முறைக்காக இயற்கை வளங்களை, மனித வளங்களை சிதைப்பதும், பாலின, மொழி பாகுபாட்டினை தொடர்ச்சியாக அதிகரிக்கச் செய்வதும் முதலாளித்துவத்தின் இயல்பான போக்காக மார்க்சியம் பார்ப்பதால் மட்டுமே அதற்கெதிராகப் போராட வலியுறுத்துகிறது.

### முதலாளித்துவத்தின் பொருளாதார 'வளர்ச்சி மாதிரி'

இன்று உலக நாடுகளின் பொருளாதாரத்தை தீர்மானிக்கும் சக்தியாக உலக நிதி மூலதனமே திகழ்கிறது. பன்னாட்டு நிதியம், உலக வங்கி போன்ற உலக தழுவிய கட்டமைப்புகள் மூலமாக எந்த நாட்டிலும் தலையிட முடிகிறது. நலிவடைந்துள்ள நாடுகளோ தனது நாட்டின் பொருளாதார கட்டுப்பாட்டை உலக நிதி மூலதனத்திடம் இழந்து, அதற்கிசைவான நோக்கத்திற்காகச் செயல்படும் அளவோடு சுருங்கிவிட்டது. ஆகவே இன்றைய சமூகம் மற்றும் சூழலியல் சிக்கல்களுக்கு காரணமாக இருகின்ற முதலாளியத்தின் லாப நோக்க உற்பத்தி முறையை, அதனால் கட்டுப்படுத்த இயலவில்லை. அதனால்தான் ஐ.நா.வின் காலநிலை மாநாட்டுத் தீர்மானங்களால் சூழலியல் அழிவுகளை தடுத்து நிறுத்த இயலவில்லை. இதை மார்க்சியர்களால் மட்டுமே உள்ளது உள்ளவாறு விளக்க முடியும்.

இன்றைய நவீன முதலாளித்துவக் கட்டத்தில் பொருளாதாரமே, அரசியலை தீர்மானிக்கிற சக்தியாக உருவெடுத்துள்ளது. இதற்கு முந்தைய சமூகக் கட்டங்களில் அரசியல் அதிகாரமே பொருளாதாரத்தை கட்டுப்படுத்துவதாக இருந்தது. அதாவது ஒரு பேரரசுக்கு திறை செலுத்தும் சிற்றரசுகள் போன்ற மையப்படுத்தப்பட்ட அரசமைப்பில் பொருளாதாரம் அரசியல் ஆளுமைக்கு உட்பட்டு இருந்தது. அதன் பின்னான வணிக மூலதன காலகட்டத்திலும் இதுவே தொடர்ந்தது. ஆனால் இன்றோ இதற்கு நேர்மாறான நிலையே நிலவுகிறது. அதனாலேயே இன்று உழைக்கும் வர்க்கமும், இயற்கை வளங்களும் முதலாளித்துவத்தின் லாப நோக்க உற்பத்தி முறைக்காக சுரண்டப்படுகிறது.

முதலாளித்துவ சமூகத்தால் வளர்த்தெடுக்கப்பட்ட இப்பொருளாதார அம்சம்குறித்து, பொருளாதார மார்க்சியரான சமீர் அமீன் கூறுவதாவது, "பொருளாதாரம் என்னும் வார்த்தைக்கு அதிக அழுத்தம் முதலாளியத்தால் வழங்கப்பட்டதாகும்; முதலாளியத்திற்கு முந்திய சமுதாய அமைப்புகளில் அரசியலும், சித்தாந்தமும் ஆதிக்க நிலையில் இருந்தன. ஆனால் முதலாளியம் பொருளாதாரத்திற்கு ஆதிக்க நிலையை அளித்தது. அதாவது முந்தைய அமைப்புகளில் அரசியலும், சித்தாந்தமும் ஆதிகத்தின் மூலாதாரங்களாக அமைந்தன. ஆனால் முதலாளியத்தில் செல்வமே அதிகாரத்தின் அடிப்படை. வேறு வகையில் கூறினால், மதிப்பு விதி முதலாளியத்தின் பொருளாதார அம்சத்தை மட்டும் அல்லாமல் அதனுடைய சமூக வாழ்வின் அனைத்து அம்சங்களையும் ஆள்கிறது."

இதனால்தான் சொல்கிறோம், முதலாளித்துவத்திற்கு எதிராகப் போராட, முதலாளித்துவத்துக்கு மாற்றான சமூகத்தைக் கட்டியெழுப்ப நம்முன் உள்ள ஒரே வாய்ப்பு மார்க்சியம் மட்டுமே. ஏனெனில், மார்க்சியம் மட்டுமே மனித இனத்தின் நீடித்த வளர்ச்சிக்கான மாற்று முகாமை காட்டுகிற தத்துவமாக உள்ளது.

தொடர்புக்கு: 9842391963



## சுமையல்ல; என் சகோதரன்

இரண்டாம் உலகப் போரின் போது 1945ல் அமெரிக்க புகைப்படக் கலைஞர் ஜோ ஓ டோனல் என்பவர் எடுத்த புகைப்படம்.

ஒரு ஜப்பானிய சிறுவன் ஒரு தகனம் / அடக்கம் செய்யும் இடத்தில், இறந்த தனது சிறிய சகோதரனை ப்ரியமாக சுமந்து கொண்டு வரிசையில் நிற்கிறான்.

அழக்கூடாது என்ற வைராக்கியத்துடன் கண்ணீரைக் கட்டுப்படுத்த தனது உதடுகளைக் கடினமாகக் கடித்ததால் வழியும் இரத்தம் சிறுவனின் வாயின் ஓரத்தில் சொட்டுகிறது.

"நீ பையில் சுமக்கும் சுமையை என்னிடம் கொடு" என்று காவலர் கேட்டபோது, "சுமப்பதற்கு கடினமாக உணர இது சரக்கு அல்ல, என் சகோதரன்" என்று சிறுவன் பதில் அளித்ததாக புகைப்படம் எடுத்தவர் பதிவு செய்திருக்கிறார்.

இன்றைக்கும் ஜப்பானில், இந்த புகைப்படம் வலிமையின் அடையாளமாக பயன்படுத்தப்படுகிறதாம்.

ஆம், எதை சுமக்கிறோம் என்பதல்ல;

அதை எவ்வாறு உணர்கிறோம் என்பது முக்கியம்.

பணம் காசுகளுக்காக உறவினரை ஏமாற்றும்,

உடன்பிறந்தவரை துண்டிக்கும் இன்றைய தலைமுறைக்கு இது ஒரு பாடமாகவே இருக்கிறது...

– முகநூல் பதிவர்



வ.மணிமாறன்

**அமலாக்க துறையும் (ED) பண மோசடி தடுப்புச் சட்டமும் (PMLA) எதிர்க்கட்சித் தலைவர்கள் பலரின் தூக்கத்தை கெடுத்திருக்கிறது. ஒன்றிய பாஜக அரசு ஆயுதமாகப் பயன்படுத்தி வரும் இந்தச் சட்டம், ஜனநாயக நாட்டிற்கு உகந்தது அல்ல என்ற எதிர்ப்பும் வலுத்து வருகிறது.**

# அமலாக்கத்துறையின் அடாவடிகள்! எதிர்க்கட்சிகள் என்ன செய்ய வேண்டும்?

அமலாக்க இயக்குநரகத்தின் (ED) திறனை வலுப்படுத்த அவசியம் என்று சொல்லியே ஒன்றிய பாஜக அரசு கொண்டு வந்த சட்ட திருத்தங்கள் பண மோசடி தடுப்புச் சட்டத்தை கொடூரமானதாக மாற்றியுள்ளது. தடா, பொடா சட்டங்களை விட கடுமையான விதிகளைக் கொண்டுள்ளது. அரசியலமைப்பு சட்டம் வழங்கியுள்ள அடிப்படை உரிமைகளுக்கு எதிரான, மிகையான அதிகாரங்கள் கொண்டதாக அமலாக்க இயக்குநரகம் மாறியுள்ளது. இதனை ஏவி விட்டு, எதிர்க்கட்சிகளை பிளவுபடுத்துவது, அவர்களில் ஒரு பகுதியினரை சேர்த்துக் கொண்டு மாநில அரசுகளை கைப்பற்றுவது போன்ற ஜனநாயக விரோத நடவடிக்கைகளில் மோடி அரசு ஈடுபட்டு வருகிறது.

பண மோசடி தடுப்புச் சட்டத்தின் (PMLA)கீழ் அமலாக்க இயக்குநரகத்தின் (ED) செயல்பாடுகள், இயற்கை நீதிக்கு எதிரானதாகும். குற்றவியல் நடைமுறை சட்டப்படி (CrPC), எந்த நபரும். குற்றம் நிரூபிக்கப்படும் வரை குற்றம் சாட்டப்பட்டவர்தானே தவிர குற்றவாளி கிடையாது. ஆனால், பண மோசடி தடுப்புச் சட்டத்தின் பிரிவுகள் 22, 23 மற்றும் 45 ஆகியவை இதனை மீறுகிறது. இந்தப் பிரிவுகள் குற்றம் சாட்டப்பட்டவர் மீதே, தான் குற்றமற்றவர் என்பதை நிரூபிக்கும் பொறுப்பை சுமத்துகின்றன. இவை நியாயமான விசாரணைக்கான வாய்ப்புகளை, உரிமைகளை பறித்து விடுகின்றன.

காவல்துறை ஒருவரை கைது செய்வதற்கோ, அவருடைய வீடு மற்றும் அலுவலகங்களில் ஆய்வு செய்வதற்கோ குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின்படி திட்டவட்டமான விதிகளும் நீதிமன்றக் கண்காணிப்புகளும் உள்ளன. ஆனால் அமலாக்க இயக்குநரகம் கைது செய்வது; ஆய்வு மேற்கொள்வது போன்றவற்றுக்கு விதிமுறைகளோ, நீதிமன்றக் கண்காணிப்போ கிடையாது. இதனால் குற்றம்சாட்டப்பட்டவர் தனக்கு எதிரான நடவடிக்கைகள் பற்றியோ, தன்னைச் சுற்றி என்ன நடக்கிறது என்பதையோ அறிந்து கொள்ள முடியாது. அதற்கான சட்ட உரிமைகளை பண மோசடி தடுப்புச் சட்ட விதிகள் பறித்து விடுகின்றன.

இதனால், 'அமலாக்க வழக்குத் தகவல் அறிக்கை' (Enforcement Case Information Report - ECIR) என்று கூறப்படும் அமலாக்க இயக்குநரகத்தின் முதல் தகவல் அறிக்கையைப் பெற ஒருவர் காத்திருந்தாக வேண்டும். அதனைப் பெற்று, தன் மீதான குற்றச்சாட்டுகள் என்ன? என்பதை தெரிந்து கொள்வதுடன், தான் குற்றமற்றவர் என்பதை நிரூபிக்க முயற்சிக்க வேண்டும்.

'அமலாக்க வழக்குத் தகவல் அறிக்கை' (ECIR) அடிப்படையில் அமலாக்கத்துறை, குற்றம்சாட்டப்பட்ட நபர்களை வரவழைத்து நிதிப் பரிமாற்ற விவரங்களைப் பெற முடியும். பண மோசடி தடுப்புச் சட்டத்தின் கீழ் சொத்துக்களை சட்டப்படி கையகப்படுத்த முடியும். இதுபோன்ற மிகையான சட்ட விதிகளைக் கொண்டிருந்தாலும், கடந்த ஆறு ஆண்டுகளில் 888 வழக்குகளில்தான் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அவற்றில் 23 வழக்குகளில்தான் தண்டனை உறுதி செய்யப்பட்டுள்ளது. அதாவது 2.59 விழுக்காடு வழக்குகளில்தான் தண்டனை பெற்றுத்தர முடிந்திருக்கிறது.

நாடாளுமன்ற மக்களவையில் கடந்த மார்ச் மாதம், அமலாக்கத்துறை குறித்த கேள்வி ஒன்றுக்கு நிதியமைச்சகம் அளித்த பதில் வருமாறு: 2004 முதல் 2014 ஆம் ஆண்டு வரையிலான பத்தாண்டில், பண மோசடி வழக்குகளை விசாரிப்பதற்காக 112 சோதனைகளை அமலாக்க இயக்குநரகம் நடத்தியுள்ளது. இதற்கு அடுத்த 8 ஆண்டுகளில் இந்த எண்ணிக்கை 26 மடங்கு அதிகரித்து, 2,974 சோதனைகளை மேற்கொண்டுள்ளது.

காவல்துறை முதல் தகவல் அறிக்கை (எஃப்ஐஆர்) பதிவு செய்வது போல், அமலாக்க இயக்குநரகம் புகார்களை பதிவு செய்வதை அமலாக்க வழக்கு தகவல் அறிக்கை (ECIR) என்று கூறுவர். இந்த அமலாக்க வழக்கு தகவல் அறிக்கை பதிவு செய்து, நீதிமன்றத்திற்கு கொண்டு செல்லப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 104 ஆக இருந்தது, எட்டு மடங்கு அதிகரித்து 839 ஆக அதிகரித்துள்ளது. 2014ல் அமலாக்கத்துறை நடத்திய ஆய்வுகள் 112 மட்டுமே. 2022ஆம் ஆண்டில் அமலாக்கத்துறை 3 ஆயிரம் ஆய்வுகளை மேற்கொண்டுள்ளது. அதாவது 27 மடங்கு அதிகரித்துள்ளது.

அமலாக்கத்துறையால் இணைக்கப்பட்ட சொத்துக்களின் மதிப்பு ரூ.5,346 கோடியாக இருந்தது, ரூ. 95,432 கோடியாக உயர்ந்துள்ளது. பண மோசடி தடுப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்த 2005 முதல் 2022 ஆம் ஆண்டு வரை 4,700 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவற்றில் கடந்த ஐந்து ஆண்டுகளில் மட்டும் 2,186 வழக்குகள், அதாவது பாதிக்கும் மேற்பட்ட வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஆனால், பண மோசடி தடுப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்து 17 ஆண்டுகளில், 23 பேர் மட்டுமே தண்டிக்கப்பட்டுள்ளனர்.

எதிர்க்கட்சிகளையும், அரசை விமர்சிப்பவர்களையும் மிரட்டிப் பணிய வைக்க, பண மோசடி தடுப்புச் சட்டத்தை மோடி அரசு எப்படி பயன்படுத்தி வருகிறது என்பதற்கு இந்தப் புள்ளிவிவரங்களே சான்றாகும்.

காங்கிரஸ் கட்சி ஆட்சியில் இருந்த போது, 'தடா', 'பொடா' போன்ற கருப்புச் சட்டங்களைக் கொண்டு வந்து அடக்குமுறைகளை ஏவி விட்டுள்ளது. இந்த கருப்பு சட்டங்களில் பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை மிக அதிகமாக இருந்த போதும், அவற்றில் மிகக் குறைவான வழக்குகளிலேயே தண்டனைகளைப் பெற்றுத் தர முடிந்தது. இது போன்ற கருப்புச் சட்டங்களை எதிர்ப்பதில் அரசியல் கட்சிகள் இரட்டை நிலையையே மேற்கொள்கின்றன.




ப.சிதம்பரம் ஒன்றிய உள்துறை அமைச்சராக இருந்தபோது, அமலாக்க இயக்குநரகத்தின் (ED) கீழ் பல்வேறு சட்டப்பிரிவுகளைக் கொண்டு வந்து, அதிகாரங்களை விரிவுபடுத்தினார். அவர் விரிவுபடுத்திய அதிகாரங்களைக் கொண்டே அமலாக்கத்துறை, அவரைக் கைது செய்து 106 நாட்கள் சிறையில் அடைத்தது. சில மூத்த அரசியல் தலைவர்களுக்கு எதிரான அமலாக்கத் துறையின் புகார்கள் அடிப்படை ஆதாரம் அற்றவை என்பது உண்மைதான். அமலாக்கத்துறை மீதான இந்தக் குற்றச்சாட்டை உரிய முறையில் எதிர்க்கட்சிகள் நிறுவ வேண்டும். இந்தப் பணியை நீதிமன்றங்களிடம், அதன் நீண்ட விசாரணைகளுக்குள் தள்ளி விடுவது சரியான அணுகுமுறை அல்ல.

நாடாளுமன்றத்தில் இந்தப் பிரச்சினைகளை எதிர்க்கட்சிகள் எழுப்ப வேண்டும். அமலாக்கத் துறைக்கு அதீத அதிகாரம் அளிக்கும் சட்டப்பிரிவுகளை, கடுமையான விதிகளை அம்பலப்படுத்த வேண்டும். நாடாளுமன்றத்தில் உரிய சட்டத் திருத்தங்கள் கொண்டு வந்து, அதனை நீக்கச் செய்திட வேண்டும். அமலாக்கத்துறை ஆய்வு நடத்துவதற்கு எதிராக எதிர்க்கட்சிகள் கூக்குரல் இடுவதாலோ கண்டிப்பதாலோ கருப்புச் சட்டங்கள் நீங்கி விடாது. நாடாளுமன்றத்திற்கு உள்ளும் வெளியிலும் அவற்றுக்கு எதிரான போராட்டத்தை வலுவாக முன்னெடுக்க வேண்டும்.

தொடர்புக்கு: 9500001224

# டெல்லி சேவைகள் சட்ட மசோதா

## துரோகம்! மன்னிக்க முடியாத துரோகம்! கே.சுப்பராயன் எம்.பி. ஆவேசம்



மாநில உரிமைகளைப் பறிக்கும் பாஜக அரசின் சட்டமுன்வடிவை அஇஅதிமுக ஆதரித்து வாக்களித்து விட்டது !?

அவமானம்! அழிக்க முடியாத துரோகக்கறை!

அண்ணா முன்வைத்து முழங்கிய மாநில உரிமைப்போரை கைவிட்டு, பாஜகவிடம் மண்டியிட்டுவிட்டது அஇஅதிமுக !?

இனி எதற்கு கட்சியில் அண்ணாவின் பெயர்?

இனி எதற்கு மாநில சுயாட்சியை முன்வைத்த 'திராவிட' என்ற பெயர்?


எம்ஜியார், ஜெயலலிதா பெயரை உச்சரிக்கிற தார்மீகத் தகுதியைக் கூட இழந்துவிட்டனர்!

அஇஅதிமுக என்ற பெயரை எடப்பாடியாரும், அவரது வகையறாக்களும் கைவிட்டுவிட்டனர்! தற்போது, மோடி முன்னேற்றக் கழகமாக நடைமுறையில் மாறிவிட்டது!

இனி அதன் பெயர் மோமுகதான்!

தமிழ்நாட்டுப் பெருமக்களே, பாஜகவையும், அதன் கொத்தடிமைக் கூடாரமான அஇஅதிமுகவையும் தோற்கடிக்க அணிதிரள்வதே காலத்தின் கட்டளை!

## கூட்டாட்சி தத்துவத்தின் மீதான தாக்குதல்: திருச்சி சிவா எம்.பி. சாடல்



டெல்லி சேவைகள் சட்ட மசோதா, எதிர்க்கட்சிகளின் கடும் எதிர்ப்பையும் மீறி நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் நிறைவேற்றப்பட்டுள்ளது. மாநிலங்களவையில் இந்த மசோதா மீதான விவாதத்தில் பங்கேற்றுப் பேசிய திமுக நாடாளுமன்ற உறுப்பினர் திருச்சி சிவா,

உச்சநீதிமன்ற உத்தரவை மீறும் வகையில் டெல்லி சேவைகள் சட்ட மசோதா உள்ளது. டெல்லிக்கு முழு மாநிலத் தகுதி வழங்குவோம் என பாஜக அரசு கூறியிருந்த நிலையில், தற்போது இந்த சட்ட மசோதாவை கொண்டு வர வேண்டிய அவசியம் என்ன? என்று கேள்வி எழுப்பினார்.

"இது ஜனநாயகத்திற்கு விரோதமானது மட்டுமின்றி, அரசியல் சாசனத்திற்கும், கூட்டாட்சி தத்துவத்திற்கும் எதிரானது. மாநில அரசுகள் எதிர்கட்சிகளால் ஆளப்படும் போது, ஆளுநர்களால் இடையூறு செய்யப்படுகின்றன. யூனியன் பிரதேசமாக இருந்தால், துணைநிலை ஆளுநர்கள் மாநில அரசை செயல்பட விடுவதில்லை அதிகாரங்கள் அனைத்தும் ஒன்றிடம் அரசிடமே மேலும் மேலும் குவிக்கப்படுகிறது. கூட்டாட்சி தத்துவத்திற்கு அறியப்பட்ட இந்தியாவில், இன்று அனைத்தும் அச்சுறுத்தலுக்கு ஆளாக்கப்பட்டுள்ளன" என திருச்சி சிவா குற்றம்சாட்டினார்.

# வண்டவாளம்

## உச்சந்தலையில் ஓங்கி குட்டிய உச்ச நீதிமன்ற நீதிபதி



ராகுல் காந்திக்கு வழங்கப்பட்ட தண்டனை குறித்து குறிப்பிட்ட உச்சநீதிமன்ற நீதிபதி பி.ஆர். கபாய் அதிகபட்ச தண்டனை வழங்கும் போது அதற்கான காரணங்கள் இருக்க வேண்டும். ஆனால் விசாரணை நீதிபதி இது பற்றி சுட்டிக் காட்டவில்லை.

போதிய காரணங்கள் இன்றி தண்டிக்கும்போது ஒரு தொகுதி ஒட்டுமொத்தமாக பிரதிநிதித்துவம் இல்லாமல் போகிறது. இதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்

ஒரு தனி நபரின் உரிமையை மட்டும் அல்ல ஒரு தொகுதியின் உரிமைகளும் பாதிக்கப்படுகிறது

ராகுல் காந்தி நாடாளுமன்ற உறுப்பினர் என்பதாலேயே சலுகை காட்ட முடியாது என்று அதிகபட்ச தண்டனை கொடுக்கப்பட்டு இருக்கிறது

அதிகபட்ச தண்டனை கொடுக்கப்பட்டதற்கான காரணங்களை நீதிபதி சுட்டிக் காட்டாததால் இறுதித் தீர்ப்பு வரும் வரை தண்டனை உத்தரவை நிறுத்தி வைக்கிறோம். என்றார் நீதிபதி

இத்தோடு நிறுத்தி விடவில்லை குஜராத்திலிருந்து வரும் தீர்ப்புகள் சுவாரசியமாக இருக்கிறது என்று வெளிப்படையாகவே உச்சந்தலையில் வைத்தார் நீதிபதி பி.ஆர்.கவாய்.

மோடி அரசுக்கு சூடு சொரணை இருந்தால் தானே!

## பாஜக ஆளும் குஜராத்தில் புற்றுநோய் காச நோய் பாதிப்பு ஏறுமுகம்!

புற்றுநோய் காச நோய் குறித்து மக்களவையில் எழுப்பப்பட்ட கேள்விக்கு ஒன்றிய சுகாதார குடும்ப நல அமைச்சர் அளித்த பதிலில்,

நாடு முழுவதும் பரவி வரும் காசநோய் புற்றுநோய் எண்ணிக்கை குஜராத்தில் மிகவும் அதிகரிப்பது தெரியவந்துள்ளது.

2020ல் 1,20,560 பேரும், 2022 இல் 1,51,912 பேரும், புற்றுநோய் மற்றும் காச நோயால் பாதிக்கப்பட்டனர்.


இவர்களில் 3,190 பேர் மரணம் அடைந்துள்ளனர்.

மோசமான வாழ்க்கைச் சூழல் சுற்றுச்சூழல் மாசு ஆகியவை இதற்குக் காரணம் என்று மருத்துவர்கள் கூறுகிறார்கள்.

25 ஆண்டுகளுக்கு மேலான பாஜகவின் குஜராத் மாடல் இதுதான்!

## அந்தந்த மதத்திற்குள் மன உறவுகள் அமைய வேண்டும்

◆ சொல்கிறார் அசாம் முதல்வர்



பெண்ணோ ஆனா மனம் ஒத்து செய்யும் காதல் திருமணங்களை லவ் ஜிகாத் என்று கொச்சைப்படுத்தக் கூடாது என்று கூறப்பட்டதற்கு அஸ்ஸாம் முதலமைச்சர் ஹிமந்தா பிஸ்வா சர்மா கூறியதாவது:

இந்து ஆண்கள் இந்துப் பெண்ணையும் இஸ்லாமிய ஆண்கள் இஸ்லாமியப் பெண்ணையும் திருமணம் செய்து கொள்ள வேண்டும். இதன் மூலம்தான் சமூகத்தில் அமைதி நிலவும். இரு மதத்தினர் இடையே காதல் திருமணம் நடந்தால் அரசமைப்பின்படி சிறப்பு திருமண சட்டத்தின் கீழ் நடத்தப்பட வேண்டும். என்று ஆண் பெண் காதலுக்கு தடை விதித்துள்ளார்.

முதல்வரே சமுதாயத்தின் இயல்பை மாண்பை கெடுக்கத் துடிக்கிறார்.

# சீமான் ஆர்எஸ்எஸ்-சி

நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் அவர்கள், நிறைய படிப்பதாக சொல்கிறார்கள். ஈர்க்கிற பேச்சாளர், தர்க்கம் செய்வதில் வல்லவர்தான்.



இளசை கணேசன்

ஆனால், தர்க்கம் செய்வதில் தரவுகள்தான் பிரதானம். தரவுகளுக்கு தொடர்பில்லாத தனது சொந்த கருத்தை திணித்தால் தடுமாற்றம், திசைமாற்றம் ஏற்படும்.

இப்படிச் செய்வதால் சீமான் பல சமயம் தடுமாறி திசைமாறி எல்லை தாண்டி விடுகிறார். நேற்று என்ன பேசினோம்? இன்று என்ன பேசுகிறோம்? நாளை என்ன பேசுவோம்? என்பதில் அவராலேயே அவரைக் கட்டுப்படுத்த முடியவில்லை!

"அவரு ரொம்ப நல்லவருதான் ஆனால் அவ்வப்போது வெங்காயம் தின்பார் அவ்வளவுதான்" இதன் முழு கதை சீமானுக்குப் பொருந்தும்.

நிறைகுடம் தளும்பாது. ஆனால் இவர் அடிக்கடி தளும்புவார். 'தளும்பி'க் கொண்டே பேசவும் செய்வார்!

மணிப்பூருக்காக என்று கூறி, நாம் தமிழர் கட்சியின் சார்பில் ஜூலை 30ல் வள்ளுவர் கோட்டத்தில் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. அதில் அக்கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமானின் பேச்சு மணிப்பூரில் நடைபெற்ற அந்தக் கோரத்தாண்டவத்தின் கொடூரத்தை தொட்டுக் கூடப் பார்க்கவில்லை.

கலவரம் நடத்தி, நடத்தி ஆட்சியைப் பிடித்தால்! காடுகளின், வனங்களின் வளங்களை கார்ப்பரேட்டுகளுக்கு தாரைவார்க்கத் துடிக்கிறார்கள். காடுகளில், வனங்களில் வாழும் பழங்குடி இன மக்களை வெளியேற்றுகிறார்கள்.

தேசம் வெட்கித் தலைகுனிகிறது. பாரத மாதா நிர்வாணமாக நிற்கிறாள் என்று சில நிமிடங்கள் மட்டும் சரியாக சுருக்கமாக குறிப்பிடுகிறார். மற்றபடி முழுக்க முழுக்க தனது தேர்தல் பிரச்சாரமாகவும் ஆர்.எஸ்.எஸ் ஆதரவாகவும் மாறிவிட்டது.

இஸ்லாமியர், கிறிஸ்தவர், காங்கிரஸ், திமுக, பாஜக, மற்றும் கம்யூனிஸ்டுகள் என எல்லாவற்றின் மீதும் சீமானின் விமர்சனம் இருந்தது. ஒரு கட்சி என்ற முறையில் மற்ற கட்சிகளை தாக்குவதை அது உண்மையோ, பொய்யோ தவறாகச் சொல்ல முடியாது.

ஆனால் மதரீதியாக, இஸ்லாமியர் கிறிஸ்தவர் மீது வேட்டை விலங்கு ஒன்று தன் இரையை கவ்விப் பிடிப்பதைப் போன்ற ஆவேசம் தெரிந்தது.

பாஜக, மோடி மற்றும் அண்ணாமலை மீதான விமர்சனங்கள் தாய் விலங்கு, தன் குட்டியைக் கவ்விப் பிடிப்பது போல் ரொம்ப நெகிழ்வாக இருந்தது.

"கிறிஸ்தவர்களும் இஸ்லாமியர்களும் தேவனின் பிள்ளைகள் என்று நினைத்துக் கொண்டிருக்கிறோம். அவர்கள் சாத்தானின் பிள்ளைகளாக மாறி ரொம்ப நாளாச்சு" என்று சீமான் பேசியிருக்கிறார்.

- முற்றிலும் சிறுபான்மையினருக்கு எதிரான ஆதிக்க அரசியல் சூழல்.
- கட்டுப்படுத்த முடியாத அரச பயங்கரவாத வன்முறை கட்டமைப்பு.
- சிறுபான்மையினர் இரண்டாம் தர குடிமக்களாக கூட இருக்க முடியுமா என்ற நிலை

இப்படி சிறுபான்மையினர் வெந்து கொண்டிருக்கின்ற நிலையில் வெந்த புண்ணில் துருப்பிடித்த வேலை பாய்ச்சுகிறார் சீமான். இத்தோடு நிறுத்தி விடவில்லை!

"நாட்டில் நடந்திருக்கும் அநீதிகளுக்கும் அக்கிரமங்களுக்கும் இவர்கள்தான் காரணம்!"

"எவன் எவனுக்கோ நாட்டை கொடுத்து விட்டார்கள்".

"பாவங்களின் பெரும்பான்மையே இவர்கள்தான்"

என்று நாலாந்தர அரசியல்வாதிக்கும் கீழாகச் இறங்கி ஆர்.எஸ்.எஸ்.சுக்கு வக்காலத்து வாங்கியும் பேசியிருக்கிறார்.

2 ஆம் தேதி வியாழக்கிழமை பத்திரிகையாளர்களிடம் பேசுகிறபோது "தான் பேசியது குறித்து எந்த வருத்தமோ விளக்கமோ தெரிவிக்கவில்லை." எதிர் எல்லைக்குச் சென்றவர் வேறு எல்லைக்கு போய் விட்டார்!

"இஸ்லாமியரும் கிறிஸ்தவர்களும் சிறுபான்மையினர் என்று சொன்னால் செருப்பை கழட்டி அடிப்பேன்" என்று தனது கொந்தளித்த உணர்ச்சியை வெளிக்காட்டியதோடு செருப்பை கழட்டும் பாவனையில் குனிந்தார்!

பத்திரிக்கையாளர்களிடம் எதிர்ப்பு கிளம்புவதை கண்டு உடனே சுதாகரித்துக் கொண்டு.. "வந்தவன், போனவன் எல்லாம் இஸ்லாமியரை, கிறிஸ்தவரை சிறுபான்மையினர் என்று சொன்னா செருப்ப கழட்டி அடிப்பேன்" என்று மாற்றிப் பேசினார்.

இஸ்லாமியர்களின் நேர் எதிரிகள் நாங்கள்தான் என்று அக்மார்க் முத்திரை குத்திக்கொண்டு, தனது ஆக்டோபஸ் கொடுங்கரங்களில் சிக்க வைத்து சிதைக்கும் ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் கூட இப்படி பேசியதில்லை. ஆனால் சீமான் பேசியிருக்கிறார்.

"அப்பா இளையராஜா பெரும்பான்மை இந்து. மகன் யுவன் சங்கர் ராஜா சிறுபான்மையா? ஏ.ஆர்.ரகுமான் இஸ்லாமில் சேர்ந்து விட்டால் சிறுபான்மையாகி விடுவாரா? இப்படி நினைப்பது பைத்தியக்காரத்தனம் இல்லையா?" என்று சீமான் வாய் வீச்சு தர்க்கம் செய்கிறார்.



இஸ்லாமில் சேர்ந்து விட்டால் தாங்கள் சிறுபான்மை ஆகிவிடுவோம் என்பது யுவன் சங்கர் ராஜாவுக்கும், ஏ.ஆர்.ரகுமானுக்கும் நன்றாகவே தெரியும். சீமானுக்கு வேண்டுமானால் தெரியாமல் இருக்கலாம்.

"எனது பேச்சு என்பது பேரன்பின் வெளிப்பாடு, எனது கோபத்தில் உள்ள பேரன்பினை யாரும் புரிந்து கொள்ளவில்லை"

ஆஹா! சாதாரண அன்பு இல்லையாம்! பேரன்பாம்! கேழ்வரகில் நெய் வடிகிறதாம்! கேனையர்களே கேளுங்கள் என்கிறார்.

யாரும் இதுவரை அடிக்காத அந்தர் பல்டியை சீமான் அடித்துள்ளார். இது பைத்தியக்காரத்தனமாகத் தெரியவில்லையா?

சீமானின் பேச்சு சறுக்கல் என்றோ, பக்குவம் இல்லாத, பண்பாடு அற்ற, அரைவேக்காட்டு அரசியல் என்றோ ஒதுக்கித் தள்ளிவிட முடியாது! மணிப்பூருக்கான போராட்டத்தில் காங்கிரஸ் திமுக கூட்டணிக்கு வாக்களிக்க கூடாது என்று வெகுநேரம் சீமான் பேசினார்.

58 நிமிட பேச்சில், 2 நிமிடம் பேசியதில் மட்டும் குறை கண்டுபிடிக்கப்படுகிறது என்று அவரே பேட்டியில் கூறியிருக்கிறார்.

அதே 58 நிமிடப் பேச்சில் மணிப்பூர் வன்முறை குறித்து எவ்வளவு நேரம் பேசினீர்கள்? நெஞ்சில் கைவைத்து சொல்லுங்கள்.

"மணிப்பூரில் கலவரம்" என்று பேச்சை துவங்குகின்றீர்கள்! இதுதான் உங்கள் மதிப்பீடா? கலவரத்திற்கும், வன்முறைக்கும், பயங்கரவாதத்திற்கும், திட்டமிட்ட அரச பயங்கரவாதத்திற்கும் உங்களுக்கு வித்தியாசம் தெரியாதா?

மத்திய, மாநில அரசுகளின் இரட்டை அரச பயங்கரவாதம் மெய்தி இனத்தை கருவியாக பயன்படுத்தி பழங்குடி இனத்தவர்கள் மீது கொடுமையான வன்முறையை கட்டவிழ்த்து விட்டு, இன்னொரு குஜராத் வன்முறை அரங்கேறுகிறது.

இந்த வன்முறை மணிப்பூரோடு நிற்கப் போவதில்லை. 2024 நாடாளுமன்றத் தேர்தலில் தோல்வி ஜுரம்

# ன் இன்னொரு நாக்கு!

தலைக்கேறி விட்டதால், நாடு முழுவதும் வன்முறைகளை அரங்கேற்ற துடிக்கிறது ஆர்.எஸ்.எஸ் கும்பல்.

சீமான் அவர்களே இதை திட்டமிட்ட இரட்டை அரசு பயங்கரவாத வன்முறை என்று கூறுகின்றீர்களா? அல்லது இல்லை என்று மறுக்கிறீர்களா?

உண்மையில் மணிப்பூர் வன்முறை கொடுமைகளை மட்டும் விவரித்துப் பேசினால், நீங்கள் எடுத்துக்கொண்ட 58 நிமிடம் போதாது.

முன்பு சீமானின் ஆதரவு பேச்சு குறித்து 'சுவராஜ்யா' என்ற ஆர்.எஸ்.எஸ். பத்திரிகை பாராட்டி எழுதியிருந்தது. தற்போதைய சீமான் தனது பேச்சில் ஆர்.எஸ்.எஸ் அஜன்டாவை சொல்வதில் அவர்களை விடவும் விஞ்சியிருகிறார்.

2 நிமிடமா, 2 ரெண்டு நொடியா என்பதா முக்கியம்? சீமான் பேசிய பேச்சு விஷமத்தனமானதா, இல்லையா? துளி விஷம் என்றாலும் விஷம், விஷம் தானே?

சீமானுக்கு அதிகாரப் பசி அதிகரித்துவிட்டது. வாக்காளர்களை வென்றெடுக்கும் பொறுமை அவருக்கு இல்லை. வாக்காளர் மீது பழிபோடத் துடிக்கிறார்.

இதற்கு முன்பு கூட "நாம் தமிழர் கட்சிக்கு ஓட்டுப் போடாதவர்கள் நல்ல அப்பனுக்கும் ஆத்தாளுக்கும் பிறந்திருக்க முடியாது" என்று திமிரெடுத்து வாய்க்கு வந்தபடி வாய் சவடால் அடித்தார்.

டி.என்.ஏ. டெஸ்டு தேவை இல்லாமல் செய்து விட்டார் சீமான். மனிதர்கள், மனித மாண்பு என்பதையெல்லாம் விட சீமானுக்கு ஓட்டு பெரிதாகி விட்டது!

- **மக்களை வாக்காளர்களாக பார்ப்பது.**
- **வாக்காளர்களை அடையாளமாகப் பார்ப்பது.**

இந்த இரண்டும் அடையாள அரசியலின் அடிப்படை.

வாக்காளர்களை மத அடிப்படையில் பிரிப்பது என்பது மதவாத அடையாள அரசியல்.

வாக்காளர்களை தமிழினமாக பிரிப்பது தமிழ் தேசிய அடையாள அரசியல்.!

சீமான் தமிழ் தேசிய அடையாள அரசியல் குறித்து பேசும்போது இந்துத்துவ மதவாத அடையாளத்துக்கு அடிபணிந்து அத்துமீறுவது ஏன்?

எந்த மதமும், எந்த சாதியும், எந்த இனமும் ஒட்டுமொத்தமாக ஒரே கட்சிக்கு, ஒரே கூட்டணிக்கு வாக்களித்து விடுவதில்லை.

தமிழ் தேசியம் என்ற பெயரில் நீங்கள் பேசுவதெல்லாம், தமிழர்களுக்கு ஏற்புடையவைதானா? திமுக கூட்டணிக்கு வாக்களித்த தமிழர்கள் பற்றி என்ன சொல்லப் போகிறீர்கள்?

திமுக காங்கிரஸ் கூட்டணிக்கு இஸ்லாமியர்களும் கிறிஸ்தவர்களும் ஒட்டுமொத்தமாக வாக்களித்து விடவில்லை. தங்களின் அரசியல் வாழ்க்கை சூழலின் அனுபவத்திலிருந்து கணிசமானோர் வாக்களித்திருக்கிறார்கள்.

ஏன் என்ற காரணம் சீமானுக்கு தெரியாத ஒன்றல்ல!



யார்இந்துஎன்றுயாராலும் அடையாளப்படுத்தி விட முடியாது. அதனால் தான் இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்கள் அல்லாதவர்கள் எல்லாம் இந்துக்கள் என்று சட்டமே அடையாளப்படுத்துகிறது. இந்துக்களுக்கெல்லாம் தான்தான் பிரதிநிதிகள் என்று கொட்டி முழக்கும் பாஜகவுக்கும் அதன் கூட்டணிக்கு இந்துக்கள் எல்லாம் வாக்களிப்பார்களா என்ன? திமுக காங்கிரஸ் கூட்டணிக்கு வாக்களித்தவர்கள் யார்?

"இந்துக்கள் அரக்கர்களின் அல்லது அசுரர்களின் பிள்ளைகளாக மாறிவிட்டார்கள்" எனறு சீமான் ஏன் பேசவில்லை?

சீமான் இப்படி பேசுவது புதிதல்ல. இதற்கு முன்பும் இதுபோன்று பேசியிருக்கிறார். இஸ்லாமியர்களும், கிறிஸ்தவர்களும் தமிழரின் தாய் மதத்திற்கு திரும்ப வேண்டும்.

கிறிஸ்தவம் ஐரோப்பாவில் இருந்து வந்தது! இஸ்லாமியர்கள் எல்லாம் அரபு தேசத்தவர் என்று இதற்கு முன்பு அடிப்படை ஆதாரங்கள் இன்றி அளந்துவிட்டார்.

- **தமிழர்களிடையே, தமிழர்களுக்கென்று தனித்த மதம் தோன்றியதா?**
- **தமிழர்களின் தாய் மதம் எது?**
- **மத மாற்றம் ஏன் நடைபெற்றது?**
- **சைமன் என்ற பெயர் கொண்ட சீமானும், செபஸ்தியன் என்ற பெயர் கொண்ட தங்கள் தந்தையரும் எப்போது தாய் மதத்திற்கு திரும்பினீர்கள்?**
- **'அன்பே சிவம்' என்ற சைவக் கொள்கையைத்தான் நீங்கள் கடைப்பிடிக்கிறீர்களா? இந்தக் கேள்விகளுக்கெல்லாம் சீமான் பதில் சொல்வாரா?**

தமிழர்களிடையே தனித்த மதம் என்று உருவாகவில்லை. அதுமட்டுமல்ல 'மதம்' என்ற சொல் தமிழர்களின் வழக்கத்தில் இல்லை. இது பின்னர் திணிக்கப்பட்டது!

கிறிஸ்தவம் ஐரோப்பாவில் தோன்றியது அல்ல. அது தோன்றிய இடம் இன்றைய மத்திய ஆசியா பகுதி. அது தோன்றிய காலத்தில் கண்டங்கள் என்று பிரிக்கப்படவில்லை.

இவற்றை எல்லாம் தெரிந்து கொள்ளாமல் இஸ்லாமியர்களும் கிறிஸ்தவர்களும் தமிழர்களின் தாய் மதத்திற்கு திரும்ப வேண்டும் என்று அழைப்பு விடுத்தது ஏன்?

சீமான் குறிப்பிடும் சைவமும் மாலியமும் (வைணவம்) இந்து மதம் என்ற பெயரில் சங்கமம் ஆகிவிட்டது. தமிழரின் தாய் மதத்திற்கு திரும்புங்கள் என்று சீமான் சொல்வது இந்து மதத்திற்கு வாருங்கள் என்று அழைப்பதாகத் தானே அர்த்தம்?

ஆர்.எஸ்.எஸ் அமைப்பின் "கர்வாப்சி' (தாய் மதத்திற்கு திரும்புங்கள்) என்ற இந்துத்துவ அஜன்டாவைத்தான் சீமான் தன் மொழியில் பேசுகிறார்.

'சிறுபான்மையினர்',என்ற சொல்லும் அதன் உள்ளடக்கமும் உலகம் முழுவதும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாகும். மத ரீதியான, இனரீதியான, மொழி ரீதியான சிறுபான்மையை வரையறுத்து அவர்களின் உரிமை குறித்த சாசனத்தை ஐ.நா.சபை 1992 டிசம்பர் 18 ல் அறிவித்தது

"சிறுபான்மையரின் அடையாளங்கள் மதிக்கப்பட்டு பாதுகாக்கப்பட வேண்டும். சிறுபான்மையரின் பின்தங்கிய நிலைமையை மேம்படுத்த அந்தந்த நாடுகள் முயற்சி செய்ய வேண்டும்" என்று ஐ.நா.பிரகடனம் செய்தது.

உலக அளவில் டிசம்பர் 18 தேசிய சிறுபான்மையினர் தினமாக கொண்டாடப்படுகிறது.

சீமான் உணர்ச்சியில் உண்மை இருந்தால் அவர் செருப்பைக் கொண்டு அடிக்க வேண்டிய இடம் ஐ.நா. சபையைத்தான். அடிப்பாரா?

1992 டிசம்பர் 6 ல் உச்சநீதிமன்றத்தில் கொடுக்கப்பட்ட வாக்குறுதியை மீறி பாபர் மசூதி இடிக்கப்பட்ட பின்பு, இந்தியாவில் தேசிய சிறுபான்மையினர் ஆணையச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. அதற்கான ஆணையமும் உருவாக்கப்பட்டுள்ளது.

இஸ்லாமியர், கிறிஸ்தவர், பௌத்தர், சீக்கியர், பார்ஸி போன்றோர் மத வழி சிறுபான்மையினர் என்று அறிவிக்கப்பட்டுள்ளனர். 2014 ல் ஜைனரும் இந்த பட்டியலில் சேர்க்கப்பட்டனர். 2006 ல் சிறுபான்மையினருக்கான தனி அமைச்சகமும் உருவாக்கப்பட்டது.

இந்தியாவில் உருவாக்கப்பட்ட தேசிய சிறுபான்மை ஆணையச் சட்டத்தை செருப்பால் அடிக்கப் போகிறாரா? தேசிய சிறுபான்மை ஆணையத்தை செருப்பால் அடிக்கப் போகிறாரா?

இந்திய அரசியல் சாசனம், குடியரசுத் தலைவர், இந்திய பிரதமர், அமைச்சர் பெருமக்கள், மாநில கவர்னர்கள், மாநில முதலமைச்சர்கள், மாநில அமைச்சர்கள், ஒன்றிய மாநில அரசு அதிகாரிகள், அரசியல் கட்சிகள், மற்றும் பொதுமக்கள் என்று பெரும்பான்மையாக சிறுபான்மையினர் என்று பேசுகிறார்கள்.

கழட்டிய செருப்போடு அவர் மட்டும்தான் இருக்கிறார். அடிக்கப்படுவதற்கு வேறு ஆள் இல்லை! என்ன செய்வதென அவர்தான் முடிவு செய்ய வேண்டும்

**தொடர்புக்கு: 8220468816**

# வண்டவாளம்

## அதானியின் நிறுவனத்தோடு வேறு யாரும் போட்டி போடக்கூடாது!




அதானி குழும நிறுவனங்களுடன் போட்டியில் ஈடுபடும் மற்ற நிறுவனங்கள் மீது குறிவைத்து சிபிஐ, அமலாக்கத்துறைஃ வருமானவரித்துறை ஆகியவை ஏவி விடப்படுகிறது.

எனவே மற்ற நிறுவனங்கள் அதானி நிறுவனத்தோடு போட்டி போட முடியாமல் பின் வாங்குகின்றன. இந்தியாவின் மூணாவது பெரிய சிமெண்ட் உற்பத்தி நிறுவனமான சாங்கி என்ற நிறுவனத்தை வாங்க ஸ்ரீ சிமெண்ட் நிறுவனம் முன் வந்தது

இதற்கான பேச்சுவார்த்தை நடந்தது..

உடனே ஸ்ரீ சிமெண்ட் நிறுவனத்தின் ஐந்து இடங்கள் வருமான வரி சோதனைக்கு உட்படுத்தப்பட்டது. இதற்குப் பிறகு சாங்கி நிறுவனத்தை வாங்கும் முடிவை ஸ்ரீ சிமெண்ட் நிர்வாணம் கைவிட்டது. சாங்கி நிறுவனம் போட்டியின்றி அதானிக்கு வந்துவிட்டது.

மோடி அரசு இது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவதால் அதானி நிறுவனம் விமான நிலையங்கள் துறைமுகங்கள் சிமெண்ட் நிறுவனங்கள் அதானிடம் போட்டியின்றி வந்து சேர்கிறது

அதானிக்கு அடிபணிவதை தவிர மோடிக்கு வேறு வழி இல்லை.

## உ.பி. பாஜக எம்.பி.க்கு 2 ஆண்டு சிறை தண்டனை



உத்திரபிரதேசத்தில் இட்டாவா பகுதியைச் சேர்ந்த ராம் சங்கர் கடேரியா என்பவர் 2014 நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்று மத்திய மனிதவளத்துறை இணைய அமைச்சராக இருந்தார்.

2019 தேர்தலிலும் வெற்றி பெற்று எம்பி ஆக மட்டும் இருந்தார். இவர் உ.பி.யில் ஆக்ரா பகுதியில் மின் கட்டணம் தொடர்பான விவகாரத்தில் தனியார் நிறுவன அதிகாரியை தனது ஆதரவாளர்களோடு கடுமையாக தாக்கியுள்ளார்.

இதன் மீதான வழக்கு விசாரணை தீர்ப்பில் இவருக்கு 2 ஆண்டு சிறை தண்டனையும் 50,000 அபராதமும் விதிக்கப்பட்டது.

இதனால் இவரின் எம்பி பதவி பறிபோகும் சூழல் உருவாகியுள்ளது.

## ஆதாரம் காட்டுபவன் ஆண்டவனாக இருந்தாலும் அரெஸ்ட்



மணிப்பூர் வன்முறையில் பாலியல் வன்கொடுமைக்கு ஆளான ஒரு பெண்ணின் கணவர் முன்னாள் ராணுவ வீரர் சுபேதார். அவர் தனது 18 வயதில் அசாம் படைப்பிரிவில் சேர்ந்தார்.30 ஆண்டுகள் ராணுவத்தில் பணியாற்றி இருக்கிறார். ஜம்மு காஷ்மீர் ஆபரேஷன், ரக்சாக் எனும் பயங்கரவாத எதிர்ப்பு, அசாம் பஞ்சாப் ரீனோ ராணுவ நடவடிக்கை, இலங்கை உள்நாட்டு போர் போன்றவற்றில் பங்கேற்றுள்ளார்.

பல்வேறு பதக்கங்களையும் பெற்றுள்ளார். நாட்டை பாதுகாக்க, பயங்கரவாத நடவடிக்கை தடுக்க போரிட்ட இவரால் தனது மனைவிக்கு ஏற்பட்ட பாலியல் வன்கொடுமையை தடுக்க முடியாமல் கண்ணீர் சிந்துகிறார்.

எனது மனைவி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட புகார் மே 18ல் அளித்தேன். காவல்துறையில் பூஜ்ஜிய எஃப் ஐ ஆர் போடப்பட்டது. ஆனால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

கடவுளின் செயல்தான் என் மனைவியின் பாலியல் வன்கொடுமை வீடியோ வெளியே வந்து வைரலாகியது. அதற்குப் பின்பே மணிப்பூரின் துன்ப துயரம் முழுமையாக வெளியே வந்தது.

ராணுவ வீரர் சுபேதார் கடவுள் என்று குறிப்பிடுவது அந்த வீடியோவை வெளியிட்ட வரைத்தான். ஆனால் அந்தக் கடவுளையே மோடி அரசு கேமராவுடன் அரெஸ்ட் செய்தது.

கொடுமையிலும் கொடுமை அல்லவா!



சி.பாஸ்கர்

**சோழப் பேரரசின் வல்லாட்சிக் காலத்திலும் விவசாயிகள் தாங்கள் சுரண்டப்படுவதை எதிர்த்து குமுறினார்கள். ஆனால், அது போராட்ட வடிவம் பெற்று வெடிக்கவில்லை.**

# காவிரி தீரத்தின் வீரமிகு வர்க்கப்போர்!





சோழப் பேரரசை தொடர்ந்து கோலோச்சிய விஜயநகரப் பேரரசு காலத்தில் விவசாய வர்க்கத்தின் கோபம் மேலெழுந்தது.

அதன்பிறகு எத்தனையோ ஆட்சி மாற்றங்கள், இறுதியாக பிரிட்டன் காலனி ஆட்சியிலும் விவசாயிகளின் துயரம் தொடர்ந்தது. தஞ்சை மண்ணில் கம்யூனிஸ்ட் இயக்கம் காலூன்றிய பிறகு விவசாய வர்க்கத்தை அணிதிரட்டும் மகத்தான பொறுப்பை பி. சீனிவாசராவிடம் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமை ஒப்படைத்தது.

அவரது அறிவாற்றல் எளிமை மனிதநேயம் நடைமுறை அறிவு ஆழ்ந்த படைப்பாற்றல் மிக்க மார்க்சிய மெய்ஞானம் ஆகியவற்றால் குறு விவசாயிகளுடன், விவசாய தொழிலாளர்களும் நம்பிக்கை பெற்று களம் கண்டனர்.

அவரது எழுச்சிமிக்க தலைமையின் கீழ், சொந்த நிலமற்ற குத்தகை விவசாயிகளும், விவசாய தொழிலாளர்களும் சாதிமத அடையாளத்தைக் கடந்து வர்க்கப் பதாகையின் கீழ் எழுச்சியோடு ஒன்று திரண்டார்கள். பி. சீனிவாசராவ் விவசாயி, விவசாய தொழிலாளர் ஆகிய இரு பிரிவின் உடனடி கோரிக்கைகளையும், தொலை நோக்கு கோரிக்கைகளையும், மிகவும் சாதுரியமாக ஒன்றிணைத்து அவர்களை ஒற்றுமைப்படுத்தி வலுவான ஸ்தாபன கட்டமைப்பிற்குள் கொண்டு வந்தார். தொடர் போராட்ட முன்னெடுப்புகள் மூலம் அவர்களின் அச்சத்தை போக்கி, நிலப்பிரபுத்துவ எஃகு கோட்டையை தகர்க்க விவசாய பெரும்படையை போர்குணத்தோடு வழி நடத்தினார்.

நிலவுடைமை ஆதிக்கக் கோட்டை தகர ஆரம்பித்தது. ஆங்காங்கே தள போராட்டங்களும் வெடித்துக் கிளம்பின. அப்படியொரு தீரமிக்க போராட்டம் கீழத்தஞ்சையின் நீடாமங்கலம் அருகில் “ரிஷியூர்” என்ற கிராமத்தில் நடந்தது.

போராட்டப் பின்னணியில் வளர்ந்த ரிஷியூர் கிராமத்தில் வலுவான கம்யூனிஸ்ட்டு கட்சியின் கிளை செயல்பட்டு வந்தது. கிருஷ்ணசாமி என்பவர் அந்தக் கிளையின் செயலாளராக திறம்பட செயலாற்றி வந்தார். அவரது வழிகாட்டுதலோடும், பயிற்சியோடும் சோம. தமிழார்வன் என்ற ஆற்றல் மிக்க இளைஞர் கட்சிக் கிளைச் செயலாளராக பொறுப்பேற்றார். தஞ்சை மாவட்டம் உருவாக்கிய அச்சமறியா மாவீரனாக ஆற்றல்மிக்க கம்யூனிஸ்ட்டு கட்சியின் தலைவர்களில் ஒருவராக வளர்ந்தார். ஒன்றியச் செயலாளர், மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் மற்றும் மாநிலக்குழு உறுப்பினர் என பல பொறுப்புகளில் திறம்பட பணியாற்றினார்.

ஒடுக்கப்பட்ட தலித் மக்களின், ஏழை எளியமக்களின் பாதுகாவலனாக உறுதியாக போராடுகிறார் என்ற ஒரே காரணத்திற்காக அவரையும், அவரது குடும்பத்தாரையும், அவரின் சமுதாயத்தினரும் உறவினர்களும் கடுமையாக எதிர்த்தார்கள். பகைத்தார்கள். அதற்கெல்லாம் அவரோ, அவர் குடும்பத்தாரோ கிஞ்சித்தும் அஞ்சவில்லை.

ரிஷியூர் கிராமத்தைச் சுற்றி பெரும் நிலவுடைமையாளர்கள் நிறைந்திருந்தார்கள். அவர்கள் ஒன்று கூடி தமிழார்வனை ஒழித்தால்தான் தங்கள் ஆதிக்கத்தை தொடர்ந்து நிலை நிறுத்த முடியும் என்று முடிவுக்கு வந்தார்கள். அந்த ஊரைச் சேர்ந்த பெரிய நில உடைமையாளரும், ஓய்வு பெற்ற போலீஸ் அதிகாரியுமான ஆர். என். சிதம்பரம் என்பவர் சதித்திட்டத்தை வகுத்துக் கொடுத்தார்.

அவர்களின் திட்டத்திற்கு ஏதுவாக ஒரு பிரச்சினை கிளம்பியது. துரைசிங்கம் என்ற ஒரு தலித் விவசாய தொழிலாளிக்கு கொஞ்சம் குத்தகை நிலம் இருந்தது. சதிகாரர்கள் அந்த தொழிலாளியை அவர் பயிரிட்டு வந்த நிலத்திலிருந்து வெளியேற்ற சட்ட விரோத செயலில் இறங்கினார்கள். அந்த தொழிலாளிக்கு ஆதரவாக தமிழார்வன் மற்றும் கட்சி முன்னணி தலைவராக விளங்கிய பழங்களத்தூர் எல். குருசாமி போன்றோர் துணை நின்றார்கள். துரைசிங்கம் கட்சித்துணையோடு தனது வயலில் நடவு செய்து கொண்டிருந்ததார். அப்போது, சதிகாரர்கள் தங்களது குண்டர் படையோடு பயங்கர ஆயுதங்களுடன் ஸ்தலத்திற்கு வந்தார்கள்.

இதை யாரும் எதிர்பார்க்கவில்லை. தக்க தற்காப்பு ஏற்பாடும் செய்யவில்லை. வந்த அடுத்த கணமே சோடா பாட்டில்களையும், கற்களையும் வீசி நடவு செய்து கொண்டிருந்த ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களை கடுமையாக தாக்கினார்கள். தாங்கள் கொண்டு வந்த வீச்சு அரிவாள் மற்றும் சுளுக்கியால் தாக்க முயன்ற போது எல்லோரும் சிதறி ஓடினார்கள். தமிழார்வனை அரிவாள் மூலம் வெட்டினார்கள்.

இதனை அறிந்து நிகழ்விடத்திற்கு விரைந்து வந்தார் அவரது சித்தப்பா மாவீரன் மா.தெட்சிணாமூர்த்தி. போர்க்கலையில் தேர்ச்சி பெற்றவர் அவர். கையில் கிடைத்த ஒரே கம்பின் துணையோடு அந்தக் கூட்டத்தையே அதிர வைத்து சமாளித்தார். ஆனால், பக்கவாட்டில் மறைந்து வந்த ஒரு கொடியவனை அவர் கவனிக்கவில்லை. அந்த சமயம் பார்த்து அவர் வேட்டி நழுவிவிட்டது. அதை பிடிக்க முயன்ற போது அந்தக் கொடியவன் அவர் வயிற்றில் சுளுக்கியால் குத்திவிட்டான். குடல் சரிந்துவிட்டது. அஞ்சாநெஞ்சன் தெட்சிணாமூர்த்தி தனது தோள் துண்டால் வயிற்றை இறுக்கிக் கட்டிக் கொண்டு வீடு நோக்கி நடந்தார்.

இதற்குள் தமிழார்வன் தலையிலும், கையிலும் வெட்டுப்பட்டு மயங்கி விழுந்துவிட்டார். நடந்ததை கேள்விப்பட்டு நிகழ்விடத்திற்கு ஓடி வந்த தமிழார்வனின் தந்தை மா. சோமசுந்தரத்தையும் வெட்ட தொடங்கினார்கள். நிராயுதபாணியாக வந்த அவர் அத்தனை வெட்டுக்களையும் தன் வெற்றுக் கைகளால் தடுத்தார். அவரும் ஒரு நிலையில் மயங்கி விழுந்தார். அவரும் அவர் தம்பியும் மருது சகோதரர்கள் போல மாவீரர்கள். எதிர்பாராத தாக்குதலால் இருவருமே மாண்டுபோனார்கள். தமிழார்வன் நல்வாய்ப்பாக உயிர்பிழைத்தார். ஆனால், ஒரு கை நிரந்தரமாக ஊனமாக போய்விட்டது. மா.சோமசுந்தரம் மற்றும் மா. தெட்சினாமூர்த்தி ஆகிய இருவரும் இந்தியக் கம்யூனிஸ்ட்டு கட்சியின் தியாகிகளின் வரலாற்று ஆவணத்தில் புகழ்மிக்க இடத்தைப் பெற்றுள்ளார்கள்.

அந்த சோக நிகழ்வு நடந்த இடத்திற்கு அருகே தஞ்சை மாவட்டக்கட்சி ரிஷியூர் தியாகிகளுக்கு நினைவு சின்னம் கட்டியுள்ளது. ஒவ்பொரு ஆண்டும் கட்சித் தோழர்கள் அந்த தியாகிகளுக்கு மரியாதை செலுத்தி வருகிறார்கள். சாதி மத அடையாளம் கடந்த எத்தனையோ இது போன்ற வர்க்கப் போராட்ட தீரமிக்க அத்தியாயங்கள் சோழ மண்டல கட்சி வரலாற்றில் உண்டு.

இந்த கம்யூனிச தியாக பாரம்பரியம் இன்றும் உயிர்ப்போடு இருப்பதால்தான் காவிரி மண்ணில் சாதியக் கட்சிகளோ, அதன் தலைவர்களோ வேர் ஊன்ற முடியவில்லை. மாற்றுக் கட்சியை சேர்ந்தவர்கள் கூட சாதிய அரசியலை இன்றும் முன்னெடுக்க முடியவில்லை.

பெரியாரும் சோழ மண்டலத்தில் கருத்தியல் போராட்டத்தை வலுவாக முன்னெடுத்ததும் இதற்கு ஒரு காரணியாகும்.

அடையாள அரசியலை முற்போக்கு முகமூடி அணிந்து கொண்டு முன்னெடுக்க முயலும் மூடர்களுக்கு, சோழமண்டல வர்க்க போராட்டம் ஏராளமான வரலாற்று படிப்பினைகளை வைத்துள்ளது. அது உழைக்கும் மக்கள் ஒற்றுமையை என்றும் உயர்த்தி பிடித்த வண்ணமே வளர்ந்து வருகிறது.

## வெறுப்பு பேச்சா உடனே வழக்குத் தொடருங்கள்!



வெறுப்பு பேச்சு குறித்து விளக்கம் அளிப்பது சிக்கலானது என்றாலும் அது தொடர்பாக சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் தான் சிக்கல் உள்ளது என்று உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ளது

ஹரியானாவில் மத வன்முறை நடைபெற்று 6 பேர் உயிரிழந்த நிலையில் தலைநகர் டெல்லியில் விஷ்வ ஹிந்து பரிஷத் பஜ்ரங்தல் அமைப்புகள் நடத்திய பேரணிகளுக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது.


இந்த மனு நீதிபதிகள் சஞ்சீவ் கண்ணா, எஸ். என். வி. பட்டி ஆகியோர் அமர்வுக்கு வந்தது. மனுதாரர் தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் சியூ சிங் பேரணியில் வன்முறை நிகழாவிட்டாலும் சமூகத்தில் வெறுப்பை பதட்டத்தை தூண்டும் பேச்சுக்கள் இடம் பெற்றன என்று வாதிட்டார்.

வெறுப்பு பேச்சை கையாள்வது குறித்து நாம் அனைவரும் தீர்வு காண வேண்டும் அனைவரும் நீதிமன்றத்தை நம்பிக்கொண்டிருக்கக் கூடாது. இதற்கான பிரத்யோக அமைப்பை உருவாக்கலாம். வெறுப்புப் பேச்சுக்கு எதிராக புகார் எதுவும் தராவிட்டாலும் கூட வழக்குப்பதிவு செய்ய வேண்டும் உரிய நடவடிக்கை எடுக்க தவறுவது நீதிமன்ற அவமதிப்பாக கருதப்படும் என அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு கடந்த ஏப்ரலில் உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

உச்ச நீதி மன்றத்தின் இந்த வழிகாட்டுதல்கள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

# திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணிக்கு ‘தகைசால் தமிழர்’ விருது

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்கிறது



திராவிடர்கழகத்தலைவர் முனைவர்.கி.வீரமணி அவர்களுக்கு ‘தகைசால் தமிழர்’ விருது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்கிறது. தமிழ்நாடு மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது.

‘தகைசால் தமிழர்’ விருதுக்கு திராவிடர் கழகத் தலைவர் முனைவர் கி.வீரமணி அவர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளதும், அவருக்கு சுதந்திரதின கொண்டாட்டத்தின் போது மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விருது வழங்க இருப்பதையும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலக்குழு சார்பில் வரவேற்கிறோம்.

தமிழக அரசு, ‘தகைச்சால் தமிழர்’ விருதினை தோழர்.சங்கரய்யா அவர்களுக்கும்,பின்னர்இரா.நல்லகண்ணு அவர்களுக்கு வழங்கியதை தொடர்ந்து தற்போது கி.வீரமணி அவர்களுக்கு வழங்க இருப்பது மகிழ்ச்சியளிக்கிறது. தமிழக முதல்வரின் இத்தகைய தேர்வு பாராட்டுக்குரியது.

திரு.கி.வீரமணி அவர்கள் 10 வயதிலிருந்தே பொதுவாழ்வில் ஈடுபட்டு வருபவர். தந்தை பெரியாரின் சுயமரியாதை பகுத்தறிவு கருத்துக்களை முன்னெடுப்பவர். தனது பொது வாழ்வில் பலமுறை சிறைச் சென்றவர். வழக்குகளை சந்தித்தவர். 60 ஆண்டுகளுக்கும் மேலாக ‘விடுதலை’ நாளிதழ் ஆசிரியராக பணிச் செய்து வருபவர்.

சமூக நீதி, சமத்துவத்துக்கான போராட்டங்களில் எப்போதும் முன்னிநிற்பவர். சாதி, மத அடிப்படை வாதங்களை முன்வைத்து மக்களை பிரிக்கும் பிளவுவாத சக்திகளுக்கு எதிராக சமூக அறிவியல் கருத்துக்களை முன்னெடுப்பவர்.

பன்முகம்,மதச்சார்பின்மை,நாடாளுமன்ற ஜனநாயகம், சட்டத்தின் ஆட்சி முறை, இன்றைய ஒன்றிய ஆட்சியாளர்களால் கடும் நெருக்கடிக்குள்ளாகியுள்ள சூழலில், கி.வீரமணி அவர்களின் கருத்துக்களும், போராட்டங்களும் முன்னிலும் அதிகம் தேவைப்படுகிறது.

அவருக்கு தமிழக அரசு மிகுந்த பொருத்தச் சூழலில் ‘தகைச்சால் தமிழர்’ விருது அளிப்பது கண்டு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மகிழ்கிறது, வரவேற்கிறது. அவருக்கு தனது தோழமைபூர்வமான நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது என தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

# கிரேன் கவிழ்ந்து 20 பேர் பலி

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இரங்கல்




மகாராஷ்டிரம் கிரேன் கவிழ்ந்து 20 பேர் பலி இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளார்

மகாராஷ்டிரா மாநிலம், பூனே மாவட்டத்தில் சம்ருத்தி விரைவுச் சாலையின் கட்டுமானப் பணியில் ஈடுபட்டிருந்த மிகப் பெரிய அளவிலான கிரேன் கவிழ்ந்து, விபத்துக்குள்ளதானதில் 20 பேர் உயிரிழந்துள்ளனர். இதில் தமிழகத்தைச் சேர்ந்த சந்தோஷ், கண்ணன் ஆகியோரும் உயிரிழந்துள்ளனர். இத்தகைய சம்பவம் பெரும் அதிர்ச்சியையும், வேதனையையும் அளிக்கிறது. உயிரிழந்த அனைவருக்கும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலக்குழு சார்பில் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறோம். மகாராஷ்டிரா அரசு அவர்களுக்கு உரிய இழப்பீட்டுத் தொகையை வழங்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறோம்.

பணியின் பொருட்டு மாநிலம் விட்டு மாநிலம் சென்று புலம் பெயர்கிற தொழிலாளர்களின் நலன் குறித்து, ஒன்றிய, மாநில அரசுகள் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். குறிப்பாக, விபத்துக்காலங்களில் அவசர சிகிச்சை, மருத்துவம், வாழ்விடங்கள், பணியிடப் பாதுகாப்பு, உழைப்புக்குரிய ஊதியம் என சட்டப்பூர்வமான உரிமைகள் யாவும் நிலைநாட்டப்பட வேண்டும்.

மிகக் கடுமையான உழைப்பில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு பணி விழிப்புணர்வுகளையும் ஏற்படுத்த வேண்டும். கடந்த சில ஆண்டுகளாக கட்டுமானப் பணி, சுரங்கப் பணி, நீண்ட தூரச் சாலைப் பணிகள், வெடி மருந்து தொழிற்சாலைகள் என மகத்தான உழைப்பில் ஈடுபட்ட பலர் பணியின் போதே உயிரிழந்துள்ளனர். இதிலிருந்து அரசுப் பாடங்களைப் பெற்று, தொழிலாளர்களின் உயிர் பாதுகாப்புக்கு முன்னுரிமை அளித்து, அவர்கள் உழைப்பிற்கேற்ற ஊதியத்தை முழுமையாக வழங்கவும், இறப்புக்கால இழப்பீடுகளை கால தாமதமின்றி வழங்கி முன்னுரிமை வழங்க வேண்டும் என்றும், ஒன்றிய மாநில அரசுகளை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலக்குழு சார்பில் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது என தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

# இயக்குநர் ஸ்ரீதர் மறைவுக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி இரங்கல்



இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னணி தோழரும் ஓவியருமான திருவண்ணாமலை ஸ்ரீதர் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் திருவண்ணாமலை மாவட்ட முன்னணி தோழரும், சிறந்த ஓவியரும், திரைப்பட இயக்குனருமான ஸ்ரீதர் தனது சொந்த கிராமமான போந்தையில் காலமானார். தோழர் ஸ்ரீதரின் தந்தை நைனா, தாயார் தனம்மாள் ஆவர். தோழர் ஸ்ரீதர் திருமணம் செய்து கொள்ளவில்லை. மாணவப் பருவத்திலேயே ஓவியத்தில் ஈடுபாடு கொண்டு சிறந்த ஓவியராகத் திகழ்ந்தார். கட்சியின் மாவட்ட நிர்வாகக்குழுவிலிருந்து செயல்பட்டார். இளைஞர் பெருமன்ற மாவட்டச் செயலாளராக பொறுப்பேற்று செயல்பட்டார். கட்சி மற்றும் மாணவர், இளைஞர் மாநாடுகளுக்கு விளம்பர பணிகளில் ஈடுபட்டவர். அவரது ஓவியங்கள் காண்போரை ஈர்த்தது. பின்னர் திரைத்துறையில் தடம்பதித்தார். ‘சின்னத்தாய்’ திரைப்படத்திற்கு துணை இயக்குனராகவும், ‘கபாலி’ திரைப்படத்திற்கு இணை இயக்குனராகவும் பணியாற்றினார். தோழர் ஸ்ரீதரின் மறைவிற்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் ஆழ்ந்த இரங்கலையும், அவரது உற்றார் உறவினர்களுக்கு ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறோம். இவ்வாறு தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

# மருத்துவ ஆய்வக நுட்புநர் காலி பணியிடங்களை நிரப்பக் கோரி ஆர்ப்பாட்டம்




இரண்டாம் நிலை மருத்துவ ஆய்வக நுட்புநர்களின் பணியிடங்களை நிரந்தர அடிப்படையில் எம்.ஆர்.பி எழுத்துத் தேர்வு மூலம் நிரப்பிடக் கோரி கூட்டமைப்பின் தலைவர் ஜி. ஆர். ரவீந்திரநாத் தலைமையில் சென்னையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. சங்கத்தின் மாநிலத் தலைவர் ம. கார்த்திக், மாநில செயலாளர் முருகேசன், மாநில பொருளாளர் அக்தர் உசைன், மாநில ஆலோசகர் ராஜவேல் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில துணைச் செயலாளர் மு. வீரபாண்டியன் ஆர்ப்பாட்டத்தை துவக்கி வைத்தார்.

மே 17 இயக்கத்தின் தலைவர் திருமுருகன் காந்தி ,ஆம் ஆத்மி கட்சியின் வழக்கறிஞர் பிரிவு தலைவர் வேல்முருகன்,

சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கத்தின் மாநிலச் செயலாளர் டாக்டர் ஏ. ஆர். சாந்தி, தமிழ்நாடு மருத்துவத்துறை பணியாளர்கள் கூட்டமைப்பின் மாநில செயல் தலைவர் பி. காளிதாசன், பாரா மெடிக்கல் லேப் கல்வி மற்றும் நலச் சங்கத்தின் மாநில துணைத்தலைவர் எஸ். தனவந்தன், சி.பி.ஐ மத்திய சென்னை மாவட்டச் செயலாளர் கருணாநிதி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

மருத்துவ ஆய்வக நுட்புநர் நிலை 2 காலிப்பணியிடங்களை மருத்துவ பணியாளர் தேர்வாணையம் மூலம் எழுத்து தேர்வு வைத்து நடப்பு (2023 24) நிதியாண்டிற்குள், இட ஒதுக்கீட்டையும் நடைமுறைப்படுத்தி, காலமுறை ஊதியத்தில் விரைந்து நிரப்பிட வேண்டும்.

கடந்த 2014 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட வெயிட்டேஜ் மதிப்பெண் முறையில் பணியிடங்களை நியமிக்கும் அரசாணை எண்: 401ஐ ரத்து செய்திட வேண்டும்.

தமிழ்நாடு அரசால் தொடங்கப்பட்ட 11 புதிய மருத்துவக் கல்லூரிகளில் ஆய்வக நுட்புநர் நிலை2 காலிப் பணியிடங்களை விஸிபி மூலம் எழுத்து தேர்வு வைத்து, இட ஒதுக்கீட்டையும் பின்பற்றி நிரந்தர அடிப்படையில் நிரப்பிட வேண்டும்.

# கியூபா ஆதரவு தின கருத்தரங்கம்!

**நெல்லை:** மாவட்ட ஏ.ஐ.டி.யூ.சி. சார்பாக கியூபா ஆதரவு தின கருத்தரங்கம் மாவட்ட பொதுச் செயலாளர் ஆர் சடையப்பன் அவர்கள் தலைமையில், சிபிஐ மாவட்டச் செயலாளர் செ.லட்சுமணன் முன்னிலையில் நடைபெற்றது. இளைஞர் பெருமன்ற மாவட்ட செயலாளர் பி.சுரேஷ் அனைவரையும் வரவேற்றார். கோரிக்கைகளை விளக்கி தமிழ்நாடு ஏ.ஐ.டி.யூ.சி. தலைவர் எஸ். காசி விஸ்வநாதன், அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத் தலைவர் இரா. ரெங்கன் ஆகியோர் உரையாற்றினார்கள். சிபிஐ மாவட்டத் துணைச் செயலாளர் க.முத்துகிருஷ்ணன் நன்றி கூறினார்.

**திருப்பூர்:** உடுமலைப்பேட்டை நகரில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் அலுவலகத்தில் ஏஐடியுசி சார்பில், ஜீலை 26 கியூபா ஒருமைப்பாடு தினம் அனுஷ்டிக்கப்பட்டது. ஏஐடியுசி மாநில பொதுக்குழு உறுப்பினர் வி. சௌந்தரராஜன். மாவட்டக்குழு உறுப்பினர்கள். என்.கிருஷ்ணசாமி. சி.ராஜேந்திரன். கட்சி நிர்வாகிகள் சி.சுப்பிரமணியம், ரணதேவ், பி. சுப்பிரமணியம், மாதர் சம்மேளன நிர்வாகிகள் சித்ரா. பாப்பாத்தி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**தஞ்சாவூர்:** பழைய பேருந்து நிலையம் ஏ. ஐ. டி. யூ. சி. மாநிலச் செயலாளர் ஆர். தில்லைவனம் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மாவட்ட தலைவர் வெ. சேவையா, பொருளாளர் தி. கோவிந்தராஜன், மாவட்ட செயலாளர் துரை. மதிவாணன், வங்கி ஊழியர் சங்க மாவட்ட பொதுச் செயலாளர் க. அன்பழகன், தெரு வியாபார தொழிலாளர் சங்க மாவட்ட செயலாளர் ஆர்.பி.முத்துக்குமரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

### தென்பெண்ணை ஆற்றுநீர் பிரச்சினைக்கு

# உச்சநீதிமன்ற தீர்ப்பாயம் அமைத்திடுக!

## விவசாயிகள் சங்கம் ஆர்ப்பாட்டம்

தென்பெண்ணை ஆற்று நீர் பிரச்சனைக்கு தீர்வு காண, உச்ச நீதிமன்றம் தீர்ப்பாயம் அமைக்க வலியுறுத்தி, தமிழ்நாடு விவசாய சங்கம் சார்பில் கிருஷ்ணகிரியில் நடந்த ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட தலைவர் ஜி. சிவராஜ் தலைமை ஏற்றார். மாநில குழு உறுப்பினர் எஸ். கண்ணு, மாவட்ட குழு உறுப்பினர்கள் ராமமூர்த்தி, கிருஷ்ணமூர்த்தி, சக்கரவர்த்தி ஆகியோர் முன்னிலை வைத்தனர். ஆர்ப்பாட்டத்தை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளர், சட்டமன்ற உறுப்பினர் டி. இராமச்சந்திரன் துவக்கி வைத்து உரையாற்றினார். மாநில துணைத்தலைவர் எம். இலகுமயா மற்றும் ஆர். சேகர் வாழ்த்தி பேசினார்கள். பி. பழனி மாவட்ட செயலாளர் முடித்து வைத்து பேசினார்.

### இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின்

# புதிய அலுவலக கட்டிட அடிக்கல் நாட்டு விழா

திருப்பூர் மாநகர், இரண்டாவது மண்டல குழு, 30வது வார்டு ராமையா காலனி கிளை அலுவலகம் கட்ட அடிக்கல் நாட்டு விழா இன்று காலை கிளை செயலாளர் கருப்பசாமி தலைமையில் நடைபெற்றது. மாநில செயற்குழு உறுப்பினர் எம். ரவி, திருப்பூர் மாநகராட்சி துணை மேயர் ஆர். பாலசுப்பிரமணியம், மாநகர் மாவட்ட குழு செயலாளர் எஸ். ரவிச்சந்திரன் எம். சி. ஆகியோர் அடிக்கல் நாட்டி பணிகளை துவக்கி வைத்தனர்.

லட்சுமி நகர் கிளை அர்ஜுனன் கட்டிட நிதியாக ரூ. 25,000 வழங்கினார். நிகழ்வில் இரண்டாவது மண்டல குழு செயலாளர் வி. எஸ். சசிகுமார், மண்டலக் குழு துணைச் செயலாளர் எஸ். விஜய், மாவட்ட குழு உறுப்பினர் ஆர். தமிழ்ச்செல்வி, மண்டலக்குழு உறுப்பினர் ரவிச்சந்திரன், தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்ற மாவட்ட குழுச் செயலாளர் துருவன் பாலா உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# பஸ் வசதி கேட்டு பொது மக்கள் சாலை மறியல்



அரியலூர் மாவட்டம் ஜெயங்கொண்டத்தில் இருந்து தா.பழூர் வழியாக முத்துவாஞ்சேரி கிராமத்திற்கு செல்வதற்கு முறையாக பஸ்கள் இயக்கப்படவில்லை என கூறி, தா. பழூர் போலீஸ் நிலையம் முன்பு பொதுமக்கள் சாலை மறியலில் ஈடுபட்டனர்.

சுமார் அரை மணி நேரத்திற்கு மேலாக சாலை மறியல் நடைபெற்ற நிலையில், சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த தா. பழூர்போலீஸ் இன்ஸ்பெக்டர் ராஜேந்திரன் சாலை மறியலில் ஈடுபட்ட இந்திய கம்யூனிஸ்ட் கட்சி முன்னாள் மாவட்ட செயலாளர் உலகநாதன் உள்ளிட்டோரை கைது செய்தனர். போலீஸ் நிலையம் முன்பு சாலை மறியலில் ஈடுபட்ட சம்பவம் தா.பழூர் பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

## வினாடி - வினா விடைகள்

1. குடியரசு துணைத்தலைவர், தற்போது ஜெகதீப் தன்கர்
2. சுசேரா கிருபாளனி உத்தரப் பிரதேசம்
3. ஜான் ரீடு
4. 1644 ஆம் ஆண்டு
5. 1936 ஆகஸ்ட் 12
6. 15 குடியரசுகள்

# மணிப்பூர் பழங்குடிகள் மீதான தாக்குதலை கண்டித்து போராட்டம்




**திருவள்ளூர்:** மணிப்பூர் மாநிலத்தில் பழங்குடி இன மக்கள் மீது நடைபெறும் மத வெறி தாக்குதலை தடுத்த நிறுத்த கோரி, மதவெறித் தீ அண்டைய மாநிலங்களில் பரவாமல் தடுக்க ஒன்றிய அரசு உரிய நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம், தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்கத்தின் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம், திருவள்ளூர் மாவட்டம் சோழவரம் ஒன்றியம், காந்தி நகரில் மாவட்ட துணைத் தலைவர் கே. போஸ் தலைமையில் நடைபெற்றது. போராட்டத்தை இளைஞர் பெருமன்ற மாவட்ட செயலாளர் பி. வி. செந்தில் தொடங்கி வைத்தார். இதில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட துணை செயலாளர் வி. சரவணன், மனிதநேய மக்கள் கட்சி மாவட்ட செயலாளர் காதர் பாட்ஷா, தமிழ்நாடு விவசாய சங்க மாவட்ட தலைவர் என். ஜீவா, கே.குமரேசன், ஜி.எம். சம்பத் , எம்.பி.குமார், மதியழகன், பஞ்சநாதன் உள்ளிட்டோர் கண்டன உரையாற்றினார். இறுதியாக போராட்டத்தை நிறைவு செய்து தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்கத்தின் மாவட்ட செயலாளர் என். எஸ். பிரதாப் சந்திரன் கண்டன உரை நிகழ்த்தினார்.

**மயிலாடுதுறை:** அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம் சார்பில் மயிலாடுதுறையில் அரை நிர்வாணத்துடன் அஞ்சல் அட்டை அனுப்பும் போராட்டம் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் பிரபாகரன் தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் ஏராளமானோர் அரை நிர்வாணமாக பங்கேற்று, மயிலாடுதுறை தலைமை அஞ்சலகத்தில் இருந்து மத்திய அரசுக்கு கடிதம் அனுப்பினர்.

**ஈரோடு தெற்கு:** இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் பெருந்துறையில் கட்சியின் ஒன்றிய செயலாளர் வி. சி. செந்தில்குமார் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

கட்சியின் மாநில செயற்குழு உறுப்பினர் திருப்பூர் எம்.ரவி, மாவட்டச் செயலாளர் எஸ்.டி.பிரபாகரன் ஆகியோர் உரையாற்றினர். சென்னிமலை ஒன்றிய செயலாளர் எம்.செங்கோட்டையன் நன்றி கூறினார். கட்சியின் ஈரோடு தெற்கு மாவட்ட துணை செயலாளர் எஸ். சின்னசாமி, தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநிலத் துணைத் தலைவர் சி. எம். துளசிமணி, கட்சியின் முன்னாள் ஈரோடு மாவட்டச் செயலாளர் ஆர். திருநாவுக்கரசு, மாவட்டக் குழு உறுப்பினர் எஸ். பொன்னுசாமி, பெருந்துறை ஒன்றிய துணைச் செயலாளர்கள் கே. ஆர். தங்கவேலு உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# அணு ஆயுதங்களை முற்றாக அழித்திடுக!

## ஹிரோஷிமா நினைவு நாள் நிகழ்ச்சியில் தீர்மானம்




ஹிரோஷிமா நினைவு நாள் கூட்டம் திருச்சி அருண் ஓட்டல் கூட்ட அரங்கில் அகில இந்திய சமாதான ஒருமைப்பாட்டு கழகத்தின் சார்பில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு சமாதான ஒருமைப்பாட்டுக் கழகத்தின் மாவட்டச் செயலாளர் முனைவர் ஆர். மணிமோகன் தலைமை வகித்தார். இந் நிகழ்ச்சியில் சமாதான ஒருமைப்பாட்டுக்கு கழகத்தின் மாநிலப் பொதுச் செயலாளர் ஜி.ஆர்.இரவீந்திரநாத் சிறப்புரையாற்றினார்.

திருச்சி பாரதி கலைக்குழு லெனின்காந்தி ஆகியோரின் இசைப் பாடல்களுடன் தொடங்கியது. கவிஞர்கள் கோ.கலியமூர்த்தி, ஆநிறைச்செல்வன் மற்றும் பா. சிபி ஆகியோர் கவிதை வாசித்தனர்.

தமிழ் நாடு கலை இலக்கிய பெருமன்ற மாநில துணைத் தலைவர் ம.செல்வராஜ், அகில இந்திய வாங்கி ஊழியர் சம்மேளன மாவட்டச் செயலாளர் கோ. ராமராஜ், சமாதான ஒருமைப்பாட்டுக்கு கழகத்தின் தேசிய நிர்வாகக் குழு உறுப்பினர் பாலச்சந்திரன், சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கத்தின் மாநில தலைவர் மருத்துவர் கு.முத்துக்குமார் ஆகியோர் பேசினார். சமாதான ஒருமைப்பாட்டுக்கு கழகத்தின் மாவட்டப் பொருளாளர் வே.நடராஜா நன்றி கூறினார்.

**கோவை:** கோவையில் அகில இந்திய சமாதான ஒருமைப்பாட்டு கழகம் சார்பில் ஹிரோஷிமா நினைவு நாள் அஞ்சலி நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

இந்த நிகழ்ச்சிக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில பொருளாளர் எம். ஆறுமுகம் தலைமை தாங்கினார். அகில இந்திய சமாதான ஒருமைப்பாட்டு கழகத்தின் மாவட்ட செயலாளர் சையத் இப்ராஹிம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளர் சி. சிவசாமி, பேராசிரியர் முருகேசன், மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் வெங்கடாசலம், வழக்கறிஞர் ரங்கநாதன், உடுமலை செல்வராஜ், சி. ஏ.வேலுசாமி, எஸ். ஆறுமுகம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# கட்டுமானம், அமைப்புசாரா தொழிலாளர் பிரதிநிதிகள் மாநில கருத்தரங்கம்

கட்டுமானம் மற்றும் அமைப்புசாரா தொழிலாளர்களின் மாநில கருத்தரங்கம் சென்னை தொன் பாஸ்கோ சிகா மையத்தில் நடைபெற்றது. என். சி. சி. (சி எல்) தேசிய ஒருங்கிணைப்பாளர் சுபாஷ் பட்நாகர் தலைமை தாங்கினார். அமைப்புசாரா தொழிலாளர் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் கீதா நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார் .

கருத்தரங்கத்தில் பி. டபிள்யு. ஐ. தெற்காசியா ஒருங்கிணைப்பாளர் ராஜு சர்மா, தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் நல வாரிய தலைவர் பொன் குமார் சிறப்புரையாற்றினார். தமிழ்நாடு ஏஐடியூசி கட்டட தொழிலாளர் சங்கத்தின் மாநில செயலாளர் இரா.துரைசாமி, ஐ. என். டி. யு. சி. தலைவர் பன்னீர்செல்வம், எச். எம். எஸ். தலைவர் சுப்பிரமணியன், மண்பாண்ட தொழிலாளர் சங்கத்தின் தலைவர் சேம. நாராயணன், தொழிலாளர் நலத்துறை இணைச் செயலாளர் ரவிச்சந்திரன் மற்றும் பல்வேறு மாநிலங்களில் இருந்து வருகை புரிந்த அனைத்து தொழிற்சங்க தலைவர்களும் பங்கு ஏற்று கருத்துரையாற்றினார்கள். கருத்தரங்க நிறைவில் முன்வைக்கப்பட்ட தீர்மானங்கள்:

ஒன்றிய அரசின் தொழிலாளர் தொகுப்பு சட்டங்களை திரும்ப பெற்று, கலைஞர் கொண்டு வந்த தொழில்வாரியான நல வாரியங்களை பாதுகாக்க சட்டமன்ற தீர்மானம் நிறைவேற்ற வேண்டும்.

அனைத்து தொழிலாளர்களுக்கும் குறைந்தபட்சம் 3 ஆயிரம் ஓய்வூதியம் வழங்கப்பட வேண்டும் .

அமைப்புசாரா தொழிலாளர்கள் நல வாரியத்திற்கு சமூக பாதுகாப்பு திட்டங்களை செயல்படுத்த பட்ஜெட்டில் மூன்று சத நல வரி வசூலிக்க வேண்டும். உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

நிகழ்ச்சியில் ஏஐடியுசி மாநில செயலாளர் வி. ஆதிமூலம், ஆட்டோ சம்மேளன பொதுச் செயலாளர் ப.மாரியப்பன், பெண் கட்டுமான துணை ஒருங்கிணைப்பாளர் சுஜாதா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# மணிப்பூரில் தொடரும் வன்முறைக்கு பழங்குடி மக்கள் சங்கம் கண்டனம்



கோவையில் தமிழ்நாடு பழங்குடி மக்கள் சங்கத்தின் கோவை மாவட்ட அமைப்பு பேரவைக் கூட்டம் , கோவை ஜீவா இல்லத்தில் என்.நடராஜன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலப் பொருளாளர் எம். ஆறுமுகம் பேரவைக் கூட்டத்தை துவக்கிவைத்து சிறப்புரை நிகழ்த்தினார். பழங்குடி மக்கள் சங்கத்தின் மாநிலத் தலைவர் என். நஞ்சப்பன் பழங்குடி மக்களின் உரிமைகளும் வாழ்வும்" என்ற தலைப்பில் சிறப்புரை நிகழ்த்தினார். இதில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளர் சி.சிவசாமி, மாவட்ட துணை செயலாளர் மௌ.குணசேகர், மாவட்ட பொருளாளர் சி.தங்கவேல் ஆகியோர் சிறப்புரை நிகழ்த்தினர்.

இந்த பேரவைக் கூட்டத்தில் 35 பேர்கள் கொண்ட அமைப்புக் குழுவும், மாவட்ட அமைப்பின் சிறப்புத் தலைவராக எம். ஆறுமுகம் எக்ஸ்.எம்.எல்.ஏ, தலைவராக ஆர். வேட்டை (நீலாம்பதி), செயலாளராக என். மீராபாய் ஆகியோரும் தேர்வு செய்யப்பட்டனர்.

மணிப்பூரில் நடைபெறும் வன்முறையில் பழங்குடி மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். மணிப்பூர் பழங்குடி மக்களுக்கு ஒன்றிய அரசு முழு பாதுகாப்பு வழங்க வேண்டும்.

ரிசர்வ் பாரஸ்ட் பகுதிகளில் பாரம்பரியமாக வசித்து வரும் பழங்குடி மக்களை வனத்துறை அதிகாரிகள் சட்ட விரோதமாக வெளியேற்றக் கூடாது.

செட்டில்மெண்ட் பகுதிகளில் பழங்குடி மக்கள் பாரம்பரியமாக வாழ்ந்து வரும் மக்களுக்கு குடியிருப்பு மனை பட்டா வழங்க வேண்டும்.

என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## கலை இலக்கிய அரங்கம்

### கவிதை போட்டி – பரிசளிப்பு விழா

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் சிவகாசி கிளை மற்றும் கந்தகப்பூக்கள் இலக்கிய அமைப்பு இணைந்து நடத்திய "கவிதை போட்டி" யும் "பரிசளிப்பு விழா"வும் நடைபெற்றது.

"என்ன பிரச்சனை" என்கிற தலைப்பின்கீழ் போட்டி நடைபெற்றது. போட்டியில் பங்கேற்ற கவிதைகளில் முதல் பரிசை மா.பேச்சிமுத்து அவர்கள் எழுதிய கவிதையும், இரண்டாம் பரிசு மா.சக்திமாரி எழுதிய கவிதையும், மூன்றாம் பரிசை கா.சேகர் அவர்கள் எழுதிய கவிதையும் பெற்றது.

நிகழ்வினை த.க.இ.பெ சிவகாசி கிளைச் செயலாளர் ஏ. ஆர். எம். முத்து ஒருங்கிணைத்தார். த.க.இ.பெ விருதுநகர் மாவட்ட துணைத் தலைவர். இளைய பாரதி கந்தகப் பூக்கள் அவர்கள் தலைமை தாங்கினார். கந்தகப்பூக்கள் இலக்கிய அமைப்பின் செயலாளர் கந்தகப் பூக்கள் ஸ்ரீபதி முன்னிலையில் கூட்டம் துவங்கியது. இலக்கிய ராஜா இலக்கிய அமைப்புகளின் வரலாறு குறித்து சிறப்புரையாற்றினார். படைப்பாளிகளுக்கு சிறப்பு பரிசுகளும் சான்றிதழ்களும் அளிக்கப்பட்டு கௌரவப்படுத்தப்பட்டனர்.

தொடர்ந்து முனைவர் பொ.நா கமலா அம்மா அவர்கள் உட்பட பலரும் கவிதைகளுக்கு விமர்சனம் அளித்து படைப்பாளர்களை கௌரவப்படுத்தினர் .

### இலக்கியக் கூடுகை

'நாமார்க்கும் குடியல்லோம்' நிகழ்விற்கு கவிஞர் இரா.ஆனந்தி அவர்கள் தலைமை வகித்தார். பொ. பொன்னுலட்சுமி வரவேற்புரை வழங்கினார். கண்மணி ராசா அறிமுகவுரை ஆற்றினார்.

கிளையின் மதிப்புறு தலைவர் மருத்துவர் கணேசன் நிகழ்ச்சியை துவங்கி வைத்தார்.

பிரகாஷ்குமார் அவர்களின் புகைப்பட கண்காட்சி, வைமா பள்ளி தாளாளர் திருப்பதி செல்வம் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

கோபிகண்ணனின் 'அன்புவைத் தேடி' க்ரைம் நாவல் நமது தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் மாநில தலைவர் ஏஸ்.கே.கங்கா அவர்கள் வெளியிட, எஸ்.கணேசன் மற்றும் ஜி.தவமணி பெற்றுக்கொண்டனர்.

கவிஞர் இரா.ஆனந்தி, மாதவன் ஆகியோர் நூலை அறிமுகம் செய்தார்கள். 'கவிதையின் பாதை கனவின் பாதை' என்ற தலைப்பில் கவிஞர் கலியமூர்த்தி சிறப்புரை நிகழ்த்தினார்.

உணவு இடைவேளைக்கு பின்பு கவிதை வாசிப்பு நடைபெற்றது . தொடர்ந்து நம் மண்ணின் மைந்தர் திரு கண்மணி ராசா அவர்கள் கவிதைக்கு நூறு வழி' என்ற தலைப்பில் உரையாற்றினார்.

எழுத்தாளர் சங்கத்தின் மதிப்புறு தலைவர் தமிழ்செல்வன் அவர்களுக்கு சிறப்பு செய்யப்பட்டது . கூடுகையின் நிறைவுரையை எஸ்.கே.கங்கா த.க.இ.பெ.மாநில தலைவர் நிகழ்த்தினார். கண்மணி ராசா நன்றியுரையாற்றினார்.

### நூல் அறிமுக விழா

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் கோவை கிழக்கு மண்டல கிளையின் சார்பில் புத்தக அறிமுக விழா நடராஜன் தலைமையில் நடைபெற்றது. ஜெகநாதன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

கலை இலக்கியப் பெருமன்றத்தின் கோவை மாவட்ட தலைவர் வெ. சுப்பிரமணியம் எழுதிய "அரசாட்சியில் மனசாட்சி" என்ற புத்தகம் குறித்து கலை இலக்கியப் பெருமன்றத்தின் மாநில பொதுச் செயலாளர் த. அறம் உரையாற்றினார்.

வெ. சுப்பிரமணியன் ஏற்புரை நிகழ்த்தினார். இரா. கருணாநிதி நன்றி கூறினார்

### நூல் அறிமுக விழா

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் கோவை கிழக்கு மண்டல கிளையின் சார்பில் புத்தக அறிமுக விழா நடராஜன் தலைமையில் நடைபெற்றது. ஜெகநாதன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

கலை இலக்கியப் பெருமன்றத்தின் கோவை மாவட்ட தலைவர் வெ. சுப்பிரமணியம் எழுதிய "அரசாட்சியில் மனசாட்சி" என்ற புத்தகம் குறித்து கலை இலக்கியப் பெருமன்றத்தின் மாநில பொதுச் செயலாளர் த. அறம் உரையாற்றினார்.

வெ. சுப்பிரமணியன் ஏற்புரை நிகழ்த்தினார். இரா. கருணாநிதி நன்றி கூறினார்.

### நூல் வெளியீட்டு விழா

எழுத்தாளர், கவிஞர் நாணற்காடனின் "ஒரு கத சொல்லுங்க மாமா" நூல் வெளியீட்டு விழா ஈரோடு புத்தகத் திருவிழா தடாகம் பதிப்பக அரங்கில் நடைபெற்றது. த.நா.கலை இலக்கியப் பெருமன்றத்தின் மாநிலப் பொருளாளர். ப.பா.ரமணி நூலை வெளியிட, ரெ.மதன், முதல்வர், ஜே.வி.எம். மெட்ரிக் பள்ளி,இராசிபுரம் பெற்றுக் கொண்டார். கவிஞர் நாணற்காடன் நூல் உருவாகிய பின்னணியை விளக்கினார். நூலை பதிப்பித்துள்ள நம் பதிப்பகத்தின் இவள் பாரதி நன்றி கூறினார். சத்தியமங்கலம் சுடர் நடராஜ், பெருமன்ற மாவட்டச் செயலாளர் ஓடை துரையரசன், பேராசிரியர் த.திலிப்குமார், ஆவணப்பட இயக்குனர் செல்வின், ஓவியர் ஞானி, மற்றும் சிறார்கள் பங்கேற்றனர்.

### மொழி பாடத்திற்கான வேலை நேரத்தை குறைக்காதீர்!

புதுச்சேரி அரசின் உயர் கல்வித்துறை அமைச்சர் நமச்சிவாயம் அவர்களிடம் புதுச்சேரி பல்கலைக் கழகத்தின் இணைப்பு கல்லூரிகளில் மொழி பாடத்திற்கான வேலை நேரம் குறைக்கப்படுவது குறித்து உரிய நடவடிக்கை எடுக்கக் கோரி புதுச்சேரி மாநிலக் கலை இலக்கியப் பெருமன்றம் சார்பில் வலியுறுத்தப்பட்டது.

## ஏஐடியுசி பிரச்சார பயணம்

ஜனநாயக விரோத! தொழிற்சங்க விரோத! ஒன்றிய ப ஜ க அரசினை இந்தியாவை விட்டு அகற்ற! தமிழகத்தில் காலூன்ற விடாமல் தகர்க்க!

தென்சென்னை ஏஐடியுசி சார்பாக "கோடம்பாக்கம் முதல் பெரும்பாக்கம் வரை" பிரச்சார இயக்கத்தை எஸ். ஏழுமலை மாநில பொருளாலர் கோவில் மனை குடியிருப்போர் சங்கம் பிரச்சார இயக்கத்தில் ஏஐடியுசி மாநிலச்செயலாளர்

ஆ. பாஸ்கர், சோழிங்கநல்லூர் இந்தியக்கம்யூனிஸ்ட் கட்சி தொகுதிச்செயலாளர் ஜி. கண்ணதாசன், தென்சென்னை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாவட்டக்குழு உறுப்பினர் பழ. முருகப்பன், ஏஐடியுசி மாவட்ட பொருளாளர் ஆர். விஜயகுமார், ஒடுக்கப்பட்டோர் வாழ்வு உரிமை இயக்க மாவட்ட செயலாளர் சி. க. சம்பத், செங்கொடி ஆட்டோ மாவட்டதலைவர் ம. இரங்கநாதன், செயலாளர் டி. சுப்பிரமணி ஏஐடியுசி மாவட்ட பொதுச்செயலாளர் ஆர். அழகேசன் உள்ளிட்ட ஏராளமான தோழர்கள் கலந்துகொண்டனர்

## ஏஐடியுசி ஆட்டோ ஸ்டாண்ட் பெயர் பலகை திறப்பு விழா

புனித தோமையார் மலை ஆலந்தூர் மெட்ரோ ரயில் நிலையம். பரங்கிமலை பறக்கும் ரயில் நிலையம் சந்திப்பில் ஸ்டாண்ட் தலைவர் தோழர் வி. சுப்பிரமணி தலைமையில் ஏஐடியுசி கொடியை அந்தோணி ராஜ் ஏற்றி வைத்தார். பெயர் பலகையை ஏஐடியுசி செங்கொடி ஆட்டோ மாவட்ட செயலாளர் டி. சுப்பிரமணி திறந்து வைத்தார். ஏஐடியுசி தென் சென்னை மாவட்ட செயலாளர் அழகேசன் மற்றும் மாவட்ட பொருளாளர் ஆர். விஜயகுமார், ஆட்டோ சங்கத்தின் மாவட்ட தலைவர் எம். ரங்கநாதன் முன்னிலையில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில குழு உறுப்பினரும் தென் சென்னை மாவட்ட ஏஐடியுசி தொழிற்சங்கத்தின் கௌரவ தலைவருமான எஸ். ஏழுமலை சிறப்புரை ஆற்றினர்.

## டி.கே.நல்லப்பன் நினைவு நாள் சிறப்பு பேரவைக் கூட்டம்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவரும், முன்னாள் பெருந்துறை சட்டமன்ற உறுப்பினருமான டி. கே. நல்லப்பனின் நான்காம் ஆண்டு நினைவு நாள் சிறப்புப் பேரவைக் கூட்டம், பெருந்துறையில் ஒன்றியச் செயலாளர் வி.சி.செந்தில்குமார் தலைமையில் நடைபெற்றது.

முன்னதாக, டி. கே. நல்லப்பன் திருவுருவப்படத்திற்கு மலரஞ்சலி செலுத்தப்பட்டது. பின்னர் நடைபெற்ற பேரவைக் கூட்டத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயற்குழு உறுப்பினர் திருப்பூர் எம். ரவி, ஈரோடு தெற்கு மாவட்டச் செயலாளர் எஸ். டி. பிரபாகரன், ஏஐடியுசி மாநில செயலாளர் எஸ். சின்னசாமி, ஏஐகேஎஸ் மாநில துணைத்தலைவர் சி. எம். துளசிமணி, கட்சியின் ஒன்றிய துணைச் செயலாளர் கே. ஆர். தங்கவேலு ஆகியோர் உரையாற்றினர். நிறைவாக ஒன்றிய துணைச் செயலாளர் ஜெ. உமாநாத் சிங் நன்றி கூறினார்.

## புதிய வீச்சோடு எட்டயபுரம் பாரதி விழா

எட்டயபுரம் பாரதி முற்போக்கு வாலிபர் சங்கத்தை மீண்டும் முழு வீச்சோடு கொண்டு செல்ல வேண்டிய கடமை முற்போக்கு சிந்தனையாளர்கள் அனைவருக்கும் உள்ளது. அதன் அடிப்படையில் நடைபெற்ற பாரதி முற்போக்கு வாலிபர் சங்கத்தின் பேரவை கூட்டத்தில், தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்றத்தின் மாநில பொதுச் செயலாளர் மருத்துவர் த. அறம் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் சத்திய பாலன், நவநீதகிருஷ்னன், மாநிலக் குழு உறுப்பினர் ராம சுப்பிரமணியன் கலந்து கொண்டார்கள். இந்த கூட்டத்தில் புதிய நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டனர்.

மதிப்புறு தலைவராக முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சோ. ராஜேந்திரன் தலைவராக வெங்கடேசராஜா, செயலாளராக வி. பாலமுருகன், பொருளாளராக முருகேஷ் ஆகியோரும் தேர்வு செய்யப்பட்டார்கள்.

## இந்த வார தம்பிக்குறள்

### 126. உழைப்பார்க்குரை

**உரைத்தார் உரைத்தவை எல்லாஅம் ஊனம்**
**உழைப்பார் குதவா தெனின்.**

உழைப்பவர்க்கு உதவிசெய்யாத அறிவுரைகள் எவையானாலும், அவை குறையுடையனவே! (அறிஞர் சொல்லியவையாயினும்).

**உழைப்பாரை ஒன்றா உணரா பிழையறிவை**
**பீழையென பேசும் பிடித்து.**

உழைப்பவர் திறமையை உணர்ந்து பாராட்டாத தவறான அறிவு, சிறப்பான அறிவாகப் பேசப்பட்டாலும், அந்த அறிவு தவறான அறிவாகவே கருதப்படும்.

# பிரிட்டன் எண்ணெய் நிறுவனங்கள் வாரிச் சுருட்டுவதா?

## முதலாளிகளுக்கு தொழிற்சங்கங்கள் கேள்வி

சுழலும் உலகம்




எண்ணெய் விநியோகம் செய்யும் நிறு வனங்களில் உலகிலேயே பெரிய நிறு வனங்களில் ஒன்றும், பிரிட்டனின் முன்னணி நிறுவனமுமான பிரிட்டிஷ் பெட்ரோலியம் பெரும் லாபத்தை ஈட்டி யிருக்கிறது. ஜூன் மாதம் நிறைவு பெற்ற காலாண்டில் 200 கோடி யூரோக்களை லாபமாக சம்பாதித்திருப்பதாக நிர்வாகம் வெளியிட்டுள்ள அறிக்கை தெரிவிக்கிறது. இதுவரையில், அதாவது நடப்பாண்டின் முதல் ஆறு மாதங்களில் 590 கோடி யூரோ வருமானம் என்றும் கூறியிருக்கிறார்கள்.

தங்கள் நிறுவனத்தின் பங்குதாரர் களுக்குப் பெரும் அளவில் பங்குத் தொகை யாக பணத்தை வழங்கப் போவதாக பிரிட்டிஷ் பெட்ரோலியம் கூறியிருக்கிறது. இந்த அறிவிப்புக்கு தொழிற்சங்கங்கள், எதிர்க்கட்சிகள் மற்றும் சுற்றுச்சூழல் போராளிகள் கடுமையான எதிர்ப்பு தெரி வித்திருக்கிறார்கள். நாடு முழுவதும் மக்கள் எரிபொருட்களின் விலையுயர்வால் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ள நிலையில், பங்குதாரர்களுக்கு பணத்தை வாரி வழங்குவது அநியாயம் என்று கண்டித்துள்ளனர்.

### வரிகளில் ஓட்டை

மிகவும் கடுமையான வரியை எண் ணெய் நிறுவனங்கள் மீது அரசு விதித் திருப்பதாகச் செய்திகள் வெளியாகின. அந்த வரி விதிப்பில் ஏராளமான ஓட்டை கள் இருப்பதாகத் தொழிற்சங்கங்கள் ஏற்கனவே சுட்டிக்காட்டியிருந்தன. ஆனால், விதிவிலக்குகள் நிறுவனங்களுக்கு சாதகமாகவே அமைந்தன.

வரியைக் கணக்கில் எடுக்கும்போது, வரும் வருமானத்தில் இருந்து புதிய முதலீடுகளைச் செய்வதாக இருந்தால் அதற்கு வரிவிலக்கு என்ற அம்சத்தை அரசு சேர்த்தது. இந்த விதிவிலக்கைப் பயன் படுத்தி பல மோசடிகள் நடந்திருப்ப தாகக் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. “முறை யான வரியை சுமத்தாமல் கோடிக்கணக்கான யூரோக் களை நிறுவனங்களின் வசமே அரசு விட்டு வைக்கிறது. தங்கள் தேவைகளை நிறை வேற்ற முடியாமல் மக்கள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் முதலாளிகள் பணத்தை வாரிச் சுருட்டுகிறார்கள்”.

மக்கள் விரக்தியடைவார்கள் என்று தனக்கும் தெரியும் என்று பிரிட்டன் பிரதமரான ரிஷி சுனக் கூறுகிறார். புதுப்பிக்கத்தக்க எரிபொருட்களை உருவாக்கும் திட்டங்களுக்காகவே பெரிய நிறுவனங்களுக்கு வரிவிலக்குகள் தரப்படுவதாக சமாளிக்க முயற்சித்திருக் கிறார். அவரது கருத்திற்கு எதிர்க்கட்சி களும் கண்டனம் தெரிவித்துள்ளன.

# சீனாவில் ஸ்மார்ட் போன் பயன்பாட்டுக்கு கட்டுப்பாடு

சீனாவில் ஸ்மார்ட்போன் பயன்படுத்த புதிய கட்டுப்பாட்டு நடைமுறைகளை அந்நாட்டு அரசு கொண்டு வரவுள்ளதாக, சீனாவின் சைபர் ஸ்பேஸ் ரெகுலேட்டர் நிறுவனம் அறிவிப்பு வெளி யிட்டுள்ளது. அந்த அறிவிப்பில்,”16 முதல் 18 வயதுடையவர்கள் தங்கள் ஸ்மார்ட்போன்களில் ஒரு நாளைக்கு அதிகபட்சம் இரண்டு மணிநேரம் மட்டுமே ஸ்மார்ட்போன் பயன்படுத்த வேண்டும். 8 முதல் 16 வயது வரையிலான குழந்தைகளுக்கு ஒரு மணிநேரமும், 8 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு 8 நிமிடங்கள் மட்டுமே ஸ்மார்ட்போன் பயன்படுத்த பெற்றோர்கள் அனுமதிக்க வேண்டும். மேலும் ஸ்மார்ட்போன் வழங்கு பவர்கள் சிறிய பயன்முறையை அறிமுகப்படுத்தவேண்டும்” எனசீனாவின் செல்போன் கட்டுப்பாட்டாளர் அமைப்பு நெறிமுறைகளை வகுத்துள்ளதாக சைபர்ஸ் பேஸ் ரெகுலேட்டர் தகவல் தெரிவித்துள்ளது.

# நைஜீரியா: தொழிற்சங்கக் கோரிக்கை ஏற்பு

ஆப்பிரிக்கக் கண்டத்திலேயே அதிகமான மக்கள் தொகையைக் கொண்ட நாடு நைஜீரியா. இங்கு பெரும் பணக்காரர்களுக்கு சாதகமான நடவடிக்கைகளை ஜனாதிபதியும், அவரது அரசும் எடுத்து வருகின்றன. பெரும் நிறுவனங்களுக்கு ஆதரவாக சமையல் எரிவாயுவிலையைஉயர்த்தியதால்,உணவு மற்றும் அத்தியாவசியப் பண்டங்களின் விலைகள் அதிகரித்துள்ளன.

இந்நிலையில் மக்களுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடியைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படாவிட்டால் மக்களைத் திரட்டி பெரும் போராட்டங்கள் நடக்கும் என்று தொழிற்சங்கங்கள் எச்சரிக்கை விடுத்தன. மக்கள் மத்தியில் பெரும் கோபம் நிலவுவதால் அரசாங்கத்திற்கு நெருக்கடி ஏற்படும் என்பதை உணர்ந்த ஜனாதிபதி, சில கோரிக்கைகளை ஏற்க முடிவு செய்தார்.

குடும்பங்களுக்குப் பலன் தரும் வகையில் 2 லட்சம் டன் உணவு தானியங்கள் வழங்கப்படும். உணவுப் பொருட்களின் விலைகளைக் கட்டுப்படுத்த இந்த நடவடிக்கை உதவும் என்று பேலா டினுபு உறுதி அளித்துள்ளார். விவசாயிகளுக்காக உரங்களுக்கான மானியங்களை அதிகரிக்கவும் அவர் உத்தரவிட்டிருக்கிறார்.



# சீன மருத்துவர்கள் உலகம் முழுவதும் 29 கோடி சிகிச்சை

கடந்த 60 ஆண்டுகளில் உலகம் முழு வதும் பயணம் செய்து 29 கோடி மருத்துவ சிகிச்சைகளை எந்தவிதக் கட்டணமும் வசூலிக்காமல் சீன மருத்துவக்குழுக்கள் செய்திருக்கின்றன.

ஏப்ரல் 6, 1963 ஆம் தேதியன்று சீனாவில் இருந்து அல்ஜீரியாவுக்கு சென்றதுதான் சீனாவின் முதல் மருத்துவக்குழுவாகும். அப்போதிருந்து கடந்த 60 ஆண்டுகளில் ஐந்து கண்டங்களிலும் உள்ள பல்வேறு நாடுகளில் மருத்துவ உதவியை சீனா செய்திருக்கிறது.

76 நாடுகளுக்கு பயணித்து மருத்துவ சிகிச்சை அளித்த மருத்துவர்கள், செவி லியர்கள் உள்ளிட்டவர்களின் எண்ணிக்கை 30 ஆயிரத்தைத் தாண்டி யிருக்கிறது. பல்வேறு நாடுகளில் உயிர் காக்கும் சிகிச்சையை சீன மருத்துவர்கள் குறித்த நேரத்தில் செய்துள்ளனர்.

கடந்த வாரத்தில் கூட, நோய் களுடனேயே தங்கள் உழைப்பைச் செலுத்தி வந்த 240 எத்தியோப்பியத் தொழி லாளர்களுக்கு மருத்துவ சிகிச்சை செய்ய சீன மருத்துவக் குழுவினர் சென்றனர். அந்நாட்டின் தலைநகர் அட்டிஸ் அபாபா வில் இருந்து 40 கிலோ மீட்டர் தொலை வில் உள்ள கிழக்குத் தொழில் மண்ட லத்தில் பணிபுரிந்து வந்த அந்த 240 தொழி லாளர்களுக்கும் முழுமையான மருத்து வப் பரிசோதனையும், அவர்களைத் தாக்கி யுள்ள நோய்களுக்கு மருந்து உள்ளிட்ட வையும் கிடைத்தன.





36 மருத்துவர்களைக் கொண்ட இந்த சீன மருத்துவக்குழு, எத்தியோப்பி யாவுக்கு செல்லும் 24வது மருத்துவக் குழு வாகும். மேலும் தலைநகர் அட்டிஸ் அபாபாவில் மிகப்பெரிய பொது மருத்துவ மனையையும் கட்டிக் கொடுத்திருக் கிறார்கள். மருத்துவக்குழுக்களில் சிறப்பு மருத்துவர்களும், வல்லுநர்களும் இடம் பெற்றிருக்கிறார்கள். இந்த அனைத்து மருத்துவ சிகிச்சைகள், மருந்து கள், அறிவுரைகள் உள்ளிட்ட அனைத்துமே கட்டணம் எதுவும் வசூலிக்கப்படாமல் செய்யப்படுகின்றன என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

இந்த 24வது சீன மருத்துவக்குழு வுக்குத் தலைவராக இருக்கும் சென் ஜாவோகி, “இலவசமாக தரப்படும் இந்த மருத்துவ ஆதரவைத் தாண்டி, கூடுதல் மருத்துவப் பரிசோதனை மற்றும் அடுத்த டுத்து செய்ய வேண்டிய மருத்துவ சிகிச்சை கள் ஆகியவற்றையும் செய்து தரப் போகிறோம். திருனேஷ்பெய்ஜிங் மருத்துவமனையில்தான் எங்கள் குழு முகாமிட்டிருக்கிறது. சிகிச்சை தேவைப் படக்கூடியவர்களை அங்கு வரவழைத்து சிகிச்சைகள் தரப்போகிறோம்” என்றார்.

34 கோடி அமெரிக்க டாலர் மதிப்பிலான ஆயுதங்களை தைவானுக்கு அனுப்பப் போவதாக கடந்த வாரத்தில் அமெரிக்க ஜனாதிபதியின் வெள்ளை மாளிகை யிலிருந்து அறிவிப்பு வெளியானது. இந்த ஆயுத விற்பனை இந்தப் பிராந்தியத்தின் அமைதி மற்றும் நிலைத்தன்மையைக் குலைக்கக்கூடியது என்று தேசியப் பாதுகாப்புக்கான சீன அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் டான் கெபெய் தெரிவித்துள்ளார்.

நேபாளத்தில் தற்போது நடைமுறையில் உள்ள விகிதாச்சார பிரதிநிதித்துவ முறையை விலக்கிக் கொள்ள வேண்டும் என்று அந்நாட்டின் முக்கிய கட்சிகளில் ஒன்றான நேபாள காங்கிரஸ் கருத்து தெரிவித்துள்ளது. அண்மையில் அக்கட்சியின் தேசிய செயற்குழு நடைபெற்றது. அக்கூட்டத்தில் இக்கருத்து தெரிவிக்கப்பட்டாலும் தீர்மானம் எதையும் அவர்கள் நிறைவேற்றவில்லை.

# கலை இலக்கியப் பூங்கா

பரிசளிப்பு விழாவில் எழுத்தாளர் தனுஷ்கோடி ராமசாமி நினைவு சிறுகதை போட்டி2023ற்கான பரிசு பெற்ற எழுத்தாளர்களுக்கு பரிசும், சான்றிதழும் வழங்கப்பட்டது.

### தனுஷ்கோடிராமசாமி அறக்கட்டளை, தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம், இலக்கியக் குழு இணைந்து நடத்திய

## நூல் வெளியீடு, பரிசளிப்பு சிறுகதை பயிலரங்கம்



எழுத்தாளர் தனுஷ்கோடிராமசாமி அறக்கட்டளை மற்றும் தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம், இலக்கியக் குழு இணைந்து நடத்திய நூல் வெளியீடு, பரிசளிப்பு, சிறுகதைப் பயிலரங்கம் சாத்தூர், கே. ஏ. பால்நாடார் திருமண மண்டபத்தில் உள்ள தனுஷ்கோடி அரங்கில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்திற்கு MACS ரவீந்திரன் தலைமை ஏற்று தலைமை உரை வழங்கினார்.

ஜெயா ஜனார்த்தனன் முன்னிலை வகித்தார். இலக்கியக் குழு செயலாளர் முனைவர் கருமுருகன் வரவேற்புரை நல்கினார். மாநிலத் தலைவர் எஸ். கே. கங்கா வாழ்த்துரை வழங்கினார். விருதுநகர் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் வீ. ப. ஜெயசீலன், தனுஷ்கோடிராமசாமி சிறுகதை தொகுப்பினை வெளியிட்டார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில துணைச் செயலாளர் மு.வீரபாண்டியன், எழுத்தாளர் பூமணி, எழுத்தாளர் வண்ணதாசன், எழுத்தாளர் தமிழ்ச்செல்வன், லட்டு கருப்பசாமி பெற்றுக் கொண்டனர்.

பின்னர் நடைபெற்ற சிறுகதைப் பயிலரங்கில் மாவட்ட ஆட்சியர் ஜெயசீலன் துவக்க உரையாற்றினார். பின்னர் நடந்த பரிசளிப்பு விழாவில் எழுத்தாளர் தனுஷ்கோடி ராமசாமி நினைவு சிறுகதை போட்டி 2023ற்கான பரிசு பெற்ற எழுத்தாளர்களுக்கு பரிசும், சான்றிதழும் வழங்கப்பட்டது, முதல் பரிசினை எழுத்தாளர் புலியூர் முருகேசன் 'பீதணக்கன்' என்ற சிறுகதைக்காக பெற்றார், அவருக்கு மெரிட் பெருமாள்சாமி பரிசினை வழங்கினார். இரண்டாம் பரிசு 'நிறம் மாறும் சட்டைகள்' சிறுகதைக்காக லீலா வினோதன் பெற்றார். அவருக்கு பத்மநாபன் பரிசினை வழங்கினார். மூன்றாவது பரிசு 'பெரிய புள்ள' சிறுகதைக்காக செல்லப்பாண்டி அவர்களுக்கு, ராஜேஷ் பரிசு வழங்கினார் 'மாய கண்ணாடி' சிறுகதைக்காக ஆறுதல் பரிசு நித்வி அவர்களுக்கு வழங்கப்பட்டது. செந்தில் முருகன் கருப்புசாமி பரிசினை வழங்கினார்.

இந்த ஆண்டு நடந்த சிறுகதைப் போட்டிக்கு வந்த தேர்ந்தெடுக்கப்பட்ட 20 கதைகளை கொண்ட சிறுகதை தொகுப்பு 'மழையும் வெயிலும்' என்ற பெயரில் வெளி யிடப்பட்டது. இந்நூலினை எழுத்தாளர் பூமணி வெளியிட, குறிஞ்சி செல்வர் கொ. மா. கோதண்டம், எழுத்தாளர் முத்துபாரதி, ஆறுமுகச்சாமி பெற்றுக் கொண்டனர்.

எழுத்தாளர் மணிமாறன் இந்த போட்டி நடுவராக இருந்த அனுபவத்தையும் இந்த போட்டியில் கலந்து கொண்ட 200க்கும் மேற்பட்ட கதைகளின் போக்குகளையும், கருத்துகளையும் எடுத்துக் கூறினார்.

சிறுகதை பயிலரங்கு அமர்வில் எழுத்தாளர் தமிழ்ச்செல்வன் தமிழ் சிறுகதையின் வரலாறு குறித்து காணொளி மூலம் மிக விரிவான முறையில் பேசினார்.

எழுத்தாளர் ஸ்ரீதர் கணேசன், ஜெயகாந்தன் தனுஷ்கோடி ராமசாமி சிறுகதைகளை ஒப்பிட்டு பேசினார்.

முனைவர் அகிலா கிருஷ்ணமூர்த்தி, தனுஷ்கோடி ராமசாமி கதைகளின் நுணுக்கங்களின் பற்றியும் விரிவாக பேசினார். எழுத்தாளர் சாரோன் விந்தன் கதை குறித்தும், கதை எழுத வேண்டிய அவசியம் என்ன என்பது குறித்தும், இன்றைய சமூகம் தன் வரலாறுகளை பதிவு செய்யாமல் செல்வது தவறு என்றும் பேசினார். நிறைவாக எழுத்தாளர் சோலச்சி நன்றி தெரிவித்தார். நிகழ்வை எழுத்தாளர் கவிபாலா மற்றும் திருக்குறள் முத்துக்குமாரசாமி ஒருங்கிணைத்தனர். தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்ற தோழர்கள் மாநிலம் முழுவதும் இருந்து கலந்து கொண்டனர்.

நமது மக்கள் இசை பாடகர்கள் அறந்தை பாவா, புதுச்சேரி ஆதிராமன், நீடாமங்கலம் சந்திரசேகர், திருச்சி பாரதி குழுவினர், அமலபுஷ்பம், கணேசன், கண்மணி ராசா, ஆசிரியர் மகாலட்சுமி உள்ளிட்டோர் அரங்கத்தை மக்கள் இசை பாடல்களால் அலங்கரித்தனர்.

மாலையில் நடைபெற்ற மக்கள் கலை விழாவில் கைலாசமூர்த்தி அவர்களின் நினைவாக செயல்படும் சகா கலைக்குழு, அறந்தை பாவா, திருச்சி பாரதி கலைக்குழு, புதுச்சேரி ஆதிராமன், நீடாமங்கலம் சந்திரசேகர், தோழர் அமலபுஷ்பம்,தோழர் மதியழகனின் நிஜ நாடகங்கள், தோழர் லட்சணப் பெருமாளின் சிந்தனையும், நகைச்சுவையும், அரசியல் கலந்த உரை என விடிய விடிய கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. சாத்தூர் நகர மன்ற சேர்மன் குருசாமி துவக்கி வைத்தார். கடற்கரை ராஜ் முன்னிலை வகித்தார். ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு நிகழ்வை கண்டுகளித்தனர்.

மக்கள் கலை விழாவை மாநில துணைத்தலைவர் கண்மணி ராசா, நித்தியா, நாகா ஒருங்கிணைத்தனர். நிகழ்ச்சி ஏற்பாடுகளை செயற்குழு உறுப்பினர் நவநீதகிருஷ்ணன், மாநிலக் குழு உறுப்பினர் ராமசுப்பிரமணியன் சிறப்பாக செய்திருந்தனர்.

## நூல் திறனாய்வு

ஒய்.எம்.சி.ஏ பட்டிமன்றம் மற்றும் தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் சென்னை மாவட்டக்குழு சார்பில் மாதாந்திர நூல் திறனாய்வு அரங்கம் தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் சென்னை மாவட்ட செயலாளர் முனைவர் கணபதி இளங்கோ தலைமையில் நடைபெற்றது.

கவிஞர் சி. சுந்தரமூர்த்தி எழுதிய மார்க்சிய நோக்கில் சங்க இலக்கியம் என்ற நூலை முனைவர் பெ. அண்ணாதுரை தமிழ்ப் பேராசிரியர், தாகூர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி அவர்கள் திறனாய்வு செய்தார். தமிழகத்தில் வேதக் கல்வி வரலாறு என்ற முனைவர் சி. இளங்கோ எழுதிய நூலை பேராசிரியர் இரா. முருகன் தமிழ்ப் பேராசிரியர், பச்சையப்பன் கல்லூரி அவர்கள் திறனாய்வு செய்தார்.

ஒய். எம். சி. ஏ. பட்டிமன்ற செயலாளர் முனைவர் ப. தாமரைக் கண்ணன் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். நூலாசிரியர்கள் ஏற்புரை நிகழ்த்தினர். கவிஞர் பு.சீ. கிருஷ்ணமூர்த்தி நன்றி கூறினார்.

### கவிஞர் இரவீந்திர பாரதி எழுதிய

## 'அறம் வளர்த்த அதியமான்' புதினம் வெளியீடு

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம், தர்மபுரி மாவட்டக் குழு சார்பில் கவிஞர் இரவீந்திர பாரதி எழுதிய, அறம் வளர்த்த அதியமான், எனும் வரலாற்று புதினம் வெளியீட்டு விழா மற்றும் கருத்தரங்கம் அரூர் மகாலட்சுமி கூட்ட அரங்கில் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு மாவட்டச் செயலாளர் கே.சின்னக்கண்ணன் தலைமையேற்றார். திருப்பூர் நாடாளுமன்ற உறுப்பினர் கே.சுப்பராயன் நூலை வெளியிட, அரூர் தொழிலதிபர் முத்து ராமசாமி மற்றும் மேனாள் நாடாளுமன்ற உறுப்பினர், தகடூர் புத்தகப் பேரவையின் செயலாளர் மருத்துவர் இரா.செந்தில் நூலை பெற்றுக்கொண்டனர்.

நூலை வெளியிட்டு கே.சுப்பராயன் பேசும்போது தமிழகத்தின் தொன்மை அதன் பண்பாட்டுச் சிறப்பினை எடுத்துக்கூறி அதியமான் வரலாறு நாவலின் எவ்வாறு கட்டமைக்கப்பட்டுள்ளது என்பதை தனக்கே உரிய பாணியில் அழகுற எடுத்துரைத்தார்.

நாவலை பெற்றுக் கொண்ட மருத்துவர் இரா.செந்தில், தொழிலதிபர் முத்து ராமசாமி ஆகியோர் வாழ்த்தி பேசினர்.

கலை இலக்கியப் பெருமன்ற மாவட்ட தலைவர் நடிகர் சிங்காரவேலன், த. ஈஸ்வரன், எ.கொ.அம்பேத்கர், கவிஞர் ஆதிமுதல்வன், கவிஞர் சாகுல் ஹமீது, ச.வரதராஜலு, தகடூர் புத்தகப் பேரவை நிர்வாகிகள் இரா.சிசுபாலன், ஆசிரியர் இ.தங்கமணி, சிபிஐ மாவட்ட செயலாளர் எஸ். கலைச்செல்வம், எழுத்தாளர் அனுராதா, சேலம் மாவட்டச் செயலாளர் கே.வி.ராஜேந்திரன், அ.வை.சாமிகண்ணு ஆகியோர் வாழ்த்தி பேசினர்.

மாநில பொதுச் செயலாளர் மரு.த.அறம், மாநில தலைவர் எஸ்.கே. கங்கா ஆகியோர் பண்பாட்டுச் சவால்கள் பற்றியும், இலக்கியத்தின் தேவை பற்றியு,ம் அது சமூக மாற்றத்திற்கு எந்த வகையில் பங்காற்ற முடியும் என்பதையும் விளக்கிப் பேசினர்.

முன்னதாக இரா.நடராஜன் வரவேற்புரை வழங்கினார். கவிஞர் இரவீந்திரபாரதி ஏற்புரை ஆற்றினார். பொருளாளர் வீரபத்திரன் நன்றி கூறினார்.

## வேதாரண்யத்தில் வாங்க பேசலாம் இலக்கிய அமர்வு

நாகை மாவட்டம்,வேதாரண்யத்தில் தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் சார்பில் வாங்க பேசலாம் கலை இலக்கிய அமர்வு நடைபெற்றது. முன்னாள் மாவட்டச் செயலாளர் புலவர் அரு. கந்தசாமி தலைமை வகித்தார். மாநிலக்குழு உறுப்பினர் எம். ஆர். சுப்பிரமணியன், மாவட்டத் தலைவர் புயல் சு. குமார், மாவட்டச் செயலாளர் தென்னடார் அம்பிகாபதி, கிளைத் தலைவர் இள. தொல்காப்பியன், செயலாளர் தங்க. குழந்தைவேலு, துணைத் தலைவர் த. சுகன்யா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விழாவில், தேத்தாக்குடி என். காசிராஜன், மதுமிதா ஆகியோர் பெண்ணியப் பாடல்களை பாடினர். முதல் வகுப்பு மாணவன் அருட்பிரகாஷ் திருக்குறள் பதிவு செய்தார். கவிஞர்கள் புவனேஸ்வரி, சௌமியா, சுதா ஆகியோர் கவிதைகள் வாசித்தனர். மணிப்பூர் சம்பவத்தை மையப்படுத்தி பெண்ணிய ஓவியங்களை வரைந்தளித்த செல்வி அமிதா, நித்தியா ஆகியோர் பாராட்டப்பட்டனர்.

நிகழ்ச்சியில், கவிஞர் சு. வெற்றிச்செல்வன், அமைப்பின் மாவட்ட துணைத் தலைவர் பார்த்தசாரதி, பேராசிரியர் ஏ. மாரிமுத்து, வழக்குரைஞர் மா. வைரமணி, ஆசிரியர்கள் மா. மோகனசுந்தரம், செந்தில்நாதன், அமிர்தலிங்கம், வீ. சத்யராஜ், சமூக ஆர்வலர் எஸ். வசந்தி செல்வகுமார், நல்லாசிரியர்கள் வீ. வைரக்கண்ணு, எஸ். செல்வராசு, கவிஞர்கள் வீ. கார்த்திகேயன், மாதவன் உள்ளிட்டோர் பங்கேற்று பேசினர்.

### ராகுல் மீதான தண்டனை நிறுத்திவைப்பு

## உச்சநீதிமன்ற தீர்ப்புக்கு சி.பி.ஐ. மாநிலக்குழு வரவேற்பு

ராகுல் காந்தி மீதான தண்டனையை நிறுத்திவைத்த உச்ச நீதிமன்ற தீர்ப்பை வரவேற்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

காங்கிரஸ் கட்சியின் முன்னணி தலைவர் ராகுல் காந்தி 2019 ஆம் ஆண்டு தேர்தலில் கர்நாடக மாநிலத்தில் பிரச்சாரப் பொதுக் கூட்டத்தில் பிரதமர் மோடி குறித்து கூறிய கருத்தை, குஜராத் பாஜகவினர், திரித்து, வழக்காக பதிவு செய்து சூரத் கீழமை நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை நடத்தி, அவருக்கு இரண்டு ஆண்டுகள் சிறை தண்டனையும், ரூ 15 ஆயிரம் அபதாரமும் விதிக்கும் உத்தரவு பெற்றனர். இந்த அநியாய உத்தரவு வழங்கிய நீதித்துறை நடுவருக்கு பதவி உயர்வு வழங்கி கொண்டாட முனைந்ததை உச்ச நீதிமன்றம் தலையீட்டால் தடுக்கப்பட்டது.

கீழமை நீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்து ராகுல் காந்தி, குஜராத் உயர் நீதி மன்றத்தில் செய்த மேல்முறையீடு கடந்த ஜூலை 7 ஆம் தேதி தள்ளுபடி செய்யப்பட்டது. அவருக்கு வழங்கப்பட்ட தண்டனை சரியானது என்ற கருத்து கடமைக்கப்பட்டது.

இந்த நிலையில் ராகுல் காந்தி உச்சநீதி மன்றத்தில் முறையிட்டு நியாயம் கோரினார். அவரது முறையீட்டை விசாரித்த உச்சநீதி மன்றம் "ராகுல் காந்திக்கு விசாரணை நீதிமன்றம் (சூரத் கிழமை நீதிமன்றம்) கடந்த மார்ச் 23 ஆம் தேதி வழங்கிய 2 ஆண்டுகள் சிறை தண்டனை, ரூ 15 ஆயிரம் அபதாரம் என்ற தண்டனைக்கு தடை விதித்துள்ளது. இந்த உத்தரவு தனி நபரின் உரிமைக்கு மட்டும் பாதகமாக அமையவில்லை. தொகுதி மக்களின் தேர்ந்தெடுக்கும் உரிமையினையும் பாதித்துள்ளது" என்ற கருத்தையும் வெளியிட்டுள்ளது. இதன் மூலம் சூரத் கீழமை நீதிமன்றம் தனது அதிகார எல்லை தாண்டி, அதன் எதிர்விளைவுகள் குறித்து கருத்தில் கொள்ளாது, ஒரு சார்பு நிலையில் நின்று, யாருடைய விருப்பத்தையோ நிறைவேற்ற முனைந்துள்ளது. நீதி மன்ற வரலாற்றில் சூரத் கீழமை நீதிமன்றம் ஏற்படுத்திய களங்கத்தை உச்ச நீதிமன்றம் துடைத்து தூய்மைப்படுத்தியுள்ளது. இந்த வரலாற்று சிறப்பு வாய்ந்த தீர்ப்பை வரவேற்பதுடன் ராகுல் காந்தி மீண்டும் நாடாளுமன்ற உறுப்பினராக மக்களவையில், வயநாடு தொகுதி மக்கள் பிரதிநிதியாக செயல்படுவதை தேர்தல் ஆணையம் உறுதி செய்ய வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு கேட்டுக் கொள்கிறது என்று அவர் தெரி வித்துள்ளார்.

JANASAKTHI Tamil Weekly Phone: 044 - 28480201
Day of Publication: Every Thursday
Regd. No. TN / CH (C) / 551 / 2021-2023
WPP No: TN / PMG (CCR) /WPP/596/ 2021-2023
Posted on 12.08.2023 at Egmore RMS 1 / Patrika Channel.
Registered with Registarar of Newspapers for India, Under Regd No: 1222/57

# சமத்துவத்துக்கான ‘இந்தியா’



டி. ராஜா




**இந்தியா**
**I-N-D-I-A**
**Indian National Developmental Inclusive Alliance**

“அரசியலில் சமத்துவமும் சமூக மற்றும் பொருளாதார வாழ்க்கையில் சமத்துவமின்மையும் இருக்கும்“ என்று இந்தியா குடியரசாக மாறிய நேரத்தில் பி ஆர் அம்பேத்கர் எச்சரித்தார்.

நம் காலத்தில் இந்த முரண்பாடுகளை நாம் எதிர்கொள்கிறோம். சமத்துவம் என்ற கருத்து அரசியல், சமூகம் மற்றும் பொருளாதாரத்தில் சமத்துவம் என்ற கோட்பாடு இப்போது பெரும் தாக்குதலுக்கு உட்பட்டுள்ளது. நரேந்திர மோடி தலைமையிலான பாஜக அரசு, அரசியல், சமூக மற்றும் பொருளாதார ஒழுங்கில் சமத்துவமில்லை என்பதை மென்மேலும் உறுதிப்படுத்தி வருகிறது. சமத்துவமின்மை எல்லாத் துறைகளிலும் வெளிப்படுகிறது.

இந்தியாவின் மதச்சார்பற்ற ஜனநாயக நலன் மீதான தாக்குதலை எதிர்த்து தோற்கடிக்க, அனைத்து மதச்சார்பற்ற ஜனநாயக சக்திகளும் ஒன்றுபட வேண்டும் என்பதை வரலாறு வலியுறுத்துகிறது.

புதிதாக உருவாக்கப்பட்ட இந்திய தேசிய வளர்ச்சி உள்ளடக்கிய கூட்டணி (இந்தியா) என்பது ஆர்எஸ்எஸ்பிஜேபியின் பிளவுபடுத்தும் மற்றும் சலுகை சார்ந்த முதலாளித்துவ ஆட்சிக்கு, ஒரு மதச்சார்பற்ற, ஜனநாயக மற்றும்



## பிரிவினை விதைக்கும் பாஜக

முற்போக்கான மாற்றாகும். மதச்சார்பற்ற ஜனநாயக சக்திகள் ஒன்றிணைவதால் கொந்தளித்து, ஆர்எஸ்எஸ் கட்டுப்பாட்டில் உள்ள சங்கப் பரிவாரங்களும் அதன் துணை அமைப்புகளும், இந்த புதிய கூட்டணி பழித்தும் இழிவுபடுத்தியும் அவதூறுகளைப் பொழிந்து வருகின்றன.

அதற்கு பிரதமர் மோடி தலைமை தாங்கி, கிழக்கிந்திய கம்பெனியுடன் கூட்டணியை ஒப்பிட்டு பேசினார். கிழக்கிந்திய கம்பெனியையும் அதன் வழித்தோன்றலான பிரிட்டிஷ் அரசையும், தேசபக்த, இடதுசாரி சக்திகள் நாட்டை விட்டு விரட்டியடித்த வரலாற்றை அவர் வேண்டுமென்றே மறந்துவிட்டார். காலனித்துவ ஆட்சிக்கு எதிராக நாடு போராடியபோது ஆங்கிலேயர்களுக்கு யார் சேவை செய்தார்கள் என்பது அவருக்கும் மற்ற அனைவருக்கும் தெரியும் என்பதால் அவருக்கு மறதி அவசியமாகத் தேவைப்படுகிறது.

ஒன்பது ஆண்டுகால பாஜக ஆட்சி முழுக்க முழுக்க தவறான பாதையில் அரசாங்கத்தைநடத்தியது.பணமதிப்பிழப்பு போன்ற தீச்செயல்களால் ஒவ்வொரு துறையும் பாதிக்கப்பட்டு, நாட்டின் பொருளாதாரம் தேக்கமடைந்துள்ளது. கூட்டாட்சி முறைமைக்கு எதிரான ஜிஎஸ்டி வரியால் சிறு குறு தொழில் மற்றும் அமைப்புசாராத துறை பெரிதும் பாதிக்கப்பட்டது. பொருளாதாரத்தின் தவறான மேலாண்மை வேலையின்மை நெருக்கடிக்கு வழிவகுத்தது.

கோவிட்19 நெருக்கடியை தவறாகக் கையாண்டது அதை ஒரு பேரழிவாக மாற்றியது. சமூகத்துறையைப்புறக்கணித்த மோடி, கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு நன்மைகளைப் பொழிந்ததால் சமத்துவமின்மை அதிகரித்துள்ளது. மக்களுக்கு விரோதமாக அரசுக் கொள்கைகள் கட்டமைக்கப்பட்டதால் தான், கடந்த ஒன்பது ஆண்டுகளில் பணக்காரர்களின் செல்வம் பன்மடங்கு அதிகரித்திருக்கிறது. கல்வி, சுகாதாரம், வேலைவாய்ப்பு ஆகியவைசாமானியர்களின் கைக்கு எட்டாமல் போய்விட்டதால், சமூகத்தின் அனைத்துத் தரப்பு மக்களும் ஆட்சேபனை தெரிவித்து வருகின்றனர்.

அதிகார ஆசையில் இந்திய சமூகத்தை மதம், ஜாதி, மொழி, பிரதேசம் என்று பிரித்து வைத்துள்ளது பாஜக.

இந்த அரசியலின் விளைவுகள் நாடு முழுவதும் வெளிப்பட்டுள்ளன. மிக அண்மையில் மணிப்பூர் மாநிலம் முழுவதும் எரிந்தது. அரசாங்கத்தை விமர்சிக்கும் குரல்கள் கொடூரமான சட்டங்களைப் பயன்படுத்தி அடக்கப்படுகின்றன. ஜனநாயக விழுமியங்கள் மற்றும் நெறிமுறைகளில் பொதுவான சரிவு உள்ளது. நம் நாட்டில் ஜனநாயகம் உயிர்வாழ முடியுமா என்பது நம் முன் உள்ள மிக முக்கியமான கேள்வியாக மாறியுள்ளது. ‘இந்தியா’ கூட்டணியின் உருவாக்கம் இந்தப் பின்னணியில் பார்க்கப்பட வேண்டும்.

நமது அரசியல் சாசனத்தின் விழுமியங்கள் காலில் போடப்படுவதை எதிர்க்கட்சிகளின் ஒற்றுமையால் மட்டுமே தடுத்து நிறுத்த முடியும் என்பது நீண்டகாலமாக உணரப்பட்டு வந்தது. மத்தியில் பாஜக வெற்றி பெற்றிருப்பது வெறும் ஆட்சி மாற்றம் மட்டுமல்ல, நாட்டின் அரசியலமைப்பு கட்டமைப்பை சீர்குலைக்கும் ஒரு குண மாற்றம் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கருத்து தெரிவித்தது.

மதச்சார்பற்ற, ஜனநாயக மற்றும் தேசபக்தி சக்திகள் ஒன்றிணைந்து பாஜகவை அரசியல் ரீதியாகவும், கருத்தியல் ரீதியாகவும் எதிர்கொள்ள வேண்டும் என்ற கருத்தை நாங்கள் பலமாக வலியுறுத்தி இருக்கிறோம். இருப்பினும், இந்துத்துவா அரசியலுக்கான மாற்று ஆர்எஸ்எஸ்பாஜக அரசியலில் இருந்து முற்றிலும் மாறுபட்டதாக இருக்க வேண்டும்.

மதச்சார்பற்ற ஜனநாயக சக்திகளின் கூட்டணி வாக்குகள் பிரிந்து போவதைத் தடுப்பது மட்டுமல்ல, சமூகத்தின் அனைத்துப்பிரிவினரின் குரலாக மாறுவதன் மூலம் பாஜகவின் ‘பெரும்பான்மை’ அரசியலை எதிர்கொள்ளவும் முடியும். அந்தக் கூட்டணியில் உள்ள கட்சிகள் இடையே சிறந்த புரிந்துணர்வையும், பரஸ்பர நம்பிக்கையையும் வளர்ப்பதற்கு ஒருவருக்கொருவர் நலன்களுக்கு இடமளிக்க வேண்டும். பாஜகவை தோற்கடிக்க தேசிய அளவிலான ஒற்றுமை உருவாகியுள்ளது. மாநில அளவில் சிவன் தன்மையை கொடுத்து அங்கங்க தீர்வுகள் எட்டப்பட வேண்டும்.. இந்திய தேசிய காங்கிரஸ், தேசம் தழுவிய அமைப்பாக இருப்பதால், இந்த விஷயத்தில் அதற்கு தனிப் பொறுப்பு உள்ளது.

இவற்றுக்காக ஜூன் மாதம் பாட்னாவில் 15 அரசியல் கட்சிகளின் தலைவர்கள் கலந்து கொண்ட கூட்டம் நடந்தது. பெங்களூரு கூட்டத்தில் 26 கட்சிகள் கலந்து கொண்டன. இந்த கூட்டணிக்கு, இந்திய தேசிய வளர்ச்சி உள்ளடக்கிய கூட்டணி, (அதாவது ஐஎன்டிஐஏ இந்தியா) என பெயரிட முடிவு செய்யப்பட்டது. பெங்களூருவில் இந்தியா சந்தித்த அதே நாளில், செயலிழந்த தேசிய ஜனநாயகக் கூட்டணியின் (என்.டி.ஏ) கூட்டத்திற்கு பிரதமர் மோடி அழைப்பு விடுத்தபோது, ஒற்றுமைப் பயிற்சி பாஜகவை எச்சரிக்கையாக ஆக்கியது. அதுவரை “அனைத்துமே தனிநபரிடம்“ என்று முழங்கிய பிஜேபி, 37 அரசியல் கட்சிகளுடன் கைகோர்க்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

பிரித்தானிய காலனித்துவத்திலிருந்து போராடி நாட்டை விடுவித்த செழுமையான பாரம்பரியம் இந்தியா கூட்டணியில் உள்ள கட்சிகளுக்கு உண்டு. இந்த சக்திகள் பொதுத்துறையை உருவாக்கி முன்னிறுத்தி, நம் நாட்டை தன்னிறைவு அடையச் செய்தன. சமூகப் பாகுபாடு, பேரினவாதம், கூட்டாட்சி முறைமையை சீர்குலைப்பது என்ற தீமைபயக்கும் அரசியலுக்கு எதிரான போராட்டத்தில், இந்தியா கூட்டணி கட்சிகள் முன்னணி பாத்திரங்களை வகித்தன. இந்த சக்திகள் தொழிலாளர்கள், விவசாயிகள், மாணவர்கள் மற்றும் இளைஞர்களின் நம்பிக்கையைப் பெற்றுள்ளன.

நமது சுதந்திர இயக்கத்தின் தலைவர்கள் வலுவான, அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் இணக்கமான நாட்டை வளர்த்தெடுக்கக் கருதினர். சமூக, பொருளாதார, அரசியல் நீதி அதன் அடித்தளமாக இருக்க வேண்டும். இந்தக் கருத்தை ஆர்எஸ்எஸ் எதிர்க்கிறது. இது வகுப்புவாத பிளவுகள், சாதிய படிநிலைகள் மற்றும் பாலின அடக்குமுறையை ஊக்குவிக்கிறது. வெறுப்பிலிருந்து நாட்டை விடுவித்து நல்லிணக்கத்தை ஏற்படுத்தவே இந்தியா கூட்டணி உதயமானது. நாம் வெற்றி பெறுவோம்.

**இந்தியன் எக்ஸ்பிரஸ் ஆங்கில நாளிதழில் இருந்து தமிழில் டி.எம்.மூர்த்தி**

# பெட்ரோல் விலை நிர்ணயம் அறிவோம்!

உலகபெரும் தொற்று காலமான 2020 ஏப்ரல் மாதம் சர்வதேச அளவில் கச்சா எண்ணெயின் விலை பெரும் வீழ்ச்சி அடைந்தது ஆனால் அதற்கு ஏற்ற விதத்தில் இந்தியாவில் விலை குறையவில்லை அதற்கு பதிலாக ஒன்றிய அரசு செஸ் அதாவது தீர்வை வரியை பலமுறை உயர்த்தி விட்டது

கடந்த 202122 ஆண்டில் ஒரு பீப்பாய் கச்சா எண்ணெய் 100 அமெரிக்க டாலராக உயர்ந்தது இன்று 80.67 டாலராக இருந்து வருகிறது. 2022 ஒன்றிய அரசு ஏற்கனவே விதித்த தீர்வை வரியில் இருந்து பெட்ரோலுக்கு 8 ரூபாயும் டீசலுக்கு 6 ரூபாயும் குறைத்தது ஆனாலும் முந்தைய 2014 இல் விதித்த வரி அளவிற்கு அதனை குறைக்கவில்லை இதனால் கடந்த 444 நாட்களாக எந்தவித விலை ஏற்ற இறக்கும் இன்றி பெட்ரோல் டீசலின் விலை தொடர்ந்து அப்படியே நீடிக்கிறது.

ரஷ்ய உக்ரைன் போரால் இந்தியாவிற்கு சலுகை விலையில் கச்சா எண்ணெய் கிடைத்து வருகிறது. ஒரு லிட்டர் ரஷ்ய கச்சா எண்ணெய் 40 ரூபாய்க்கு இறக்குமதி செய்யப்படுகிறது சுத்திகரிப்புக்கு ஆகும் செலவு பெட்ரோலுக்கு 7.35 ரூபாய் டீசலுக்கு 8.15 ரூபாய் எதிர்கால பணவீக்க தாக்குதலை குறைக்க லிட்டருக்கு 10 ரூபாய் பெட்ரோல் டீசலுக்கு விதிக்கப்படுகிறது. இதன் பிறகான பெட்ரோலின் விலை 57.35 ரூபாய், டீசலின் விலை 58.15 ரூபாய். ஒன்றிய அரசின் வரி பெட்ரோலுக்கு ரூ 19.90, டீசல் மீது ரூ15.80 பங்கு உரிமையாளர்கள் கமிஷன் பெட்ரோலுக்கு ரூபாய் 3.80 பைசா டீசலுக்கு ரூபாய் 2.60 பைசா. ஆக மொத்தம் பெட்ரோல் விலை லிட்டருக்கு ரூபாய் 81.05 டீசலுக்கு ரூபாய் 76.55 ஆக உள்ளது அதன் பிறகு தான் மாநில அரசுகளின் வாட் மற்றும் விற்பனை வரிகள் விதிக்கப்படுகின்றன

கடந்த 2017 ஆம் ஆண்டுக்கு பிறகு பெட்ரோலில் 10%கரும்பு கழிவிலிருந்து எடுக்கப்படும் எத்தனால் கலக்கப்படுகிறது இது சுற்றுச்சூழலுக்கு உகந்தது என்றும் அரசு கூறுகிறது. ஒரு லிட்டர் எத்தனால் ரூபாய் 63.50 பைசா. இதன்படி காருக்கு 30 லிட்டர் பெட்ரோல் போட்டால், அதில் 27 லிட்டர் பெட்ரோல் 3 லிட்டர் எத்தனால். ஆனால் 30 லிட்டருக்கும் பெட்ரோல் விலையே வாங்கப்படுகிறது இதன் மூலம் திட்டமிட்டு அறிவியல் பூர்வமான கொள்ளை ஒன்று நடக்கிறது.

Janasakthi Tamil Weekly Published by **R. Mutharasan** and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliye Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: **K.Subbarayan .,**
Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by **A.Sivakumar** at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.